Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி


சுடர் : 36 கதிர் : 038 | ஞாயிற்றுக்கிழமை | மார்கழி 19 ஆம் நாள் 03 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16+24 விலை : ரூ.40

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# ஜெனீவாத் தீர்மானத்தை இம்முறை தோற்கடிப்போம்

## கோத்தா அரசு மிரட்டல்



கொழும்பு, ஜனவரி 3

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து இலங்கை அரசு கடந்த வருடம் விலகிவிட்டது. எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் போர்க்குற்றங்கள் தொடர்பிலோ அல்லது சர்வதேச விசாரணை தொடர்பிலோ இலங்கை அரசு அலட்டிக்கொள்ளாது. புதிய பிரேரணை எம்மீது திணிக்கப்பட்டால் அதையும் எதிர்கொண்டு வலுவிழக்கச் செய்ய நாம் தயாராக இருக்கின்றோம். 15

குற்றமிழைக்கவில்லையெனின்

## சர்வதேச விசாரணைக்கு ஏன் நடுங்குகின்றீர்கள்?

யாழ்ப்பாணம், ஜன. 3

உங்கள் படைகள் போர்க்குற்றம் ஏதும் இழைக்கவில்லை என்று நீங்கள் கூறுவது உண்மை என்றால், சர்வதேச விசாரணைகளைக் கண்டு அஞ் 15

## வங்கிக்கு வந்து சென்ற சிப்பாய்க்கு கொரோனா

*அச்சுவேலி ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்*

யாழ்ப்பாணம், ஜன. 3

தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக் கிளை அலுவலர்கள் சகலரும் நேற்று தனிமைப்படுத்தப்பட்ட 15




மருதனார்மட

## வியாபாரிகள் 20பேர் பி.சி.ஆர். சோதனைக்கு முன்வரவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 3

மருதனார்மடம் சந்தைக் கொத்தணியை அடுத்து சந்தை வியாபாரிகள், அந்தப் பகுதியைச் சூழவுள்ள வர்த்தகர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். சோதனைக்கு உட் 15

புதிய அரசமைப்பில்

## எங்கள் கருத்துக்களை ஒப்புக்கே கேட்கின்றீர்கள்

விக்னேஸ்வரன் நெத்தியடி

யாழ்ப்பாணம், ஜன. 3

சிங்களவர்களுக்குச் சார்பாக புதிய அரசமைப்பை இயற்றிவிட்டு பொதுமக்களிடம் கருத்துக் கேட்பதாக பாசாங்கு செய்து, இறுதியில் முன்னர் தயாரித்த வரைவை வெளியிடுவதே 13

## 'உதயன்' மீதான வழக்கு சிறுபிள்ளைத்தனமானது!

கண்டிக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, ஜன. 3

ஜனநாயகத்தின் தூண்களாக இருக்கும் ஊடகங்கள் மீது வழக்குத் தாக்கல் செய்வது சிறு பிள்ளைத்தனமானது. விமர்சனங்களை எதிர்கொள்ள 15



## புத்தாண்டு வழிபாட்டுக்கு சென்றவர் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், ஜன. 3

புத்தாண்டு வழிபாட்டுக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த 15

## 10 உணவுப் பொருள்களின் விலையை தளம்பலில்லாது பேணுவதற்கு அரசு முடிவு!!

கொழும்பு, ஜன. 3

இலங்கையில் 10 அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான விலையை தளம்பல் இல்லாமல் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். 15

## காரைநகர் எம்.ஓ.எச்சுக்கு தொலைபேசியில் மிரட்டல்

யாழ்ப்பாணம், ஜன. 3

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரியை (எம்.ஓ.எச்.) கடந்த சில தினங்களாக இனந்தெரியா 15

## மாணவிகளுக்கு இலவச 'நப்கின்'

கொழும்பு, ஜன. 3

தரம் 6 மற்றும் அதற்கு மேல் படிக்கும் அனைத்து பாடசாலை சிறுமிகளுக்கும் இலவச சுகாதார 'நப்கின்களை' வழங்க அரசு திட்டமிட்டுள்ளது என்று கல்வி அமைச்சுத் தகவல்கள் தெரி 15

தனியார் கல்வி நிலையங்கள்

## விரைவில் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 3

பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்ட பின்னர், தனியார் கல்வி வகுப்புகளை 13

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

# அரசமைப்பு சட்டவரைவு இந்த வருடம் வந்துவிடும்

அரசதரப்பு நம்பகமான தகவல்

**கொழும்பு, ஜன. 3**

**புதிய அரசமைப்பு தொடர்பான சட்டவரைவை இந்தவருடம் நாடாளுமன்றில் முன்வைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

புதிய அரசமைப்புக்கான யோசனைகள் அடங்கிய வரைவு நகலை முன்வைப்பதற்காக அரசு நிபுணர்கள் குழுவொன்றை அமைத்திருந்தது. மேற்படி குழு பொதுமக்கள் உட்பட அனைத்து தரப்பினரிடமும் மின்னஞ்சல் மற்றும் பதிவுத்தபால் மூலம் கருத்துகளைக் கோரியிருந்தது. பல தரப்பினரும் யோசனைகளை முன்வைத்திருந்தனர்.

இந்தக்குழுவின் யோசனை எதிர் வரும் மார்ச்சில் அரசிடம் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்பின்னர் புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான சட்டவரைவு தயாரிக்கப்பட்டு, அமைச்சரவை அனுமதி உட்பட சட்ட பூர்வமான ஏற்பாடுகள் பூர்த்தியான பின்னர் நாடாளுமன்றில் முன் வைக்கப்படும். தனது இரண்டாவது பதவிக்காலம் முடிவடைவதற்குள் புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி இந்த வருடத்துக்குள் புதிய அரசமைப்பு இயற்றப்படும் எனவும் அறியமுடிகின்றது. சர்வ ஜன வாக்கெடுப்புக்குச் செல்லாத வகையில் புதிய அரசமைப்பை இயற்றுவதே அரசின் திட்டமாக இருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (மத-44)

## போர்க்குற்றம் நிகழவில்லை ஜெனிவாவிலும் நிரூபிப்போம்

இரண்டு அறிக்கைகளை முன்வைக்க அரசு தயார் என்கிறார் அமைச்சர் வீரசேகர



கொழும்பு, ஜன. 3

இலங்கையில் போர்க் குற்றங்கள் இடம்பெறவில்லை என்பதை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் உரிய சாட்சியங்களுடன் இந்தமுறை நிரூபிப்போம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் 2021ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மார்ச் 19ஆம் திகதிவரை நடைபெறும் குறித்த கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது என்று இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

இந்திநிலையில் மேற்படி கூட்டத்தொடர் தொடர்பில் விவரிக்கையிலேயே சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் எந்தவொரு குற்றச்சாட்டுக்கும் உரிய பதிலை வழங்குவதற்கு அரசு தயாராகவே இருக்கின்றது. இலங்கை இராணுவம் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை. தீவிரவாதிகளின் பிடிக்குள் சிக்கியிருந்த மக்களை மீட்பதற்காக மனிதாபிமான நடவடிக்கையிலேயே ஈடுபட்டது. உரிய சாட்சிகளுடன் இதனை நிரூபிப்போம்.

நல்லிணக்க ஆணைக் குழு மற்றும் பரணகம ஆணைக்குழு ஆகியனவற்றின் அறிக்கைகளை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், தாருஷ்மன் குழு மற்றும் மனித உரிமை ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் ஆகியோர் இடமளிக்கவில்லை. இந்தமுறை இந்த இரு அறிக்கைகளையும் முன்வைப்பதற்கு அரசு எதிர்பார்க்கின்றது. இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெறவில்லை என சாட்சியங்களுடன் சுட்டிக்காட்டுவதற்குத் தயார். சீனா, ரஷ்யா, கியூபா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிக்கவுள்ளன என்றார். (மத-44)

### தவறான முடிவெடுத்து நபரொருவர் உயிரிழப்பு

கொடிகாமம், ஜன. 3

குடும்பப் பிரச்சினை காரணமாக தவறான முடிவெடுத்த குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். சாவகச்சேரியில் நேற்றுமாலை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது.

சிவன் கோவிலடி சாவகச்சேரியைச் சேர்ந்த 37 வயதுடைய சண்முகவடிவேல் சுதாகரன் என்பவரே உயிரிழந்தவர். இவரின் இறப்புத் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-159)

## சவால்களைப் புரிந்துகொண்டு அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள்

அலுவலர்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள்



யாழ்.ஜன. 3

சவால்களை சரியாகப் புரிந்து கொண்டு மக்களின் அபிலாஷைகளை அடைந்துகொள்வதற்கு நேர்மையான அணுகுமுறையுடனும் உறுதிப்பாடு மற்றும் அர்ப்பணிப்புடனும் செயல்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

புதுவருட பணிகளை ஆரம்பிக்கும் நோக்கில் ஜனாதிபதி அலுவலகத்தின் ஊழியர்கள் அரச சேவைக்கான உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் வினைத்திறனானதும் பயனுறுதி வாய்ந்ததுமான அரச சேவைக்கு அனைத்து அரச ஊழியர்களும் நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்படவேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி இருந்த போதிலும், 15 லட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்களுக்கும், 6 லட்சத்துக்கும் மேற்பட்ட ஓய்வுபெற்றவர்களுக்கும் எந்தவிதமான குறைப்புகளும் இன்றி உரிய நேரத்தில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்கிய உலகின் ஒரே நாடு இலங்கையாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-இ)

### பயிலுநர்களுக்கு கொடுப்பனவு

கொழும்பு, ஜன. 3

ஒரு வருடப் பயிற்சியை நிறைவுசெய்த பட்டதாரி பயிலுநர்களுக்கு வழங்கப்படாதிருந்த கொடுப்பனவுகள் மீளவும் வழங்கப்படவுள்ளன.

பட்டதாரி பயிலுநர்களாக முதற்கட்ட நியமனம் பெற்றவர்களில் 43 பேர் கிழக்கு மாகாண சபை அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படாமை தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை கருணாகரனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அவரின் செயல்பாடாலும், முயற்சியாலும் பட்டதாரி பயிலுநர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கு திறைசேரியின் அனுமதி கிடைத்துள்ளது.

கொடுப்பனவுகள் மாகாண சபை ஊடாக வழங்குவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (ம-ரி5)

மருத்துவர்கள் பற்றாக்குறை

## சுகாதாரத் தேவைகளுக்காக தீவக மக்கள் பெருஞ்சிரமம்

**மருத்துவ நிபுணர் கல்பனா கவலை**

யாழ்ப்பாணம், ஜன. 3

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவுகின்ற காரணத்தால் தீவக மக்கள் சுகாதாரத் தேவைகளைப் பெறமுடியாத அவலம் ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ நிபுணர் கல்பனா சிறிமோகனன் கவலை தெரிவித்தார்.

மருத்துவமனையின் கதிரியக்கப்பிரிவு கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல்தான் நான் பணியாற்றி வருகின்றேன். 15 மருத்துவர்கள் இருக்கவேண்டிய ஊர்காவற்றுறை மருத்துவமனையில் 5 மருத்துவர்களே பணியாற்றுகின்றோம். கடல் கடந்த தீவுகளில் இருந்து மருத்துவச் சேவையை நாடி வருபவர்களுக்கு உரிய மருத்துவ வசதியை வழங்காது விடும்போது அவர்களின் நிலைகுறித்து நான் மிகுந்த கவலையடைகின்றேன். விரைவில் நானும் மாற்றலாகிச் செல்லவுள்ளேன். இனிவரும் காலத்திலாவது இங்குள்ள மக்கள் தம் மருத்துவத் தேவைகளை எந்தச் சிரமும் இல்லாமல் மேற்கொள்ள உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார். மருத்துவ அத்தியட்சகர் ப.தீலிபன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், பிரதேச செயலர், நலன்புரி சங்கத்தினர், ஊழியர்கள் சுகாதார நடைமுறைகளுடன் கலந்து கொண்டனர். (ம-159)

## கொரோனாச் சாவு 211ஆக அதிகரிப்பு

44 ஆயிரத்தைத் தாண்டியது தொற்றாளர்கள் எண்ணிக்கை

கொழும்பு, ஜன. 3

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் மூவர் பலியாகியுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்று அறிவித்துள்ளார்.

கொழும்பு 12ஐச் சேர்ந்த 76 வயதுடைய ஆண் ஒருவர் ஹோமாகம மருத்துவமனையில் நேற்று உயிரிழந்துள்ளார். அவரது சாவுக்கான காரணம் கொரோனாத் தொற்றுடன் கூடிய நிமோனியா நிலையாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 13 ஐச் சேர்ந்த 93 வயதுடைய பெண் ஒருவர் கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளார். அவரது சாவுக்கான காரணம் கொரோனாத் தொற்று தீவிரமடைந்தமையாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மருதானை பொலிஸ் பிரிவில் அடையாளம் காணப்படாத சுமார் 70 - 80 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளார். அவரது சாவுக்கான காரணம் கொரோனாத் தொற்று தீவிரமடைந்தமையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

# செவிடனின் காதில் ஊதிய சங்குபோல போராட்டங்கள்

## அரசு மனம் மாறவேண்டும் என்று வலியுறுத்துகின்றார் வினோ எம்.பி.

**வவுனியா, ஜன. 3**

**அனைத்துப் போராட்டங்களும் செவிடன் காதில் ஊதிய சங்குபோலத்தான் அமைந்திருக்கின்றன. இனியாவது அரச மனங்களில் மாற்றம் வரவேண்டும். என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோக ராதலிங்கம் வலியுறுத்தினார்.**

அரசியல் கைதிகளை விடுதலைசெய்யக் கோரி வவுனியாவில் நேற்று நடைபெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் என்ற உறுதிமொழியை கடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் காலங்களிலே தற்போதைய ஆட்சியாளர்கள் சென்ற இடங்களிலெல்லாம்கூறி தமிழ் மக்களின் வாக்குகளைக் கவரும் பரப்புரை உத்தியை முன்னெடுத்திருந்தனர். எனினும், வழமைபோல தமிழ் மக்களுக்கு துரோகத்தையே அரசு இழைத்துக்கொண்டிருக்கிறது.

தற்போது குட்டி ஜனாதிபதியாக செயற்பட்டுவருகின்ற நாமல் ராஜபக்சவும் அவ்வாறான உறுதிமொழிகளை வழங்கியிருந்தார். அவை அனைத்தும் காற்றில் பறந்த வாக்குறுதிகளாகவே மாறிவிட்டன.

**கைதிகள் இறந்தால் அரசுதான் பொறுப்பு**

தற்போது நாட்டில் கொவிட்-19 தாக்கத்தின் வேகம் அதிகரித்துள்ளது. மனிதாபிமானமான முறையிலாவது அரசியல் கைதிகள் விடுதலைசெய்ய வேண்டும். அவர்களின் உயிருக்கு அரசு உத்தரவாதம் வழங்கவேண்டும். தற்போது தொற்று வேகமாக பரவிக்கொண்டிருக்கிறது. அரசியல்கைதிகள் பலர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் அனைத்தும் செவிடனின் காதில் ஊதிய சங்கு போலத்தான் அமைந்திருக்கின்றன. இனியாவது அரச மனங்களில் மாற்றம் வரவேண்டும். கொவிட் தாக்கத்தால் அரசியல் கைதிகள் மரணத்தை சந்தித்தால் அதற்கு இந்த அரசே முழுமையான பொறுப்பு. உள்நாட்டு வெளிநாட்டு மனித உரிமை அமைப்புக்கள் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தவேண்டும். என்றார். (த-110.18)

## அரசியல் கைதிகளை மன்னித்து விடுவிக்கக்கோரி கவனவீர்ப்பு

வவுனியா, ஜன. 3

அனைத்து அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பு வழங்கி விடுதலைசெய்யுமாறுகோரி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டது.

வவுனியா மருத்துவமனைக்கு முன்பாக முற்பகல் 10 மணியளவில் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பே கிடையாதா?, கைதிகளை விடுதலைசெய், முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்காதே, காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டங்களுக்கு பதில் என்ன? என்றவாறு கோசங்களை எழுப்பினர். பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது;

முப்பது வருடங்களாக இனப்பிரச்சினை சம்பந்தமாக நடைபெற்ற போரில் அரசுக்கு எதிராக ஈடுபட்டார்கள் எனும் குற்றச்சாட்டில் நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டு தொடர்ச்சியாக பழிவாங்கப்பட்டு வருகிறார்கள்.

அரசியல் கைதிகள் மீதான வழக்குகள் போர் முடிவுற்று பதினொரு வருடங்கள் கடந்தும் விசாரணை செய்யப்படாமல் உள்ளன. இது அப்பட்டமான நீதிமுறுப்புச் செயற்பாடாகும்.

'காலம் தாழ்த்தி வழங்கப்படும் நீதி, நீதி மறுப்புக்குச் சமனாகும்' என்பதை அரசு கவனத்தில் கொண்டு அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனை இன்றி பொது மன்னிப்பளித்து விடுதலை செய்யுமாறு கோருகின்றோம்.

மக்கள் விடுதலை முன்னணிக்கு பொது மன்னிப்பு அழிக்கப்பட்டிருந்தது. பத்தாயிரம் வரையிலான முன்னாள் போராளிகளுக்கு மகிந்தவின் ஆட்சியில் பொது மன்னிப்பு அழிக்கப்பட்டிருந்தது. எனவே எஞ்சியுள்ளவர்களையும் அரசு விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

போராட்டத்தில் கட்சியின் முக்கியஸ்தர்களான, நி. பிரதீபன், டொன் பொஸ்கோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் மத்திய குழு உறுப்பினர்களான கே. அருந்தவராயா, ரேகன், நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மற்றும் புதிய அரச பொது ஊழியர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர். (த-110.18)

## வடக்கு சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளராக மருத்துவர் நந்தகுமாரன்

யாழ்ப்பாணம், ஜன. 3

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராக மருத்துவர் க.நந்தகுமாரன் இடமாற்றம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் கடந்த வியாழக்கிழமை அவர் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பிரதிப் பணிப்பாளராகவும் பின்னர் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் அதனைத் தொடர்ந்து வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் பணியாற்றிவந்த நிலையில், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்றுள்ளார். (த)

## மாகாண சபைத்தேர்தலை இழுத்தடித்தது சஜித் அணியே

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.3

மாகாண சபை தேர்தலைக் கடந்த காலத்தில் தொடர்ச்சியாக இழுத்தடிப்பு செய்து, பிற்போட்டு வந்த பெருமை தற்போது இருக்கின்ற எதிர்க்கட்சியையே சாரும் என்று இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் தெரிவித்தார்.

ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் வவுணதீவு பிரதேச செயலக பிரிவில் நடைபெற்றது. நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

2020 ஆம் ஆண்டு கொவிட் -19 போன்ற சோதனைகளைச் சந்தித்து இருந்தாலும், அந்த சவால்களுக்கு மத்தியிலும் நாட்டை கட்டியெழுப்புகின்ற வேலைத் திட்டத்தை அரசாங்கம் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. அத்துடன் தற்போது இருக்கின்ற அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை பிற்போடவோ அல்லது இழுத்தடிக்கவோ இல்லை. தற்போது நாட்டில் நிலவும் கொரோனா காரணமாக இத் தேர்தல் தொடர்பாகச் சிந்திக்கின்றது - என்றார். (ஜ-இ)

## நெருக்கமானவர்கள் என்பதற்காக உயர் பதவிகளை வழங்கக்கூடாது

சம்பிக்க ரணவக்க எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.3

அரச நிர்வாம், பொறுப்பு, தகுதிவாய்ந்த பொருத்தமான நபர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவ்வாறின்றி, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் தமக்கு நெருக்கமானவர்களை மாத்திரம் உயர் பதவிகளில் அமர்த்துவதன் மூலம் நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்ல முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டின் கடன்சுமை மற்றும் வெளிநாடுகளிடம் பெற்ற கடன்களை மீளச் செலுத்துவதில் காணப்படும் நெருக்கடி, மற்றும் பொருளாதார மந்தநிலை ஆகியவையும் நாட்டுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கின்றன.

அரச நிர்வாகத்தை, பொறுப்பு, தகுதிவாய்ந்த-பொருத்தமான நபர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவ்வாறின்றி, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் தமக்கு நெருக்கமானவர்களை மாத்திரம் உயர்பதவிகளில் அமர்த்துவதன் மூலம் நாட்டை முன்நோக்கிக் கொண்டு செல்ல முடியாது. மாறாக திறமையானவர்களிடம் நிர்வாகப்பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும்.

எனவே நாட்டுக்கு அவசியமான பலம்வாய்ந்த பொருளாதார மற்றும் சமூகக் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் எவ்வித பாகுபடுகளுமின்றி ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும் என்றார். (ப)

## வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் மரங்கள் தறித்தமையால் சிக்கல்

பிரதேச செயலகத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 3

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பழமைவாய்ந்த 6 மரங்கள் அனுமதி பெறாது தறித்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளனவென கல்லூரியின் பழைய மாணவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என்று சங்கானை பிரதேச செயலர் பிரேமினி தெரிவித்தார்.

தனியார் காணியில் மரங்களைத் தறிப்பதாயின் பிரதேச செயலகத்திடம் அனுமதிபெற்றவேண்டும். தங்களிடம் எந்தவித அனுமதியும் பெறாமலேயே மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன. தென்னிந்திய திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா கற்படையினரின் உதவியுடன் அவ்வாறு செயற்பட்டார் என்று குற்றஞ்சாட்டி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதால், அது பற்றி பேராயரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது என்றும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (த)

## இன்டர்போல் உதவியுடன் கடத்தல்காரர்கள் கைது!!

பேச்சு ஆரம்பம் என்கிறது இலங்கை

கொழும்பு, ஜன.3

வெளிநாடுகளில் தங்கியுள்ள இலங்கையின் போதைப்பொருள் கடத்தல்கார் களைக் கைதுசெய்ய இலங்கை அரசாங்கம் பல நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

ஏற்கனவே சில நாடுகளுடன் இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது எனவும் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

சந்தேகத்துக்குரியவர்களைக் கைது செய்ய இன்டர்போல் என்னும் சர்வதேச பொலிஸ் துறையின் மூலம் 18 சிவப்பு அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (ற-இ)

## சிறைச்சாலைக் கொத்தணி 4,087ஆக உயர்வடைந்தது

கொழும்பு, ஜன. 3

சிறைச்சாலைக் கொத்தணியில் நேற்றும் பலருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. அதற்கமைய மேலும் 71 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து இதுவரை சிறைச்சாலைக் கொத்தணியில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 87ஆக அதிகரித்துள்ளது. தொற்றாளர்களில் இதுவரை 3 ஆயிரத்து 347 பேர் குணமடைந்துள்ளனர் எனவும் சிறைச்சாலைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

# புதிய நோயாளிகள் உருவாக அரசே முழுப் பொறுப்பு

## சரத் பொன்சேகா எம்.பி குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 3

நாட்டில் புதிய நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றமைக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது;

அரசின் அசமந்தப்போக்கே நாட்டில் கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலை ஏற்படக் காரணம். அத்துடன் தொற்றின் இரண்டாவது அலை ஏற்படக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில், அரசு அதனை எதிர்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. எனினும், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறையினர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் உள்ளிட்ட தரப்பினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட போதிலும், அரசின் இயலாமை காரணமாக அதனைக் கட்டுப்படுத்த முடியாது போனது. இதேவேளை, மாகாண சபையை மீண்டும் செயற்பாட்டுக்குக் கொண்டுவருவதானது முட்டாள்த்தனமான விடயம். மாகாண சபைக்கு புதிய முகங்களையே மக்கள் எதிர்பார்க்கின்றனர் - என்றார். (ப)

## தாக்குதலில் நால்வர் காயம்

சாவகச்சேரி, ஜன.3

தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த இரண்டு பெண்கள் உட்பட நால்வர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளன.

நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த 27 வயதுடைய கணவனும், மனைவியும், சாவகச்சேரி கெருடாவில் வடக்கைச் சேர்ந்த 31 வயது ஆணும், 22 வயதுப் பெண்ணும் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## ஆள்மாறாட்டம் இளைஞன் கைது

திருகோணமலை, ஜன.3

திருகோணமலை பொது மருத்துவமனையில் திடீர் மரண விசாரணை அதிகாரி என ஆள்மாறாட்டம் செய்த இளைஞர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை, சல்லி சாம்பல்தீவு பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று திருகோணமலை துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர். (ப)

## பெற்றோலிய கூட்டுத்தாபன பிரதான காரியாலயம் பூட்டு

கொழும்பு, ஜன.3

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிராதான காரியாலயம் மற்றும் முத்துராஜவெல பிரிவு என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

அங்கு பணிபுரியும் ஊழியர் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முத்துராஜவெல எரிபொருள் சுத்திகரிப்பு பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டுள்ள நிலையில் அங்கு பணிபுரியும் அந்த ஊழியர் பரிசோதனை முடிவு கிடைக்கும் முன்பே காரியாலய கடமைக்குத் திரும்பி உள்ளார். அவர் அங்கு பல்வேறு பிரிவுகளுக்கும் நடமாடி உள்ளார் என்று கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். தற்போது பரிசோதனை அறிக்கையில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதையடுத்து அங்குள்ள இரண்டு கட்டடங்களும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. (வ-இ)

## கூரைக்கு மேலாக சிறைக்குள் பொதி

கொழும்பு, ஜன 3

கூரைக்கு மேலாக சிறைச்சாலைக்குள் எறியப்பட்ட பொதியொன்று மகசின் சிறைச்சாலையில் மீட்கப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், மின்னேற்றி, சிம் அட்டைகள், கையடக்கத் தொலைபேசி மின்கலம், ஐஸ் ரக போதைப்பொருள் என சந்தேகிக்கப்படும் சிறிய ரக பைக்கெட் மற்றும் கஞ்சா என கருதப்படும் சிறிய ரக பொதி, 10 புகையிலை என்பன குறித்த பொதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. (வ-இ)

## இடமாற்றங்கள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன.3

பொலிஸ் உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் கொரோ னாத் தொற்று நிலைமை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப் பட்டுள்ளது. இதன்படி, இடமாற்ற உத்தரவுகள் எதிர்வரும் மார்ச் மாதம் 15ம் திகதியின் பின்னர் அமுலாகும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண அறிவித்துள்ளார். பொலிஸ் உத்தியோகத்தர் பலரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

## புலியின் உடல் மீட்பு!

மாத்தளை, ஜன.3

மாத்தளைப் பகுதியில் மின் நிலைய நீர்த் தேக்கத்தில் உயிரிழந்த புலி ஒன்றின் உடலை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீட்டுள்ளனர். இந்தப் புலி 6 அடிநீளமும், 3 அடி உயரமும் கொண்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-இ)



## சித்திர பாடக் கையேடுகள் வழங்கல்

சாவகச்சேரி, ஜன.3

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்திரபாடம் கற்கும் மாணவர்களுக்கு சித்திரபாடக் கையேடுகள் வழங்கும் நிகழ்வு நேற்று சாவகச்சேரி தேவாலய வீதியில் உள்ள ரீ.பீ.ஹன்ற் நினைவு ஓவியக்கூடத்தில் இடம்பெற்றது.

ஓவியக் கூடத்தின் அமைப்பாளர் திருமதி இவாஞ்சலின் யோகமணி அழகரத்தினத்தின் ஏற்பாட்டில் சித்திர பாட ஆசிரியை திருமதி ஜானகி ஆனந்தகிருபனால் உருவாக்கப்பட்ட கடந்தகால வினாக்கள், மாதிரி வினாக்கள், செயன்முறைப் பயிற்சியும் விளக்கங்களும் என்னும் கையேடுகளே இவ்வாறு கிளிநொச்சி வலயங்களின் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் சித்திர பாட மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான கையேடுகள் இன்று வழங்கப்படவுள்ளன எனவும் யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய கல்வி வலயங்களின் பாடசாலைகளின் சித்திரபாட ஆசிரியர்களுக்கும் விரைவில் வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ப -9)

## சாவகச்சேரி பொதுச் சந்தையை மீண்டும் திறக்க முன்வாருங்கள்

### வியாபாரிகள் கோரிக்கை


சாவகச்சேரி, ஜன.3

சாவகச்சேரி பொதுச் சந்தை மிகவும் விசாலமானதும் தனித்தனி அலகுகளைக் கொண்டதாவும் உள்ளதால் சந்தையை மீண்டும் திறக்க நகர சபையினர் முன்வரவேண்டும் என சந்தையின் வியாபாரிகளும் நுகர்வோரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

யாழ்.மாவட்டத்தில் உள்ள சந்தைகளில் சாவகச்சேரி பொதுச் சந்தை மிகவும் விசாலமானதாகவும் ஒவ்வொரு விற்பனை அலகுகளும் தனித்தனியாக அமைந்துள்ளதாலும் இங்குள்ள வியாபாரிகளை சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்கக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தினால் அனைத்து வியாபாரிகளும் சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப வியாபாரத்தை மேற்கொள்ளமுடியும்.

கட்டடத்தில் இடநெருக்கடி எனக் கருதும் பட்சத்தில் சுகாதாரத் திணைக்களத்தினரும், நகர சபையினரும் சந்தைக்குள் காணப்படும் மரநிழலில் வைத்து வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டும். தற்போது சந்தைகள் மூடப்பட்டதால் வியாபாரிகள். மழை வெயில் போன்றவற்றில் சிரமங்களுக்கு மத்தியில் வியாபாரத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் தென்மராட்சி பிரதேச செயலகத்தினர், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் மற்றும் நகரசபையினர் ஆகியோர் எமது வறுமை நிலைகளைப் பார்வையிட்டு வீதியோரங்களில் சிரமங்களின் மத்தியில் மேற்கொள்ளும் வியாபாரத்தை சந்தைக்குள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றனர். (ப-9)




# பலமான சக்திகள்

ஒன்றிணைந்து டிஜிட்டல் தொழில்நுட்ப வரலாற்றை உருவாக்குகின்றன


அனைத்து இலங்கையர்களும் இதற்கு முன்னர் அனுபவித்திராத டிஜிட்டல் தொடர்பாடல் அனுபவத்தை வழங்கி, உங்கள் வாழ்க்கையிலும் தொழில்சார் எதிர்பார்ப்புக்களை மிக இலகுவாகவும் செயற்திறன் மிக்க வகையில் செய்துகொள்வதற்கான பின்னணியை வழங்க ஸ்ரீ லங்கா டெலிகொம் மற்றும் மொபிடெல் சேவைகள் இணைந்து புதிய பயணத்தை ஆரம்பித்துள்ளன.

SLTMOBITEL

நிகரற்ற இணைப்பு

# சர்வதேச விசாரணைக் கோரிக்கை வெறும் அரசியல் இலாப நோக்கமே

## சாணக்கியன் எம்.பி தெரிவிப்பு



**அம்பாறை, ஜன.3**

**இலங்கைக்கு எதிராக சர்வதேச குற்றவியல் விசாரணையை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பவர்கள் அரசியல் இலாபங்களுக்காக செயற்படுகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகிய நாம் சகல தமிழ்த் தரப்பினருடனும் இணைந்து ஒரு முன்மொழிவை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கவே விரும்புகின்றோம். இது தொடர்பில் புலம்பெயர் அமைப்புகள் உள்ளிட்ட ஏனைய தரப்பினருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளோம். சில அரசியல் தரப்பினர் அரசியல் இலாபங்களுக்காக இவ்விடயத்தில் செயற்பட முயல்கின்றனர். இந்தப் பேரவையில் 47 நாடுகள் வாக்களிக்கவுள்ளன. இதில் 24 நாடுகளின் ஆதரவை நாம் பெற்றால் மாத்திரமே இலங்கைக்கு எதிரான பிரேரணையை நகர்த்த முடியும். கூட்டமைப்பு கடந்த காலங்களில் காலஅவகாசம் கேட்டுள்ளது என்று கருத்துக்கள் வெளி வந்தன. இவை முற்றுமுழுதான பொய்கள். பேரவையின் விடயங்கள் குறித்து அறிக்கை விடும் சிலருக்கு பேரவை எவ்வாறு இயங்குகின்றது எனக் கூடத் தெரியாமல் உள்ளது.

அண்மையில் ஒரு சிலர் சர்வதேச நீதிமன்ற விசாரணையை இவ் விடயத்தில் கோருகின்றனர். அவ்வாறு இலங்கையை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்வதென்றால் இன்னுமொரு நாடு பிரேரணையை முன்வைக்க வேண்டும். போர் நிறைவடைந்து 11 வருடங்கள் கடந்தும் இனி ஒரு நாடு வந்து பிரேரணையைச் சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை நாம் நம்பவில்லை. இதைச் சிலர் குறுகிய இலாப அரசியலுக்காகத் தெரிவிக்கின்றனர் - என்றார். (ப)

# சம்பளப் பிரச்சினைக்கான பேச்சை சூம் ஊடக மேற்கொண்டிருக்கலாம்

## இராதாகிருஸ்ணன் எம்.பி தெரிவிப்பு

நுவரெலியா.ஜன.3

கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் உலகளாவிய ரீதியில் தலைவர்கள் முக்கியமான பிரச்சினைகளை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சூம் ஊடாகப் பேச்சு நடத்தி வருகின்றார்கள். அதேபோல், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைகளை சூம் ஊடாக மேற்கொண்டிருக்கலாம் என மலையக மக்கள் முன்னணி தலைவரும், முன்னாள் அமைச்சரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த 5 வருடங்களாக ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது. 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு இரண்டு கூட்டு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டும் ஆயிரம் ரூபா பிரச்சினை கவனத்தில் கொள்ளப்படவில்லை.

புதிதாக பதவிக்கு வந்துள்ள அரசில் 1000 ரூபா சம்பள உயர்வை வழங்க வேண்டும் என்று பிரதமர் நாடாளுமன்ற வரவு-செலவுத் திட்ட உரையில் கூறியுள்ளார். இருந்தும் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் தான் சம்பள உயர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையே உள்ளது. கூட்டு ஒப்பந்தம் இல்லாமல் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இன்றுள்ள விலைவாசி அதிகரிப்புக்கு ஏற்ப தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படைச்சம்பளத்தை ஆயிரம் ரூபாவாகப் பெற்றுக்கொடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களின் பொறுப்பாகும் - என்றார். (ப)

# விமான நிலையம் விரைவில் திறக்கும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன.3

சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளுக்கு அமைய இந்த மாதத்தில் விமான நிலையத்தை சுற்றுலாப் பிரயாணிகளுக்காக உத்தியோகபூர்வமாகத் திறக்க அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. விமான நிலையத்தை திறக்கும் திகதி விரைவில் அறிவிக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தால் வீழ்ச்சி யடைந்துள்ள சுற்றுலாத் துறை சேவையை குறுகிய காலத்தில் மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தேவை காணப்படுகிறது. சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையம் இம்மாதம் உத்தியோக பூர்வமாகத் திறக்கப்படும் திகதி குறித்து வெகுவிரைவில் அறிவிக்கப்படும். சுற்றுலா த்துறை ஊடாக கொவிட்-19 வைரஸ் கொத்தணி ஒரு போதும் உருவாகாது என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண் டும். கொவிட்-19 வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறை சேவையை மேம்படுத்தும் நோக்கில் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள் - என்றார். (ப)



மூத்தோர் ஆசியுடன்

# புதிய ஆண்டுக்கான வேலைகள் ஆரம்பம்

கிளிநொச்சி,ஜன.3

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் நேற்றுமுன்தினம் மூத்தோர் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமாகின என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.

இதன்போது சபை எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள முதியவர்கள் 180 பேருக்கு புத்தாடைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் சபை உப தவிசாளர் முத்துக்குமார் கஜன், உறுப்பினர்கள் ரமேஷ், வீரவாகுதேவர், நகுலேஸ்வரன் மற்றும் சபைச் செயலாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-6)

# சவால்களை வெற்றிகொள்ள அனைவரும் ஒன்றிணைவோம்

## சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.3

"கொவிட் -19 சூழல் காரணமாக ஏற்பட்டுள்ள சவால்களை வெற்றிகொள்ள ஒரே தேசமாக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் "என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்ற ஊழியர்கள் உறுதியுரை எடுத்துக்கொள்ளும் நிகழ்வு நேற்று முன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த வருடம் இலங்கைக்கு மாத்திரமன்றி முழு உலக நாடுகளுக்கும் நிச்சயமற்ற வருடமாக அமைந்தது. இந்த நிலைமை இவ்வாண்டும் நீடிக்கக்கூடும். எனவே சகலரும் புரிதலுடனும் கவனத்துடனும் செயற்படுவது அவசியமாகும். அனைவரையும் ஒன்றிணைத்து செயற்படுவதன் ஊடாக கொவிட்-19 சவாலை வெற்றிகொள்ள முடியும். என்றார். (ஐ-இ)

# விபத்துகளில் 12 பேர் மரணம்

கொழும்பு, ஜன. 3

இலங்கையில் புத்தாண்டு தினத்திலிருந்து கடந்த 24 மணித்தியாலத்தில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார். "நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், 40 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, மதுபானம் அருந்திவிட்டு வாகனம் செலுத்தியவர்கள் மாத்திரம் கடந்த 24 மணி நேரத்தில் ஆயிரத்து 824 பேர் கைதாகியுள்ளனர்." என மேலும் அவர் தெரிவித்தார். (ரி5-44)

# யாழ்ப்பாண வெல்லத்துக்கு வெளிநாடுகளில் கிராக்கி

## உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ்.மாவட்ட பனை வெல்லத்துக்கு, தென்பகுதி மற்றும் புலம்பெயர் நாடுகளில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் இவ் வருடம் மாவட்டத்தில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் பனை வெல்லம் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

கடந்த வருடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லம் தென் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களிலும், புலம்பெயர் நாடுகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அங்கிருந்து பல வர்த்தக நிலையங்கள் பனை வெல்லத்தை அனுப்புமாறு கோரிக்கை விடுத்துள்ளன. இதனையடுத்து சங்கங்கள் பனை வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

வெல்ல உற்பத்திக்குப் பெருமளவு விறகு தேவை என்பதால், வலிகாமம் மற்றும் தீவகத்தில் உள்ள சங்கங்கள் வெல்ல உற்பத்தியை நிறுத்தியிருந்தன.

தற்போது மின்சாரத்தில் இயங்கக் கூடிய உபகரணங்கள் வந்துள்ளதால், சங்கங்கள் வெல்ல உற்பத்தியை மேற்கொள்ளவுள்ளன.

2020 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லம் கிலோ 900 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-9)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இது வேண்டுகோளல்ல .... வலியுறுத்தல்!

எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் நடைபெறப் போகும் மனித உரிமைகள் சபையின் அமர்வில், இலங்கை தொடர்பான விவகாரம் புதிய தீர்மானங்களுடன் முக்கியத்துவம் மிக்கதாகவும், இலங்கைக்கு புதிய அழுத்தங்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச் சூழலில், காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள் வவுனியாவில் மேற்கொண்ட போராட்டத்தின்போது அறிவித்துள்ள தீர்மானங்கள் சம்பந்தப்பட்டவர்கள் அனைவராலும் ஆழமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

ஜெனிவா அமர்வில் தமிழர் தரப்பினர், பிரச்சினையை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து இன்னமும் ஒருங்கிணைந்த ஒரு தீர்மானத்திற்கு வர முடியவில்லை. தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுப்பதாகக் கூறும் தலைமைகள் அனைத்தும் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக் கொண்டு இன்னமும் அறிக்கைப் போர் நடத்திக் கொண்டிருக்கும் சூழலில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முன்வைத்துள்ள தீர்மானங்களை சாமானிய மக்களின் கருத்தியல் வெளிப்பாடாக எவரும் புறந்தள்ளி விட முடியாது.

அரசியல் தலைமைகள் தத்தம் அரசியல் இருப்பினையும், அபிலாஷைகளையும் தக்க வைத்துக் கொள்ளும் இலக்கையே முன்னிலைப்படுத்துகின்றன. ஜெனிவா மனித உரிமைகள் அமர்விலும் அதே இலக்கோடே அவை காய்களை நகர்த்துகின்றன. எனினும் ஜெனிவா அமர்வு குறித்த மூலோபாயங்களை திட்டமிடுகையில் போர்க்கால மனித உரிமை மீறல் செயற்பாடுகளால் நேரடியாக, பலவகையிலும் இழப்புகளைச் சந்தித்து இதுவரையிலும் எத்தரப்பினராலும் தீர்வு வழங்கப்படாத நிலையில், அரசியல் தலைமைகள் மீதான நம்பிக்கையை இழந்து, அதற்கு நேரடியாகத் தாமே அறவழிப் போராட்டக் களத்தில் இறங்கி உறுதியாக போராடிக் கொண்டிருக்கும் மக்களின் உணர்வுகளுக்கு மதிக்கப்பட வேண்டும்.

கிட்டத்தட்ட 1,500 ஆவது நாளை எட்டும் நியாயத்துக்கான, நீதிக்கான போர்க்குரல் வெறும் ஊடகச் செய்திகளாக மட்டும் பார்க்கப்படுவது மனிதநேய செயற்பாட்டாளர்களால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

அரசியல்வாதிகள் தங்களுக்காக அவ்வப்போது அறிக்கைகளை விட்டு அமைதியாகி விடுவதை அவர்கள் எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளவில்லை. தமக்கான நீதியை அரசியல்வாதிகள் எந்தவகையிலும் அது தேசியரீதியிலும் சரி, சர்வதேச ரீதியிலும் சரி ஒருங்கிணைந்து போராடிப் பெற்றுத்தரப் போவதில்லை என்பது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நன்கு தெரியும்.இந்த நிலையிலேயே ஜெனிவாவில் முன்வைப்பதற்கான தமது தீர்மானங்களைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இது மக்களின் கருத்தியல் சிந்தனையின் பாற்பட்டது என்ற வகையில் முக்கியத்துவம் கொண்டதாகின்றது.

"தமிழர்களுக்கு நியாயமானதும், நிரந்தரமானதும், பாதுகாப்புடன் கூடியதுமான ஒரு தீர்வு கிடைக்கும் வரை ஐ.நா மனித உரிமைப் பேரவை ஓய்வெடுக்கக் கூடாது" என்ற மக்களின் குரலை பேரவையில் ஓங்கி எதிரொலிக்கச் செய்யும் பொறுப்பு தமிழ் தேசிய அரசியல் வாதிகளுக்கும், சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் உண்டு என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறோம்.

இது அறவழிப் போராட்டத்தில் உறுதியோடு தொடர்ந்து களத்தில் நின்று கொண்டு நீதி கோரி நிற்கும் மக்களின் வேண்டுகோள் மட்டுமல்ல அரசியல் தலைமைகளுக்கான வலியுறுத்தல் என்பதையும் இங்கு பதிவிடுதல் கடமையாகின்றது.

ஜெனிவா பிரேரணையில் இணைத்துக் கொள்ளுமாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். அந்தக் கோரிக்கைகளின் நியாயத்தன்மையை ஐ.நா மனித உரிமைகள் அமர்வில் உறுதிபடக்கூறி நியாயம் கேட்கும் வாய்ப்பை உருவாக்க வேண்டும். அத்துடன் இலங்கையில் மனித உரிமைக் குற்றங்களில் நேரடியாக ஈடுபட்டோர், அதனை நெறிப்படுத்தியோர் எனஅதிகார பீடத்தவர் அனைவர் மீதும் உரிய விசாரணையை மேற்கொள்ளவும், அவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்கவும் முயல வேண்டும். ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில் வெறுமனே அறிக்கை மட்டும் விடுவதோடு நில்லாமல், ஆக்கபூர்வமாக எதனையாவது செய்ய வேண்டும். இது மட்டுமே அங்குபோய் அமர்வில் கலந்து கொள்ளும் தமிழ் அரசியல் தலைமைகளின் ஒரே பொறுப்பாகவும் இருக்க வேண்டும்.

அவ்வாறு செய்ய தமிழ் அரசியல்வாதிகள் தவறுவார்களாயின், "இலங்கையில் போர்க்குற்றங்களோ, மனித உரிமை மீறல்களோ எதுவும் நடக்கவில்லை" என அறிக்கை விட்டுள்ள பாதுகாப்புச் செயலர் ஜெனரல் கமால் குணரத்னவின் கூற்றை நியாயப்படுத்துவோராக, தமிழினத்துக்கு துரோகம் செய்தோராகவே வரலாற்றில் அடையாளப்படுத்தப்படுவர் என்பது திண்ணம்.

## இன்றைய கேலிச்சித்திரம்




நன்றி நாமல் அமரசிங்க

# கால அவகாசத்தை வழங்கும் நடவடிக்கையில் கூட்டமைப்பு

## கஜேந்திரன் எம்.பி குற்றச்சாட்டு

**முல்லைத்தீவு, ஜன.3**



**சுமந்திரன் தலைமையிலான கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை அரசுக்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில்தான் ஈடுபட்டுள்ளார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இந்த நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று மீண்டும் மீண்டும் சொல்லி வருகின்றார்கள். இவ்வாறான நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் தலைமை என்று சொல்லிக்கொண்டிருந்த தமிழ்த் தலைமைகள் இலங்கை அரசுக்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுப்பதில்தான் அக்கறை செலுத்தினார்கள். போர் குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குக் கொண்டு செல்வதற்கு எந்த முயற்சிகளும் எடுக்கவில்லை அதன் விளைவாகப் போர்க் குற்றங்கள் சுமத்தப்பட்ட பலர் நாட்டின் முக்கிய தலைவர்களாகக் கொண்டு வரப்பட்டுள்ளார்கள்.

போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அபிவிருத்தியும் இல்லை, வேலை வாய்ப்பும் இல்லை, உரிமையும் இல்லை என ஒன்றும் இல்லாத இடத்தில் கூட்டமைப்பினர் இன்னும் ஒருவருட கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்றார்.

(ப-19)

## அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கு குழு

கொழும்பு, ஜன.3

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதுடன் அவற்றுடன் தொடர்புடைய அளவுகோல்களைத் தயாரிப்பதற்காக குழுவொன்றை நியமிக்க தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையிலேயே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்னாயக்க தெரிவித்தார்.

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை இம்மாதம் ஆரம்பிக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இவ்வாறு நியமிக்கப்படும் குழுவின் பரிந்துரைகள் தேர்தல் ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட பின்னர், அளவுகோல்களை குறித்த தரப்பினருக்கு அறிந்துகொள்வதற்காக வர்த்தமானி அறிவித்தல் ஊடக வெளியிடப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## 24 மணிநேரத்தில் 23 நபர்கள் கைது

கொழும்பு, ஜன. 3

முகக்கவசம் அணியாமை மற்றும் பொது இடங்களில் சமூக இடைவெளி பேணத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் கடந்த 24 மணித்தியாலயங்களில் 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண நேற்று தெரிவித்தார்.

கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கு பொதுமக்கள் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியைப் பேண வேண்டும் என பொதுமக்களுக்கு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எச்சரிக்கை விடுத்தார். மேலும் தனிமைப் படுத்தல் விதிகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்கு பொலிஸார் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர் என மேலும் தெரிவித்தார். (ரி5)

# தமிழராக ஒன்றிணைவது காலத்தின் கட்டாயமாகும்

## அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜன. 3**

**ஈழத்தமிழ் மக்களின் அரசியல் வேணவாவை வென்றிட தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் செயற்படும் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைய வேண்டிய அதி முக்கிய காலகட்டமாக பிறந்திருக்கும் 2021 ஆம் ஆண்டு அமைந்துள்ளது என்று அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

பூகோள அரசியலின் சூட்சுமங்களைப் புரிந்துகொண்டு தாயகத்தை வென்றெடுக்கும் தாயக்கட்டைகளை உருட்ட அனைத்துத் தரப்புகளும் ஒன்றிணைவது காலத்தின் கட்டாயம். இலங்கைத் தீவின் ஆதிக்குடிகளான தமிழ் மக்களின் இருப்பின் மூலாதாரமான மரபுவழித் தாயகம் துண்டாடப்பட்டும், கபளீகரம் செய்யப்பட்டும், ஆக்கிரமிக்கப் பட்டும் வருகின்றது. கொஞ்சம் தாமதிப் போமாயின் ஆண்ட பரம்பரையான தமிழினம் இலங்கைத் தீவின் அடிமை இனமாக மாறும் வரலாற்று துன்பியல் நிலைக்கே இட்டுச் செல்லும். தமிழர் தரப்பை பிரதி நிதித்துவப்படுத்தும் தாயகம் மற்றும் புலம்பெயர் தளம் ஆகியவற்றில் செயற்பட்டுவரும் தமிழ்த் தேசிய தரப்புகளிடையே தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் இரண்டுபட்ட நிலைப்பாடு இருப்பதானது, தீர்வுக்கே விரும்பாத சிங்கள ஆட்சியாளர்களுக்கும், எம்மை முன்னிறுத்தி தத்தமது சுயலாப அரசியலை நிறைவேற்றத் துடிக்கும் வல்லாதிக்க சக்திகளுக்கும் ஏதுவான சூழலையே ஏற்படுத்திவிடும்.

இவ் வரலாற்றுப் படிப்பினையை முன்னிறுத்தி மேற்குறித்த ஒற்றை நிலைப்பாட்டை நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஒருமித்த குரலாக ஓங்கி ஒலிப்போம் எனவும், அதன் மூலமாக பிறக்கின்ற 2021ஆம் ஆண்டு ஏற்படுத்தப் போகும் சவால்களைக் கடந்து, தமிழ் மக்களது இருப்பையும், தமிழர் தாயகத்தின் பாதுகாப்பையும் உறுதி செய்ய திடசங்கற்பம் கொள்வோம் என்றும் உள்ளது. (ப)



## வயல்களுக்குள் புகுந்து யானைகள் அட்டகாசம்

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வவுனியா, ஜன.3

வவுனியா, சின்னத்தம்பனைக் கிராமத்தில் நெல் வயல்களுக்குள் புகுந்து காட்டு யானைகள் அட்டகாசம் செய்துள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

சீரற்ற காலநிலைகளுக்கு மத்தியிலும் கடன்பட்டு வயல்களை விதைத்தோம். எனினும் யானைகள் குறித்த வயல் நிலங்களுக்குள் புகுந்து அட்டகாசம் செய்வதால் பயிர்கள் அழிவடைகின்றன. இதனால் எமது வாழ்வாதாரம் தொடர்ந்தும் பாதிக்கப்படுகிறது. தொடர்ச்சியாக காட்டு யானைகள் எமது வயல் நிலங்களுக்குள் புகுந்து சேதம் ஏற்படுத்துவதால் அதனைத் தடுத்து நிறுத்த அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் - என்றனர். (ப-18)

## உரிமைகளை வென்றெடுப்பதற்கு அறிவியல் அணுகுமுறை அவசியம்

### ஹரிஸ் எம்.பி தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஜன.3

பெரும்பான்மைச் சமூகத்தால் உருவாக்கப்பட்ட இந்த அரசிடம் எமது உரிமைகளை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும்? என்பது தொடர்பான உணர்ச்சிகளைத் தாண்டிய அறிவியல் ரீதியான அணுகுமுறைகள் அவசியம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள ஜனாஸா நல்லடக்கம் தொடர்பான பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டும், முஸ்லிம்களின் ஏனைய பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வைப் பெறுவதென்ற நல்ல நோக்கின் அடிப்படையிலும், அரசின் உத்தரவாதத்தின் பிரகாரம் 20க்கு நாங்கள் ஆதரவு வழங்கினோம். ஆனால் அரசு எங்களிடம் வழங்கிய வாக்குறுதிகளுக்கான காலம் தாழ்த்தப் பட்டுக் கொண்டே வருகின்றது. எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற அழுத்தத்தை அரசிடம் பல வடிவங்களில் கொண்டு சென்றோம். ஒவ்வொரு கட்டங்களிலும் மிகவும் அவதானத்துடன் எமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதான காரணங்களாக இனவாத சக்திகள் எமக்கெதிராக அழுத்தங்களைப் பிர யோகிக்கக் கூடாது என்பதாகும். எமக்கெதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அசிங்கமான பிரசாரங்களை சிலர் அரங்கேற்றி வருகின்றனர். நாங்கள் பணங்களைப் பெற்றோம் என்றும், பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக 20க்கு ஆதரவு தெரிவித்தோம் என்றும் பலர் பொய்யான பிரசாரங்களைச் செய்து வருகின்றனர் - என்றார். (ப)

## மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு விரைவில் புதிய அதிபர்

மானிப்பாய், ஜன.3

மானிப்பாய் மக்ளிர் கல்லூரிக்கு புதிய அதிபரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன் இதற்கான துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் அதிபராக இருந்த திருமதி நர்மதா மாகாணத் திணைக்களத்துக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் மாற்றப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து மேற்படி கல்லூரிக்கு விரைவில் இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த ஒருவர் நேர்முகத் தேர்வு மூலம் தெரிவாகவுள்ளார். நேர்முகத் தெரிவுக்கான கடிதங்கள் சம்பந்தப் பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

## கடந்த டிசெம்பர் மாதம் 9959 கைதிகள் விடுவிப்பு

நாடு முழுவதிலும் உள்ள சிறைகளிலி ருந்து கடந்த டிசெம்பர் மாதத்தில் 9ஆயிரத்து959 கைதிகள் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட கைதிகளில் வெவ்வேறு குற்றங்களைச் செய்த பிணையில் விடுவிக்க முடியாத கைதிகளும், சிறு குற்றங்களைச் செய்த கைதிகளும் உள்ளடங்குகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ரி5-இ)

## விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி,ஜன.3

மோட்டார் சைக்கிள்களிலிருந்து வீழ்ந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், பொது மகன் ஒருவரும் காயமடைந்தனர்.

இந்த விபத்துக்கள் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளன.

மந்துவில் பகுதியில் வீழ்ந்து காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரும், கைதடிப் பகுதியில் வீழ்ந்து காயமடைந்த மானிப்பாய் சுதுமலையைச் சேர்ந்த நபர் ஒருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (க-9)

TRC/M/Promo/20/02

பாதுகாப்பாக உங்கள் வீட்டிலிருந்தவாறு வேலை செய்யுங்கள், கல்வி பயிலுங்கள்

மொபிடெல் வழங்கும் சிறந்த MS Teams, Zoom, Office 365, m-Learning, SLT Lynked மற்றும் SLT eSiphala டேட்டா பிளான்களை அனுபவியுங்கள்.

25GB பக்கேஜ் ரூபா. 150/- + வரிகள்

50GB பக்கேஜ் ரூபா. 590/- + வரிகள்

100GB பக்கேஜ் ரூபா. 990/- + வரிகள்

இத்திட்டங்கள் விசேடமாக மேலேயுள்ள பக்கேஜ்களுக்கு மட்டுமே.
ஏனைய Data தேவைகளுக்கு Datamart App இற்குள் பிரவேசியுங்கள்.

SLT MOBITEL

## பணிப்பெண் தேவை

கொழும்பில் தங்கியிருந்து தாய் தந்தையைப் பராமரித்து கடை ஒன்றில் உதவியாளராக பணியாற்றுவதற்கு பணிப்பெண் ஒருவர் உடன் தேவை

வயது 35 தொடக்கம் 65 வரை

**0766799618 / 0776981991**

## செசி உடன் தேவை

(Lorry) வாகனத்தின் செசி (Chassis) உடன் தேவை.

**077 735 7373**

## வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம், நல்லூர்)

1) காசாளர், விற்பனை உதவியாளர்
   வயது 18- 35
2) மேற்பார்வையாளர்
   (முன் அனுபவம் விரும்பத்தக்கது)
   வயது 30 - 50

நேர்முகத்தேர்வு : 04.01.21 - 08.01.21
9.30 am - 1 pm

இடம்: இல.175, K.K.S வீதி,
(சத்திரத்து சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: **077 477 3481**

## வேலைவாய்ப்பு

(கொக்குவில்)

1) மேற்பார்வையாளர் (முன் அனுபவம்)
   வயது 30 - 45
2) விற்பனை உதவியாளர்
   வயது 18 - 35
3) ஆறு (06) பேர் கொண்ட ஒரு நிறுவனத்திற்கு சமைப்பதற்கு முன் அனுபவமுள்ள சமையலாள் தேவை.
   ரூ. 12000 /= சம்பளம்

தொடர்புகளுக்கு: **077 623 1295**

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் இல.42, பெரிய மேல்மாடி வீடு வாடகைக்குண்டு.

**077 130 8661**

## வேலை வாய்ப்பு

பிரபல விற்பனை நிலையத்திற்கு அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை.

**077 373 4109, 077 351 5980**

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.

**077 960 4079, 021 222 5110**

## வயல் காணி விற்பனைக்கு

தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோயில் பற்று தனங்கிளப்பு இறை "நரியொட்டு வயல்" நெல் பரப்பு 91 விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
விலை பரப்பு 75 000 ரூபா

**076 297 9734**

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம், மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## வேலையாள்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு பின்வருவோர் தேவை

I) ஒட்டுவேலை செய்வதற்கு வெல்டரும் உதவியாளரும் தேவை.
   வெல்டருக்கு மாதம் 40000/= இலிருந்தும் உதவியாளருக்கு மாதம் 25000/= இலிருந்து வழங்கப்படும்
II) ஸ்பிறே பெயின்ரிங் தெரிந்தவர்கள் தேவை
   மாதம் 40000/= இலிருந்து வழங்கப்படும்
III) வயறிங் வேலை (Three Face Wiring தெரிந்தவர்கள் தேவை மாதம் 35000/= இலிருந்து வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **074 049 0003**

## வாடகைக்கு

அலுமினிய பொடியுடன் கூடிய **படி ரக வாகனம்** நாள் வாடகைக்கு அல்லது மாத வாடகைக்கு விடப்படும். (சாரதியுடன்)

**076 205 6567**

## வீடு வாடகைக்கு

யாழ். கந்தர்மடம் மற்றும் கைதடியில் மாணவர்கள், தொழில் புரிவோருக்குக்கான தங்குமிடம் சகல வசதிகளுடனும்.

**075 372 5089, 078 567 9674**

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**

**076 568 4346**

## வேலைவாய்ப்பு

**சந்தைப்படுத்தல்**

- இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- பகுதிநேரமாகவும் பணியாற்றலாம்

வட்சப் இலக்கத்தினூடாக விண்ணப்பித்து நேர்முகத்தேர்விற்கான நேர ஒதுக்கீட்டை பெறலாம்.

தொடர்பு: **074 070 5066**

## பணிப்பெண் தேவை

3 வயது ஆண் பிள்ளையை பராமரிக்க பணிப்பெண் தேவை. உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

**076 591 2796**

## வேலையாள்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் காலணியகத்திற்கு (Shoe Palace)

முன் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.

**077 604 8921**

## மணமகள் தேவை

சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தரவுள்ள 1973, இந்து, மிதுன ராசி கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு Doctor அல்லது அரச உத்தியோகம் பார்க்கும் மணப்பெண் தேவை. கிறிஸ்தவ பெண்ணும் விண்ணப்பிக்கலாம்

**077 914 9436**

## திருமண சேவை

1990, 1995,1986, 1968 பிறந்த அரச உத்தியோக மணமகன் களுக்கு மணமகள் தேவை. 1988, 1990, 1995 மணமகள்களுக்கு உத்தியோக மணமகன் தேவை.

**077 604 0373**

## Typing வேலைக்கு ஆள்கள் தேவை

இடம்: கோப்பாய்
சம்பளம் - 25,000/=

**077 179 0486**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி- 45 ரூபாய்

தொடர்புகளுக்கு- **077 334 1281**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஓடக்கரை வீதி, இல.58, என்னும் வீட்டுடனான ¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு

**077 130 8661**

## வேலையாள்கள் தேவை

Project Photographer தேவை. Studio அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது

இடம்: திருநெல்வேலி **076 646 1089**

## பிரத்தியேக வகுப்புக்கள்

**ஆங்கிலம் தரம்: 6 - 11**

தொடர்புகளிற்கு

**076 133 3943 - யாழ்ப்பாணம்.**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாண நகரை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை

**077 930 7774**


## வாடகைக்கு

யாழ் வைத்தியசாலை வீதியில் 1 ம் மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு. கடைகளுக்கும் அலுவலகங்களுக்கும் ஏற்றது.

**077 828 1956**

## மரண அறிவித்தல்

பிறப்பு
12 . 01 . 1976



இறப்பு
01 . 01 . 2021

### தருமரத்தினம் அன்பழகன் (குகன்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் விநாயகபுரம் துணுக்காயை வதிவிடமாகவும் கொண்ட தருமரத்தினம் அன்பழகன் அவர்கள் 01.01.2021 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தருமரத்தினம் சற்குணம் தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் தங்கமுத்து (பூமணி) தம்பதியரின் ஏக மருமகனும், இதயவாணியின் அன்புக் கணவரும், குமரன், தனுஷன், யதுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-கற்பகம், மருதலிங்கம் - காமாட்சி ஆகியோரின் அன்புப் பேரனும், அறிவழகன், மதியழகன், மணிவண்ணன், கலையன்பன், தவயோகன், அருளழகன், குணசீலன் ஆகியோரின் மூத்த சகோதரரும், வாசுகி, சசிகலா, கிருஷாந்தி (துளசி), கிருஷாந்தினி (நிஷா), டிலானி, திரியம்பகி, ஜசிந்தா, காலஞ்சென்ற இலங்கேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தரங்கினி, தாரகன், ஹம்சினி, பிரதாப், அனீகா, அக்ஷிகா, ஆருத்திரன், துஷிக்கா, தக்ஷிகா, துஷாந் ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2021) ஞாயிற்றுக்கிழமை 940, விநாயகபுரம் இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலியாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**(ரகு - 077 125 8788)**
**(சுதன்-077 288 1960)**

## மரண அறிவித்தல்

மண்ணில்
09 . 11 . 1952



விண்ணில்
26 . 12 . 2020

### செல்வி இந்திராணி வேலுப்பிள்ளை

(பழைய மாணவி - பருத்தித்துறை
மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவி)

துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இந்திராணி வேலுப்பிள்ளை அவர்கள் 26-12-2020 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (கூட்டுறவு தலைமைக் காரியாலய பரிசோதகர்), குலரத்தினம் (குலக்கா) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குலேந்திரன் (கல்வித் திணைக்களம்) மற்றும் குலநாயகம் (ஓய்வுபெற்ற செயலாளர் பிரதேச சபை, கரவெட்டி), பாலேந்திரன் (லண்டன்), தெய்வேந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற நாகேந்திரன் மற்றும் கௌரி (ஈஸ்வரன் பிரதேர்ஸ் கம்பனி கொழும்பு) ஆகியோரின் அன்பு சகோதரியும், விஜயகுமாரி (கல்வித் திணைக்களம்), இந்திராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர் வட இந்து மகளிர் கல்லூரி), சாந்தா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜனகன் (அவுஸ்திரேலியா), ரேகா (அவுஸ்ரேலியா), ரஜிலதா (ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), அபிதாரணி [E-SOFT METRO CAMPUS), ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் **கொவிட்-19** காரணமாக உறவினர்கள், அயலவர்களுடன் 28-12-2020 அன்று கொழும்பு மகிந்த மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை அறியத் தருகின்றோம்.

**குலநாயகம் - 0776316932**
**கௌரி - 0773558585**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## விசா ஆலோசனை சேவை

ருமேனியா, இத்தாலி, ய்ப்பான், கனடா நாடுகளுக்கான வேலை வாய்ப்பு விசாக்கான ஆலோசனை வழங்கப்படும்.

**074 035 2940**

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அளவெட்டி வடக்கு
அமரர் ஆசிரியமணி
**நமசிவாயம் வாதவூர்**

மண்ணில் 28.11.1924
விண்ணில் 27.12.1999
திதி: 03.01.2021 ஞாயிறு

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் இருபத்தொன்று ஆகியதோ
ஆனாலும் அழியவில்லை உங்கள் நினைவுகளும்
கனவுகளும் எம்மை விட்டு என்றுமே அகலா

மாவிலங்கை, அளவெட்டி.
குடும்பத்தினர். 071 856 1625

## ஆண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் நான்கு வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்ற வல்வை

**முதியோர் இல்லத்திற்கு**

ஆண் பராமரிப்பாளர் தேவை.
உணவு, தங்குமிடம் இலவசம்.
தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
எமது இல்லத்தில் **புதிதாக இணைய விரும்பும் ஆண்கள், பெண்கள் இணைந்து கொள்ளலாம். கட்டணம் குறைவான நிலையில் அறவிடப்படும்.**

தொடர்புகளுக்கு- 0778106857
0771542067
0212265551

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 04 . 04 . 1954
உதிர்வு 07 . 12 . 2017

அமரர் திருமதி
**தனலட்சுமி குணரத்தினம்**

ஆண்டொன்று மூன்று ஆனதோ!
அன்பே ஆறவில்லை எம் துயரம்
மாற்றமின்றி உன் நினைவால்
மனம் வெம்பி நிற்கின்றோம்
எம் அகத்தில் குடியிருக்கும் அன்புத் தெய்வமே!

6 ஆம் வட்டாரம், வேலணை.
என்றும் நினைவில்
M. குணரத்தினம் (கணவர்)

---

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

# Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

## STUDENT VISA

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம் • Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

Hotline: 0777-761 346

**Sponsor Letters** Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute
Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
10 வருட கால நம்பிக்கையான சேவை

# தேவை

மருந்தக அனுமதிப்பத்திரம்
(Pharmacy License)
உடனடியாக தேவை.

தொடர்பு இலக்கம்:
**077 470 1673, 077 777 1827**

## வேலணை பிரதேச சபை பகிரங்க ஏல அறிவித்தல்

சாட்டி வாகனத் தரிப்பிடமும் மலசல கூடமும் சேர்ந்த சுற்றுலா மையம், சிற்றுண்டிச் சாலைகள், மண்டைதீவு வாராந்த சந்தை என்பவற்றை 18.01.2021 முதல் 31.12.2021 வரை குத்தகைக்கும் நயினாதீவு கடைகளை நீண்டகால குத்த கைக்கும் வழங்குவதென தீர்மானித்துள்ளோம். எனவே இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் ஆள் அடையாளத்தை நிரூபிக்கும் வகையிலான உரிய ஆவணங்களுடனும் அதன் நிழற் பிரதியுடனும் மீளளிக்க முடியாத வைப்புத் தொகையான ரூபா.500.00 இனை செலுத்தி பகிரங்க ஏலத்தில் பங்குபற்றலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகம், உப அலுவலகங்களில் கடமை நேரத்தில் பார்வை யிடலாம்.

**பகிரங்க ஏலம் நடைபெறும்**
**திகதி:- 11.01.2021 திங்கட்கிழமை பி.ப 02.00 மணி**
**பகிரங்க ஏலம் நடைபெறும்**
**இடம் :- வேலணை பிரதேச சபை தலைமைக் காரியாலயம், வங்களாவடிச் சந்தி, வேலணை.**

தவிசாளர்,
பிரதேசசபை, வேலணை.

# Dr.eam of Studying MBBS / MD

China | Belarus | Latvia | Malaysia | Russia

Admission open for 2021 intake



SLMC Approved

Zhengzhou University - China
Grodno State Medical University- Belarus
Riga Stradins University - Latvia
MAHSA University - Malaysia
International Medical University - Malaysia
First Moscow Medical University - Russia

Duration: 6 years Medium-English

Admissions : 077 301 3060
Jaffna : 77, Clock Tower Road, Jaffna
Colombo : 107, B-1/1 Galle Road, Colombo 06
ICS Study Medicine Abroad

---

# கீரிமலை அந்தியேட்டி மடம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது



யாழ்ப்பாணம், ஜன. 3

கொரோனா அச்சம் காரணமாக கடந்த இரு வாரங்களாக மூடப்பட்டிருந்த கீரிமலை அந்தியேட்டி மடம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

கீரிமலை அந்தியேட்டி மடத்தில் அந்தியேட்டி கிரியைகளை மேற்கொண்ட ஒருவர் மருதனார்மடம் சந்தைக் கொத்தணியுடன் தொடர்புபட்ட நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து அந்தியேட்டிக் கிரியைகளை மேற்கொண்ட குருக்கள் மற்றும் பதிவுகளை மேற்கொண்ட பிரதேச சபை ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்ததுடன் மடமும் மூடப்பட்டது. கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி வலிவடக்கு பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர் மற்றும் பிரதேச சபையினர் மேற்கொண்ட தொற்று நீக்கப்பணிகளையடுத்து இம்மாதம் முதலாம் திகதி முதல் கீரிமலையில் அந்தியேட்டி கிரியைகளைச் செய்வதற்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம)

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், சுன்னாகம் வீதியில் அமைந்துள்ள சுப்பர் மாக்கட் ஒன்றிற்கு காசாளர் அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை.

தெடர்பு: 076 641 6466

## விற்பனைக்கு

யாழ் பிறவுண் வீதியில் 6.4 பரப்பு காணியும், யாழ் வைமன் வீதியில் 6.4 பரப்பு காணியும், யாழ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 10 பரப்பு காணியும் வீடும், யாழ் பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் 6.3 பரப்பு காணியும் வீடும், யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 5 பரப்பு காணியும், கோயில் வீதியில் 6.4 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 723 2535

## விற்பனைக்கு

வாகன இல:- WP JS 2454
Model :- 01 Unit, TATA LPK 1615 TC/36 Box Tipper
ஒன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:077986 1709

## மேல் வீடு வாடகைக்கு

புன்னாலை வீதி, ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில் 5 அறைகள், 2 குளியல் அறை - 39 அ நீளம் 32 அகலம் கொண்ட வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.
நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு: 076 9099214, 0771403024

## புதிய பிரிவுகள்

**IELTS** ஆரம்பம் 04,05-01 2021

Academic & General Training Individual Online Classes

- Learn IELTS from well experienced IELTS Lecturer
- Discount Available for January Registration

IPS No.01-IELTS Education
யாழ்.பல்கலைக்கழகம் அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Mobile:076 685 2529

## இன்றைய நாள்



**மேடம்:** எதிர்பார்த்த ஆதாயம் உண்டு. புகழ்மிக்கவர்களை சந்திப்பீர்கள். உங்கள் திட்டங்களை சேதாரம் இன்றி நிறைவேற்றுவீர்கள். நிதானப்போக்கு காரணமாக வரவிருந்த சிக்கல் நீங்கும்.

**இடபம்:** அலைபேசி மூலமாக கேட்கும் செய்தி மகிழ்ச்சி தரும். நண்பர்களிடையே வாக்கு வாதங்கள், மன உளைச்சல் இருக்கும். தெளிவான மன நிலையால் பணியிடத்தில் நல்லபெயர் வரும்.

**மிதுனம்:** விட்டுக் கொடுத்துச் சென்று பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். பிரகாசமான நாள். எடுத்த செயலில் வெற்றி காண்பீர்கள் புது வேலை கிடைக்கும். பதவியின் மூலம் உற்சாகம் ஏற்படும்.

**கடகம்:** உங்களுக்கு கிடைக்க இருக்கும் பதவியை யாராலும் தடுக்க முடி யாது. வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்ப விடயத்தில் பிறரின் தலையீட்டை அனுமதிக்க வேண்டாம்.

**சிம்மம்:** உயர் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது உங்கள் பணிக்கு நல்லது. இன்று வரும் மெயில் ஒன்று இனிய தகவலைக் கொண்டு வரும். பணியிடம் தொடர்பான பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

**கன்னி:** சமூகத்தில் ஏற்படும் தொடர்பால் புதிய அனுபவம் உண்டாகும். இன்று நீங்கள் சுபநிகழ்ச்சிகளில் விருப்பமின்றிக் கலந்து கொள்வீர்கள். அந்தஸ்து உயரும்.

**துலாம்:** குடும்பத்தினரின் குறிப்பறிந்து செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். சொத்து வாங்குவது, விற்பது சுமாரான லாபமே தரக்கூடும். பணியிடம் அல்லது கட்சியில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சியடையும். பட்டம், பதவி, புகழ் தேடி வரும். பணியாளர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சி தரும் விடயங்கள் நடைபெறும்.

**தனுசு** குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். கௌரவம், அந்தஸ்து உயரும். விடிவு காலம் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தோன்றும். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் அனைத்தும் நீங்கும்.

**மகரம்** ஒவ்வொரு பேச்சிலும், செயலிலும் அதீத கவனம் தேவை. கவனம் சிதறும். யாரிடமும் வீண் வாக்குவாதங்கள் வேண்டாம், மூத்தவர்களுடன் நேற்று இருந்த சச்சரவுகள் நீங்கும் நாள்.

**கும்பம்:** மனம் மகிழ்ச்சி அடையும்படியான சம்பவங்கள் நடைபெறும் நாள். வீண் விரயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் கவனம் தேவை. நீங்கள் எதிர்பார்த்த விரும்பத்தக்க மாற்றம் ஒன்று ஏற்படும்.

**மீனம்:** வேலை தேடுபவர்களுக்கு நல்ல செய்தி மெயிலில் வரும். தாயாரின் உடல்நலம் பற்றிய வீண் பயம் இன்று தீரும். பெண்கள் உடல்நலத்தில் சற்று கவனமாக இருக்க வேண்டும்.

# நாட்டில் 20 வீத மக்களுக்கு முதற்காலாண்டில் தடுப்பூசி

## மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர நம்பிக்கை



**கொழும்பு, ஜன.3**

**நாட்டின் சனத்தொகையில் 20 சதவீதமானவர்களுக்கு 2021ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கொவிட் தடுப்பூசி கிடைக்கும் என்று தொற்று நோய் தடுப்புப் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உலகில் ஒவ்வொரு மில்லியனுக்கும் 522 கொரோனாத் தொற்றாளர்களும், தெற்காசியாவில் ஒவ்வொரு மில்லியனுக்கும் 5 ஆயிரத்து 809 தொற்றாளர்களும், இலங்கையில் ஒவ்வொரு மில்லியனுக்கும் ஆயிரத்து 886 தொற்றாளர்களும் கடந்த ஆண்டு இனங்காணப்பட்டுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு மில்லியன் சனத்தொகைக்கும் 9 பேரும், தெற்காசியாவில் ஒவ்வொரு மில்லியனுக்கும் 89 பேரும் இலங்கையில் ஒவ்வொரு மில்லியன் சனத்தொகைக்கும் 9 பேரும் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளனர். என்றார். (வ-இ)

# அரிசி ஊழலை முடிவுக்கு கொண்டுவர புதிய திட்டம்

கொழும்பு, ஜன.3

அரிசி தொடர்பான ஊழலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு விவசாய அமைச்சால் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக முறையான ஒரு திட்டமிடல் இன்மையே நுகர்வோர் அதிக விலைக்கு அரிசியைக் கொள்வனவு செய்யக் காரணமாக அமைந்தது என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சருக்கும் நெல் ஆலை உரிமையாளர் களுக்கும் இடையிலான சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

சிலர் இணைந்து அரிசி ஏகாதிபத்திய கொள்கையில் ஈடுபட்டுள்ளணர் எனவும் அவர் தெரிவித்தார். (ற-இ)

# இணையம் ஊடான முறைப்பாட்டு வசதி

கொழும்பு, ஜன.3

வெளிநாட்டுப் பணியாளர்களின் முறைப்பாடுகளை இணையத்தளம் ஊடாக அனுப்புவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் www.slbfe.lk என்ற இணையத்தளத்துக்கு பிரவேசித்து, பணியாளரின் கடவுச் சீட்டு இலக்கம், பெயர், தொலைபேசி இலக்கம் மற்றும் முறைப்பாட்டைப் பதிவு செய்து இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

முறைப்பாடு, பணியகத்தின் உரிய பிரிவுக்கு கிடைத்த பின்னர் அதனை அறிவித்து மீண்டும் தொலைபேசி இலக்கத்துக்கு குறுந்தகவல் அனுப்பப்படும்.

இந்த இணையத்தள வசதி ஊடாக பணியாளர், சேவை புரியும் நாட்டின் தூதரக காரியாலயத்துக்குச் செல்லாமல் முறைப்பாட்டை கையடக்கத் தொலைபேசி அல்லது கணினி ஊடாக அனுப்ப முடியும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது. (வ-இ)

# முகக்கவச வருமானம் புலமைப்பரிசில் நிதியத்துக்கு

கொழும்பு, ஜன.3

சதொச நிறுவனங்களின் ஊடாக விற்பனை செய்யப்படும் முகக்கவசங்களின் விற்பனை வருமானத்தின் ஒரு பகுதி மகாபொல புலமைப்பரிசில் நிதியத்துக்கு வழங்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு உற்பத்திகளான உயர்தரம் கொண்ட முகக்கவசங்கள் சதொசவின் ஊடாக 15 ரூபா சில்லறை விலைக்கு விற்கப்படுகின்றன.

ஒரு முகக்கவசத்தை விற்பனை செய்வதன் ஊடாக ஒரு ரூபா மகாபொல புலமைப்பரிசில் நிதியத்துக்கு வழங்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-இ)



கொடிகாமம் தேசிய சேமிப்பு வங்கி கிளையில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை பரிசில்கள் வழங்கப்பட்டன. முகாமையாளர் அன்ரன் யோகநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மிருசுவில் பங்கு தந்தை வணபிதா ஸ்ரிபன், மீசாலை மத்திய கல்லூரி அதிபர் அம்பலவாணர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி5-159)

# மஹிந்தவைத் தாக்குகிறது கோத்தாபயவின் அஸ்திரம்!

கொழும்பு, ஜன. 3

மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே பிரதமரின் கருத்து. எனினும், அதற்கு எதிரான நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருக்கிறார். இதனை அவர் வெளிப்படையாக கூறாவிட்டாலும், சரத் வீரசேகர ஊடாக திட்டத்தை செயற்படுத்திவருகின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என பிரதமர் மஹிந்தவின் தரப்பிலுள்ள அமைச்சர்கள் சிலர் வலியுறுத்திவந்தாலும் ஜனாதிபதி தரப்பிலுள்ள அமைச்சர் சரத் வீரசேகர உள்ளிட்டோர் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். மாகாண சபை முறைமை தேவையில்லை எனவும் வலியுறுத்தி வருகின்றனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் பிரதமர் சந்திப்பு நடத்தினார். விரைவில் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் கோரினார்.

நிலைமை இப்படி இருக்கையில் மாகாண சபை தேர்தல் அவசியமில்லை என சரத் வீரசேகர எப்படி கூறமுடியும்?. பிரதமரின் கட்டளையைக்கூட மீறி கருத்து வெளியிடக்கூடிய பலம் சரத் வீரசேகரவுக்கு எப்படி கிடைத்துள்ளது?

அந்த சக்திதான் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச. மஹிந்த ராஜபக்ச 50 வருடங்களுக்கு மேல் அரசியல் நடத்தி வருபவர். இரண்டு தடவைகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர். அவரின் கருத்தை சரத் வீரசேகரவால் சவாலுக்கு உட்படுத்த முடிகின்றதெனில், அதன் பின்னணியில் ஜனாதிபதிதான் செயற்படுகின்றார். ஜனாதிபதியின் நிலைப்பாட்டைத்தான் சரத் வீரசேகர போன்றவர்கள் வெளியிட்டுவருகின்றனர். இன்று அரசுக்குள் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது. அதனால் நெடுங்காலம் பயணிக்கமுடியாது' என்றார். (த-44)

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 25 . 04 . 1994



அரக்கன் அழிவில் 03 . 01 . 2016

அமரர் தவராசா கபிஷாந்

பிறப்பு என்பது இயற்கையின் நியதி
இறப்பு என்ன விதிவிலக்கா? - இருந்தும்
இத்தனை விரைவில் வருவது
இறைவன் செய்த சதிக்கணக்கா?
பிரிவினைத் தாங்கும் வரங்களைத் தானே
இறைவனை தினம் தினம் வேண்டி வந்தோம் - இருந்தும்
இவ் வரத்தினை தந்திட மறுத்த இறைவனோ
5 ஆண்டுகளாகியும் உன் இறப்பின் காரணத்தை
புரிய வைக்கவில்லையே!!!

அரியாலை,
யாழ்ப்பாணம்.
076 971 5618

22 வருடங்கள் உம்முடன்
வாழ்ந்த நினைவுகளுடன் என்றென்றும்
குடும்பத்தினர்.

## பொது அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கு அமைய பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொது மக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்கில், வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபைக்குரித்தான பொதுச்சந்தைகளில் உள்ள கோழி இறைச்சி கடைகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் கோழிகள் உரித்து இறைச்சியாக விற்பனை செய்யப்படுவது 15.01.2021 தொடக்கம் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. இதனை மீறி விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

03.01.2021

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

## கொவிட் தொற்றுடன் 38 பெண்கள் பிரசவம்

### குழந்தைகள் ஆரோக்கியம்

கொழும்பு, ஜன. 3

கொவிட்-19 தொற்றுக்குள்ளான 38 கர்ப்பிணித் தாய்மார்கள் கடந்த டிசெம்பர் முதலாம் திகதி முதல் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 40 குழந்தைகளைப் பிரசவித்துள்ளனர் என்று கொழும்பு கிழக்கு ஆதார மருத்துவமனையின் பிரசவ மற்றும் மகப்பேற்று மருத்துவ நிபுணர் தெரிவித்தார். கர்ப்பிணித் தாய்மார்கள் அனைவரும் ஆரோக்கியமான குழந்தைகளை பிரசவித்துள்ளனர். பிரசவத்தின் பின்னர் இரு குழந்தைகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ம-ரி5)

ஓராண்டு நினைவு...

மலர்வு 16 07 1937



உதிர்வு 17 12 2019

அமரர்
வன்னியசிங்கம் இரத்தினசிங்கம்

03.01.2021 ஞாயிற்றுக்கிழமை

கண்ணிற் பிறக்கும் கண்ணீர் அனைத்தும் தீர்ந்தது!
இதயத்திலிருந்த விளக்கும் அணைந்தது! வீடும் இருண்டது!
காற்றும் நின்றது! கனவுகள் கலைந்தது! மலை சாய்ந்தது!
அழுகின்றோம்... அழுவோம்.... ஆறவில்லை எம் இதயம்
உங்கள் நினைவை விட்டு அகலவில்லை
என்றும் உங்கள் நினைவுகள் தொடரும்...

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மாலை திருமண சேவை

Maalai Matrimony
இணையவழி திருமண சேவை
www.maalai.com



Tel: 077 408 8241, 074 052 2838

கடந்த ஆண்டு 300 க்கும் மேற்பட்ட திருமணங்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடாத்திய ஒரே திருமண சேவை.

எமது மாலை இணைய திருமண சேவை நிலையத்தில் இன்றே இணையுங்கள்.

மணமகள் தேவை

01. Reg. No: 71532
கிறிஸ்தவம் குடும்பம்
04.05.1988
அனுஷம் 4 ம் பாதம் (விருச்சிகம்)
5' 3"

02. Reg. No: 68062
இந்து கௌரவ குடும்பம்
1986
France (PR)
5' 10"
உத்திரட்டாதி (மீனம்)

03. Reg. No: 42488
இந்து கௌரவ குடும்பம்
17.03.1990
170 cm
அனுஷம் (விருட்சிகம்)

மணமகன் தேவை

04. Reg. No: 52532
இந்து கௌரவ குடும்பம்
23.02.1994
புனர்பூசம் (கடகம்)
5' 2"

05. Reg. No: 33723
இந்து கௌரவ குடும்பம்
22.08.1988
5' 4"
கேட்டை (விருட்சிகம்)

06. Reg. No: 04518
இந்து கௌரவ குடும்பம்
17.11.1982
5' 3"
கேட்டை (விருட்சிகம்)

# கொரோனா நெருக்கடிகள் புத்தாண்டில் தொடரக் கூடா!

## அஜித் ரோஹண தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.3**

**கொரோனாவால் கடந்த வருடத்தில் எதிர்கொண்ட நெருக்கடிகள் புதிய வருடத்தில் தொடர்வதற்கு இடமளிக்கக்கூடாது. அதற்கான முழுமையான ஒத்துழைப்பை நாட்டு மக்கள் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனாப் பரவலால் கடந்த வருடத்தில் ஒன்பது மாதங்கள் வரை நாம் பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்தோம். இன்னும் சிலபகுதிகள் முடக்கப்பட்டே உள்ளன. எனினும், உதயமாகியுள்ள புதிய வருடத்தை வரவேற்பதுடன் கூந்த வருடத்தில் நாம் எதிர்நோக்கி வந்த நெருக்கடி நிலைமை மீண்டும் உருவாக இடமளிக்கக்கூடாது. அதனைத் தடுப்பது என்றால் அனைவரும் தனிமைப் படுத்தல் சட்டவிதிகளை கடைப்பிடிப்பதுடன், சுகாதார வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். மேலும் தேவையின்றி வீட்டை விட்டு வெளிப் பிரதேசங்களுக்கு செல்வதையும் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்றார். (வ-இ)

**அலுவலக பணியாளர் VACANCY**

யாழ்.பிறவுண் வீதியிலுள்ள நிறுவனமொன்றில் அலுவலகப் பணியாளருக்கான வேலைவாய்ப்பு உண்டு. ஆங்கில எழுத்தறிவும் (சிறப்புத் தேர்ச்சி) கணினி Typing உம் தெரிந்திருத்தல் வேண்டும். வயதெல்லை கிடையாது.

தொடர்பு: 077 715 7070

**உடல் எடை குறைய வேண்டுமா?**

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

**தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?**

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா**

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?


**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 . 08 . 1937 | 01 . 01 . 2021 |



**தம்பிப்பிள்ளை நமசிவாயம்**
**(நவஜீவன் போட்டோ ஸ்தாபகர்)**

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நமசிவாயம் அவர்கள் கடந்த (01.01.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார், குரும்பசிட்டியை சேர்ந்த காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மாரிமுத்து தம்பதிகளின் அருமைப் புதல்வனும், சிறுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற S.N கந்தையா பாக்கியம் தம்பதியரின் அருமை மருமகனும், கீர்த்திகா (பிரான்ஸ்), அஞ்சணன், ஹரிகாலன், ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், கோபிராஜ் (பிரான்ஸ்), யமுனா (பட்டதாரிப் பயிலுனர் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம்), ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு, சின்னத்துரை, மற்றும் மணோன்மணி (குரும்பசிட்டி), சுப்பிரமணியம் (கோப்பாய்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், வேலுப்பிள்ளை (அமெரிக்கா), காலஞ்சென்ற இரவீந்திரநாத் (நவாலி) ஆகியோரின் சகலனும், வைத்தியநாதன் (ஓய்வுநிலை கிராம அலுவலர்), ஸ்ரீஸ்கந்தராசா (ஓய்வுநிலை கிராம அலுவலர்), ஆகியோரினதும், காலஞ்சென்ற ஸ்ரீபாலசரஸ்வதி, காலஞ்சென்ற சிவனேஸ்வரி, மற்றும் பாலராணி (சிறுப்பிட்டி), மல்லிகாதேவி (சிறுப்பிட்டி) ஆகியோரினதும் அன்பு மைத்துனரும், அசுவசேனன் (பிரான்ஸ்), கிருஸ்ணவி (பிரான்ஸ்), ரித்திக்சரண் (சிறுப்பிட்டி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சிறுப்பிட்டி இல்லத்தில் இடம்பெற்று முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் கடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிறுப்பிட்டி வடக்கு,**
**நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 355 3368**

*வடக்கு மாகாண*

## ஆயுள்வேத மருத்துவ துறைக்கு புதிய ஆணையாளர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன.3

வடக்கு மாகாண சுதேச மற்றும் ஆயுள்வேத மருத்துவ ஆணையாளராக மருத்துவ கலாநிதி கனகேஸ்வரி ஜெபநாம கணேசன் நியமிக்கப்பட்டுள்ளார். வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸால் அந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக வடமாகாண ஆயுள்வேத மருத்துவப் பணிப்பாளராகக் கடமையாற்றிய மருத்துவர் திருமதி சி. துரைரத்தினம் கைதடி ஆயுள்வேத மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். புதிய ஆணையாளராகப் பதவியேற்ற வடமாகாண சுதேசிய ஆயுள்வேத மருத்துவர் திருமதி கனகேஸ்வரி ஜெபநாம கணேசன் கடந்த முதலாம் திகதி முதல் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். (ப-50)

## முதலாம் பக்க தொடர்ச்சிகள்

*தனியார்...*

மீண்டும் தொடங்க திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளன என கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பேசிய தலைமை தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர, உடனடியாக கடுமையான சுகாதார நெறிமுறைகளின் கீழ் தனியார் கல்வி வகுப்புகள் இயங்க அனுமதிக்கப்படும் என்று உறுதிப்படுத்தினார். (ஒ.இ)

*எங்கள்...*

உங்கள் திட்டம் என்று, புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர் குழுவின் திட்டத்தை அம்பலப் படுத்தியிருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்.

இது தொடர்பில் நிபுணர் குழுவுக்கு அவர் அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேன்மைமிகு மற்றும் படித்த பெரியோர்கள் உங்கள் நிபுணத்துவ குழுவை அலங்கரித்துக் கொண்டிருப்பினும் எங்களுடைய அதுவும் முக்கியமாக தமிழ் மக்களின் கருத்துரைகள் எதுவுமே உங்கள் குறித்த குழுவால் பரிசீலிக்கப்படமாட்டாது என்பது எமது பார்வைபாற்பட்ட கருத்தாகும்.

எம்மிடம் கருத்துக்கள் கோரி பத்திரிகைகளில் விளம்பரம் செய்தமைக்கு காரணம் எல்லோரினதும் கருத்துக்களையும் கேட்டறிந்தோம் என்று உலகத்துக்குப் பறை சாற்றவே என்று நாம் எண்ணுகின்றோம்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எம்மிடம் இருந்து தமிழ்ப் பெயர்களைப் பெற்றபின் முதலில் முற்றிலும் சிங்கள மக்களைக் கொண்ட ஆணைக் குழுவையே நீங்கள் நியமித்தீர்கள். அதுவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இவ்வாறான பெரும்பான்மையினரை மட்டுமே நியமித்தீர்கள். பொதுமக்கள் தமது ஏமாற்றத்தை வெளியிடப் போய் பின்னர் ஒரு தமிழரும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

ஏழு மாகாண பெரும்பான்மையினர் தமக்கு இயைபான சட்டத்தை இயற்றி மற்றைய இரு மாகாண பெரும்பான்மையினரின் உரிமைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பாதிக்கும் வண்ணம் நடவடிக்கைகளை எடுக்கவிருப்பதாக நாம் கணிக்கின்றோம். கடந்த 3 ஆயிரம் வருடங்களுக்கு மேலாக தமிழ் பேசும் பெரும்பான்மையிரே இவ்விரு மாகாணங்களிலும் இருந்து வந்துள்ளார்கள் என்பதே உண்மை. ஆனால் புதிய அரசமைப்பை தயாரிக்கும் செயற்பாட்டில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை என்ற அவச்சொல் வராதிருக்கவே நாம் எமது கருத்துக்களை பிறிதொரு ஆவணத்தில் உள்ளடக்கி இத்துடன் இணைத்துள்ளோம்.

ஆனால் நாம் முன்னுரையாக சில விடயங்களைக் கட்டாயமாக எடுத்துக்கூற வேண்டியுள்ளது. இதில் நாம் கடந்த கால உண்மைகளைச் சுட்டிக்காட்டியுள்ளோம். அரசு வேண்டுமெனில் முன்னர் செய்த அதே தவறுகளை இம்முறையும் இழைக்காது இந்தப் புதிய முயற்சியின்போது இந் நாட்டின் சகல இன மக்களினதும் எதிர்பார்ப்புக்களையும் அரசியல் அபிலாசைகளையும் நிறைவுசெய்யும் விதத்தில் ஒரு தகுந்த அரசமைப்பை வரைந்து நாடாளுமன்றத்தில் பதிந்து நிறைவேற்றலாம், என்றுள்ளது. (ஒ.இ)

## அடக்கத்தால் வைரஸ் பரவும் என்பதற்கு ஆதாரம் இல்லை

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடலங்களை அடக்கம் செய்தால் வைரஸ் பரவல் அதிகரிக்கும் என்பதை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று இலங்கை சமூக மருத்துவர்கள் கல்லூரி தெரிவித்துள்ளது. ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கட்டாய விதியை ஏற்றுக்கொண்டோம். எனினும் அடுத்தடுத்த சான்றுகளின் அடிப்படையில் அதை மறுபரிசீலனை செய்ய நாம் தூண்டப்பட்டோம்.

கொரோனா தொடர்பில் உலகில் 85 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறிவியல் இலக்கியங்கள் வெளியாகியுள்ளன. இறந்த உடலத்தின் வழியாக வைரஸ் பரவுகிறது என்பதற்கு எந்த ஒரு பதிவும் வெளியாகவில்லை என்றும் கல்லூரி தெரிவித்துள்ளது. (வ-இ)

# உடலை அடக்கம் செய்யும் உரிமையை முஸ்லிம் மக்களுக்கு வழங்கவேண்டும்

## கவனத்தை ஈர்த்த மைத்திரியின் கருத்து



**கொழும்பு, ஜன.3**

**கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்யும் உரிமையை முஸ்லிம் மக்களுக்கு வழங்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

கொரோனா வைரஸ் தொற்றால் இறக்கும் அனைத்து நபர்களின் உடல்களைத் தகனம் செய்ய வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி அங்கம் வகிக்கும் தற்போதைய பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு எதிராக அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளமை அனைத்து தரப்பினரின் கவனத்தையும் திருப்பியுள்ளது. இதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் கொரோனாத் தொற்றால் இறக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் எனக் கூறி காணொலி ஒன்றை வெளியிட்டிருந்தார்.

சிங்கள பௌத்த அடிப்படைவாதிகளிடம் அடிபணியாது முஸ்லிம் மக்களின் சமய மற்றும் கலாச்சாரத்துக்கு அமைய அடக்கம் செய்யும் உரிமையை வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ப)

# உக்ரைனில் 'நெகட்டிவ்' இலங்கையில் 'பொசிடிவ்'

### சிக்கினர் 6 சுற்றுலாப் பயணிகள்



கொழும்பு, ஜன.3

கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் இலங்கைக்கு வந்த உக்ரைனைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் அறுவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார சேவைகள் பிரதி இயக்குநர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளதாவது:

உக்ரைனில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனை முடிவுகள் அவர்கள் தொற்றால் பாதிக்கப்படவில்லை எனத் தெரிவித்தன. எனினும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளில் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு சிகிச்சை வழங்க சில அரச மருத்துவமனைகள் முன்வந்துள்ள போதிலும் சுற்றுலாப் பயணிகள் தயக்கம் வெளியிட்டுள்ளனர். இதனால் அவர்களுக்கு சிகிச்சை வழங்குவது தொடர்பில் தனியார் மருத்துவமனைகளுடன் அரசாங்கம் பேச்சு மேற்கொண்டுள்ளது - என்றார். (வ-இ)

# நாட்டின் அடுத்த தலைமை ராஜபக்சவினர் அல்லர்!

*2015இல் புலுடா விட்ட சோதிடர் கூறுகின்றார்*

கொழும்பு, ஜன. 3

இலங்கைக்கு அடுத்த முறை புதிய தலைமைத்துவம் ஒன்று கிடைக்கவுள்ளது என இலங்கையின் பிரபல சோதிடர் சந்திரசிறி பண்டார தெரிவித்துள்ளார்.

அந்த நபர் தற்போதைய அரசின் அமைச்சராக செயற்படுகின்றார் என்றும் அவர் சிம்ம ராசி உடையவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் ராஜபக்ச குடும்பத்துக்கு வெளியே உள்ள ஒருவராவார். அவரது பெயரை தற்போது வெளிப்படுத்த முடியாது. அவரது ஜாதகம் என்னிடம் உள்ளது என்று கூறியுள்ளார்.

இதேவேளை, 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ச வெற்றி பெறவில்லை என்றால் துப்பாக்கியால் நானே என்னை சுட்டுக்கொல்வேன் என்று நான் கூறியிருந்தேன். எனினும், அது சோதிடத்தில் இருந்த விடயம் அல்ல. மஹிந்த ராஜபக்சவை அரசியல் ரீதியில் வெற்றிபெறச் செய்வதற்கே அன்று நான் அவ்வாறு கூறினேன் என்றும், இணையத்தள ஊடகமொன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சோதிடர் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

# சிரேஷ்ட பிரிகேடியர்கள் ஐவருக்குப் பதவி உயர்வு

கொழும்பு, ஜன.3

இலங்கை இராணுவத்தின் சிரேஷ்ட பிரிகேடியர்கள் ஐவர் மேஜர் ஜெனரல் தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் பரிந்துரைக்கு அமைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பிரிகேடியர் மனோஜ் லமாஹேவா, பிரிகேடியர் தம்மி ஹேவகே, பிரிகேடியர் அஜித் திஸாநாயக்க, பிரிகேடியர் மஞ்சுள கருணாரத்ன, பிரிகேடியர் லால் சந்திரசிறி ஆகியோருக்கே பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை இராணுவ விசேட படையணியின் 24 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு அதிலுள்ள 560 பேருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. விசேட படையணியைச் சேர்ந்த பெருமளவானவர்கள் ஒரே தடவையில் பதவி உயர்த்தப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என இலங்கை இராணுவம் குறிப்பிட்டுள்ளது. (வ-இ)

# உள்நாட்டு பால் உற்பத்தியை 70 வீதமாக அதிகரிக்க முடிவு!

கொழும்பு, ஜன.3

உள்நாட்டுப் பால் உற்பத்தியை இந்த ஆண்டில் 70 சதவீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் தலைவர் மஞ்சுள மாகமகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதுவரை உள்நாட்டுப் பால் உற்பத்தியானது பொதுமக்களின் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு போதுமானதாக இல்லை.

அதனாலேயே வெளிநாடுகளில் இருந்து அதிகளவான பால்மா பொதிகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அதற்கு அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுகின்றது. இவற்றை நிவர்த்திசெய்ய மாறுபட்ட சுற்றாடல் நிலைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கால்நடைகளை இனப்பெருக்கம் செய்வது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது- என்றார். (ற-இ)



கொடிகாமம் போக்கட்டி அ.த.க பாடசாலையில் தொற்று நீக்கும் நடவடிக்கை கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டது. சாவகச்சேரி பிரதேச சபையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்காக பாடசாலை வகுப்பறைகள் மற்றும் சுற்றுச்சூழல் என்பன தொற்று நீக்கம் செய்யப்பட்டன. (ரி5-159)

# சவால்களை எதிர்கொண்டு அபிவிருத்திக்கு உழையுங்கள்

## கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு, ஜன.3

நாடொன்றை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லும் போது சவால்களை எதிர்கொண்டு செயல்பட வேண்டும். இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்று வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

புதுவருடப் பிறப்பான நேற்றுமுன்தினம் கடமைகளை ஆரம்பித்த பின்னர், ஊடகத்துறை அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களின் பிரதானிகள், அதிகாரிகள் மற்றும் அமைச்சின் ஊழியர்கள் முன்னிலையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சவால்களை முறையாக எதிர்கொண்டதால் நாட்டுக்குப் பல வெற்றிகள் கிடைத்துள்ளன. கடந்த வருடத்தில் கொவிட்19 தொற்றுக் காரணமாக ஏராளமான நாடுகள் பின்னடைவுகளைச் சந்தித்திருந்தன. நாட்டைக் கட்டியெழுப்பும் போது சவால்களைப் பொறுப்பேற்று முன்னெடுத்துச் சென்று, உரிய இலக்கை அடைய வேண்டும். நிறுவனங்களுக்கு இடையில் இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் அரச சேவையைத் தரமாக



முன்னெடுக்க முடியும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சுபீட்சத்தின் தொலைநோக்குக் கொள்கைத் திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும்- என்றார். (ற-இ)

## ஜெனீவாத்...

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

'உங்கள் படைகள் போர்க்குற்றம் ஏதும் இழைக்கவில்லை என்று நீங்கள் கூறுவது உண்மை என்றால், சர்வதேச விசாரணைகளைக் கண்டு அஞ்சுவது ஏன்?' என்று நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது படையினர் உண்மையில் நல்லொழுக்கம் மிக்கவர்கள். மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள். அவர்கள் தமது உயிர்களை அர்ப்பணித்து விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்த பல்லாயிரக்கணக்கானத் தமிழ் மக்களை மீட்டவர்கள். அப்படியானவர்கள் மீது போர்க்குற்றம் சுமத்துவது எந்த வகையில் நியாயமானது?

நாட்டின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட எமது படையினர் ஒருபோதும் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்பதை ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அரங்குகளில் நாம் பல தடவைகள் கூறி விட்டோம். இதைத் தமிழ் அரசியல்வாதிகள் உணர வேண்டும். சுயலாப அரசியல் நடத்தும் அவர்கள் தங்கள் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். செய்யாத குற்றங்களுக்காக எமது படையினரின் தியாகங்களைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று இந்தத் தமிழ் அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

உண்மையில் எமது படையினர் போர்க் குற்றங்கள் செய்திருந்தால் அதற்கான விசாரணையை நாம் உள்நாட்டில் நடத்தலாம் அல்லது சர்வதேசத்தில் கோரலாம். அப்படி எதுவும் இடம்பெறாத நிலையில் எதற்கு விசாரணையை நாம் நடத்த வேண்டும்? எதற்கு சர்வதேச விசாரணையை நாம் எதிர்கொள்ள வேண்டும்?, என்றும் அவர் கேள்வி எழுப்பினர். (ஓ.22)

## சர்வதேச...

சுவது ஏன்? இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் கமால் குணரத்னவைப் பார்த்துக் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன்.

'இலங்கை இராணுவம் படுகொலைகளில் ஈடுபடவில்லை. போர்க்குற்றங்களை இழைக்கவில்லை. எனவே, நாம் எதற்கும் அஞ்சமாட்டோம்' என்று ஜெனரல் கமால் குணரத்தன வெளியிட்டிருந்த கருத்துக்குப் பதிலளித்தே இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஆங்கில அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

'ஜெனரலின் கருத்துக்களை நான் வரவேற்கின்றேன். இது எங்களுக்கு நம்பிக்கையைத் தருகின்றது. இலங்கைப் படைகள் இந்த 'நல்ல ஜெனரல்' கூறியமை போன்று நல்லொழுக்கத்தின் ஒரு முன்னுதாரணமாக இருந்திருந்தால், இலங்கை ஏன் சர்வதேச விசாரணைக்கு அஞ்ச வேண்டும்? சர்வதேச அரங்கில் எங்கள் முன்மாதிரியான நடத்தையை நாம் நிரூபிக்க முடிவதோடு எங்கள் மீதான கெட்ட பெயரையும் ஒரேயடியாகத் துடைத்தழிக்க முடியும் அல்லவா? இந்த நல்ல ஜெனரலின் கருத்தை அறிக்கையைக் கவனத்தில் எடுத்து, அதனடிப்படையில் இலங்கைப் படைகளால் செய்யப்பட்டவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக எந்தவொரு சர்வதேச விசாரணையையும் எதிர்கொள்ள இலங்கை தயாராக உள்ளது என அரசு குறிப்பாக வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அறிவிக்க வேண்டும்.

இறுதிப் போர்க்காலமான 2009ஆம் ஆண்டு மே மாதம் ஒட்டிய காலத்தில் என்ன நடந்தது என்பதை போர்க்களத்தில் நெருக்கமாக இருந்த இந்த நல்ல ஜெனரல் நன்கு அறிந்திருப்பார், என்றுள்ளது. (ஓ.22)

## வங்கிக்கு...

னர். இன்று அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்தது. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் இதனை உறுதிப்படுத்தினார்.

கொழும்பிலிருந்து வந்திருந்த இராணுவச் சிப்பாய் கடந்த 21 ஆம் திகதி அச்சுவேலியிலுள்ள வங்கிக்குச் சென்றிருந்தார். அவர் கொழும்பு திரும்பிய நிலையில், கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் வங்கி அலுவலர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ.த,26)

## புத்தாண்டு....

வர் விபத்தில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில் கோண்டாவில் உப்பு மடம் சந்தி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நடைபெற்றது.

கோண்டாவில் மேற்கு கோண்டாவிலைச் சேர்ந்த சின்னராசா உதயகுமார் (வயது 58) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தார்.

உப்புமடம் சந்தி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையாக, யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கிய திசையில் வீதிக் கரையில் துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்தபோது அதே திசையில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாகவும், காயமடைந்த அவரை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்த போதும் அவர் உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் நேற்று மேற்கொண்டார். (ஓ.26)

## காரைநகர்...

தோர் தொலைபேசியூடாக மிரட்டுகின்றனர் எனத் தெரியவருகின்றது.

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரியை கடமையைச் செய்யவிடாது தடுத்து மிரட்டிய குற்றச்சாட்டுக்காக வர்த்தகரும், அரசியல்வாதியுமான தி.துவாரகேஸ்வரனுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்று பிடியாணை பிறப்பித்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில் கடந்த சில நாள்களாக சுகாதார மருத்துவ அதிகாரியின் தொலைபேசிக்கு அறிமுகமில்லாத இலக்கங்களிலிருந்து அழைப்பு எடுக்கும் நபர்கள் அவரை மிரட்டி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.5)

## வியாபாரிகள்...

னைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆனாலும் இன்னமும் 7 வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த 20பேர் வரையில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது. மருதனார்மடம் சந்தைக் கொத்தணி கடந்த மாதம் 11ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. மருதனார்மடம் சந்தையில் மரக்கறி வியாபாரம் மேற்கொள்பவர்கள், அங்கு வந்து செல்பவர்கள், மருதனார்மடம் பொதுச் சந்தையைச் சூழவுள்ள வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

மருதனார்மடம் சந்தைக் கொத்தணியுடன் தொடர்புடையோர் என 139பேர் நேற்று முன்தினம் வரையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மருதனார்மடம் சந்தையைச் சூழவுள்ள 7 வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த 20பேர் வரையில் இதுவரை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் வழங்கிய முகவரிகள், தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டும் அவர்களை கண்டறிய முடியவில்லை என்றும் கூறப்படுகின்றது. (ஓ,5)

## உதயன் மீதான...

அனைவருக்கும் முதுகெலும்பு இருக்க வேண்டும். நல்லாட்சியில் எமக்கு அந்த முதுகெலும்பு இருந்தது. அதனால் விமர்சனங்களை எதிர்கொண்டோம். ஊடகங்களை முழுச்சுதந்தி ரத்துடன் இயங்க அனுமதித்தோம். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளன்று அவரது ஒளிப்படத்தையும் சொற்களையும் வெளியிட்டமை தொடர்பில் 'உதயன்' பத்திரிகை மீது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளியிட்டுள்ள வன்மையான கண்டனத்திலேயே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற தாக்குதலையடுத்து சில நாள்களுக்கு மட்டும் சமூக ஊடகங்களை முடக்கி வைத்திருந்தோம். இன ரீதியான மத ரீதியான முறுகல் நிலையைத் தவிர்க்கும் வகையிலேயே இந்த முடக்கல் நிலையை அன்று விதித்திருந்தோம். ஜனாதிபதி என்ற வகையில் அரசு என்ற வகையில் விமர்சனங்களுக்குப் பயந்து அன்று சமூக ஊடகங்களை நாம் முடக்கவில்லை. எனினும், அன்றைய நாள்களில் பத்திரிகைகளும், வானொலிகளும், தொலைக் காட்சிகளும் சுதந்திரமாக இயங்கின.

நான் அன்று ஜனாதிபதி. இன்று முன்னாள் ஜனாதிபதி. அன்றும் சரி இன்று சரி ஊடகங்களை மதிக்கின்றேன். விமர்சனங்களை ஏற்கின்றேன்.

ஆட்சிப்பீடத்தில் இருந்த ஜனாதிபதிகளில் நான் வித்தியாசமானவன். என்னைக் கொலை செய்ய முயன்ற குற்றத்துக்காக சிறையிலிருந்த விடுதலைப்புலி களின் முன்னாள் உறுப்பினருக்குக் கூட நான் பொதுமன்னிப்பு வழங்கியிருந்தேன். மூவின மக்களின் மனதையும் நான் வென்றிருந்தேன்.

அதனால் சில ஊடகங்கள் என்னை வாழ்த்தின. சில ஊடகங்கள் என்னைத் தூற்றின. ஆனால், நான் அமைதியாக வாழ்த்துதலையும், தூற்றுதலையும் ஏற்றேன். மீண்டும் மீண்டும் சொல்கின்றேன் ஊடகங்கள் மீது எவரும் கைவைக்க வேண்டாம். அது ஜனநாயகத்தின் மீது கைவைப்பதற்குச் சமமானதாகும். அந்தவகையில் 'உதயன்' மீதான வழக்குத் தாக்கலைக் கண்டிக்கின்றேன், என்றார். (ஓ.5,22)

## மாணவிகளுக்கு

விக்கின்றன. ஒவ்வொரு மாதமும் சுமார் 1.2 மில்லியன் பாடசாலை சிறுமிகள் மாதவிடாய் காலத்தில் பாடசாலைக்கு செல்வதைத் தவிர்க்கிறார்கள் என்று கல்வி அமைச்சு நடத்திய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

பாடசாலைகளில் பயிலும் 65 சதவீத சிறுமிகள் கிராமப்புற மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் முறையான சுகாதார 'நப்கின்களைப்' பயன்படுத்துவதில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலைமை சிறுமிகளின் கல்வி நடவடிக்கைகளை பாதிக்கும் என்பதால், அனைத்து அரச பாடசாலைகளிலும் 6ஆம் தரத்துக்கு மேல் படிக்கும் சிறுமிகளுக்கு இலவச சுகாதார 'நப்கின்களை' வழங்க கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பான முன்மொழிவு விரைவில் அமைச்சரவை ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன. (ஓ.இ)

## விலையை...

அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு, வெங்காயம், கடலை, நெத்தலி மற்றும் ரின்மீன் உள்பட 10 அத்தியாவசிய பொருள்களுக்கே எதிர்வரும் 6 மாதங்களுக்கு விலை வரையறைசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. வரையறை விலையில் அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கக் கூடியவர்களிடமிருந்து விலைமனுக்களை கோரவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதுமுள்ள அனைத்து சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் வரையறை விலையில் பொருள்களை பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஓ.த.இ)



## அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன. 3

திருகோணமலை கடற்கரையில் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி சுட்டுக் கொலை செய்யப்பட்ட 5 மாணவர்களின் நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஈகைச்சுடரேற்றினார். இந்தப் படுகொலை தொடர்பில் சிறப்பு அதிரடிப் படையினர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ.26)

# முல்லையில் மினி சூறாவளி: மீனவர் வாடி சேதமடைந்தது

முல்லைத்தீவு, ஜன. 3
முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிலாவத்தை தீர்த்தக் கரைப் பகுதியில் நேற்று மாலை 4.15 மணியளவில் வீசிய மினி சூறாவளி காரணமாக மீனவரின் வாடி ஒன்று சேதமடைந்தது.
4:15 மணியளவில் திடீரென கடற்கரையில் இருந்து இந்த மினி சூறாவளி வந்தது. அது திடீரென தனது வாடியை ஊடறுத்து சென்றது என மீனவர் தெரிவித்தார். இந்த மினி சூறாவளியால் வாடியின் கூரைப்பகுதி தூக்கி வீசப்பட்டுள்ளதோடு வாடியில் இருந்த பொருள்கள் சிலவும் சேதமடைந்துள்ளன. எனினும் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. (ம-246)







வவுனியா நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி, நீதிபதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக புதுவருட உறுதியுரையை நிறைவேற்றினர். (ரி-5)

பொன்னாலை-மூளாய்

## கடலுணவு வியாபாரிகளில் எவருக்கும் தொற்று இல்லை

பொன்னாலை மற்றும் மூளாய் பிரதேசங்களில் கடல் உணவு விற்பனை செய்யும் வியாபாரிகளிடம் கடந்த புதன் கிழமை பெறப்பட்ட மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என உறுதிசெய்யப்பட்டுள்ளது.
பொன்னாலை சந்தியில் உள்ள சந்தை வியாபாரிகள் மற்றும் அங்கு கடலுணவுகளைக் கொள்வனவு செய்து வெளி இடங்களில் விற்பனை செய்யும் வியாபாரிகள் உள்ளடங்கலாக 44 பேரிடம் இந்த மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

## படைப் புழு தொடர்பில் ஆராய ருவாண்டா நிபுணர்கள் வருகை

கொழும்பு, ஜன.3
சோளப் பயிர்ச்செய்கையைப் பாதித்துள்ள படைப்புழு தொடர்பில் ஆராய்வதற்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்கு ருவாண்டாவின் 6 நிபுணர்கள் கொண்ட குழுவினர் இலங்கை வந்துள்ளனர் என கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மிஹார ஹேபா தெரிவித்துள்ளார்.
மேலும் அவர்களுக்கு கட்டுநாயக்கவில் வைத்து மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அண்டிஜென் பரிசோதனையில் தொற்று இல்லை என்பது உறுதியானது.
அவர்கள் படைப்புழு அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள பகுதிகளுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர். என்றார். (வ-இ)

## விவசாயி சடலமாக மீட்பு

மட்டு.ஜன.3
ஓட்டமாவடி மஜ்மா நகர் கிராமத்தில், விவசாயி ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான முஹமது கனீபா சுலைமா லெப்பை (வயது 52) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (க-150)

**புதிய வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் புதிதாக கட்டப்பட்ட வீடு விற்பனைக்குண்டு
தொடர்பு: 076 161 9826 (உரிமையாளர்)

**வீடு வாடகைக்கு**
கச்சேரி நல்லூர் வீதியில் 10 அறைகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு.
(நிறுவனங்களுக்கு உகந்தது)
076 0353492

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் இருந்து இருபாலை வீதியில் 7 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக. தரகர் தேவையில்லை.
077 2880 152, 077 505 8561, 074 075 4204
(பழனியாண்டவர் கோயில் முன்பாக)

**விளையாட்டுத் துறையில் ஆர்வம் உள்ளவரா நீங்கள்?**
உதயன் பத்திரிகையில் விளையாட்டுத்துறைச் செய்தியாளராக பயிற்சிகள்; களப் பயிற்சிகளைப் பெறுவதற்கு வாய்ப்பு.
பயிற்சிகளின் நிறைவில் திறமையின் அடிப்படையில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும்.
உங்கள் சுயவிவரக் கோவையை 05.01.2021ஆம் திகதிக்கு முன்னர் info@uthayan.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவையுங்கள்.

**வேலையாட்கள் தேவை**
யாழ் நகரில் இயங்கும் வர்த்தக நிலையம் ஒன்றிக்கு வேலையாட்கள் தேவை.
T.P: 021 2222 505, 077 639 9447

**ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்**
உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
T.P: 077 658 9443 யாழ்ப்பாணம்

**வீடு வாடகைக்கு**
கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் (Medical faculty அருகாமை) அமைந்துள்ள 4 அறைகளுடன் இணைந்த 4 குளியலறைகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. வாடகை ரூபா 25,000 (பேசித்தீர்மானிக்கலாம்)
தொடர்பு:071 040 8301,077 431 6132

**காணி தேவை**
யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், மானிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசத்திற்குள் 10 தொடக்கம் 30 வரையான பரப்பளவு காணி தேவை. தரகர் தேவையில்லை.
தொடர்புகொள்ளவும்: 076 2212 037

**கடை வாடகைக்கு விடப்படும்**
130/01, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள 200 சதுர அடியைக் கொண்ட முதலாம். 136A நிலத்தோட கடை வாடகைக்கு விடப்படும்.
வெலிங்டன் சந்தி அருகில்
077 360 9005

**VACANCIES**
பிரபல கல்லூரியின் கிளிநொச்சிக் கிளைக்கு
1. ENGLISH TEACHER
2. Course Coordinator
3. Receptionist
Sent Cv's within one week
More Details. 0777-596148
BRITISH COLLEGE OF EDUCATION
email.- britishcollegekandy@gmail

**ATC INSTITUTE INUVIL**
தரம்: 06 முதல் O/L வரை
Zoom ஆரம்பம்: 04.01.2021
திங்கள் காலை 08 மணி
(புதிய 6 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்பு ஆரம்பம்)
மேலதிக தொடர்பு: 075 041 5193
குறிப்பு: (பெற்றோர்கள் (Date) காலை 08.00 மணியில் இருந்து அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்)

**அன்பொளி கல்வியகம்**
தரம் 3, தரம் 4, தரம் 5 — கல்வியாண்டு-2021 ZOOM வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன
இணையவிரும்பும் மாணவர்கள்
076 174 7490
எண்ணுடன் தொடர்பு கொண்டு முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

**கல்வி உலகில் புதியதோர் உலகம்**
**நியூட்டன் அக்கடமி**
டச்சு றோட், கோப்பாய் தெற்கு
தரம் 3 முதல் O/L வரை
ZOOM வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
புதிய அனுமதிகளை பதிவு செய்துகொள்ளுங்கள்
077 193 0298 நிர்வாகி S.K. மயூரன்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மலை : 33
வள்ளுவர் ஆண்டு : 2051
மார்கழி : 19
ஞாயிற்றுக்கிழமை (03.01.2021)
சிகரம் : 29

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

> சந்தைகள்தோறும் வந்ததே கொரோனாவென்று வடக்கே
> முந்திக்கொண்டு முழுதையும் உடனே பூட்டிட்டார் – விந்தையாய்
> வீதிகள் தோறும் முளைத்திட்ட புதுச்சந்தைகளால்
> பாதிப்பொன்றும் வராதாவென்னும் பம்பல் பாரீர்!
>
> —கொரோனாச் சித்தர்








# ஒரு மேயர் பதவியும் சில சதிகளும்!

அவதானி





உன்னாலே நான் கெட்டேன்; என்னாலே நீ கெட்டாய்" என்று மாறி மாறிச் சொல்லித் தோப்புக்கரணம் போடுகின்றனர் சுமந்திரனும், மாவையும். இன்று தமிழர் அரசியலில் உள்ள சம்பந்தன் ஐயாவுக்கு அடுத்ததாக ஏதோ வகையில் மக்கள் பிரதிநிதியாக விளங்கியவர் என்ற வரலாறு சொலமன் சூ சிறிலுக்கு உண்டு.

### கழுத்தறுப்பு

இராசா விஸ்வநாதன் யாழ். மாநகரசபை முதல்வராக இருந்த காலத்தில் சபை உறுப்பினராக விளங்கியவர் (1970 களில் ) சிறில். 2004 தேர்தலில் நமது ஈழநாடு நாளிதழ், கட்டம் கட்டப்பட்ட செய்தியாக "மாவையும் வெற்றி பெற்றார்" என்று எதனையோ சூசகமாகச் சுட்டிக்காட்டியது. இத்தேர்தலில் சிறிலும் போட்டியிட்டிருந்தார். 2009 இன் பின்னர் கட்சித் தலைமை, பேச்சாளர்கள் என்ற வகையில் சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோரால் கழுத்தறுக்கப்பட்டார் சிறில். 2010 தேர்தலின்போது "முன்னைய எம்பிக்கள் சிலருக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிக்கப்படவில்லையே" என பி. பி. சி அப்போதைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளராக விளங்கிய சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்டது. அதற்கு அவர் "அரசுடன் இணைந்து செயற்பட்டோர் (தங்கேஸ்வரி, கிசோர், கனகரத்தினம்), நீண்டகாலம் வெளிநாட்டில் தங்கியிருந்தோர் தவிர அனைவருக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது என்று உண்மைக்கு மாறாகப் பதிலளித்தார். சிறில் அரசுடன் இணையவில்லை; வெளிநாட்டில் தங்கியிருக்கவும் இல்லை. அப்படியானால் ஏன் பழிவாங்கப்பட்டார்? புலிகளின் தெரிவாக தேர்தலில் போட்டியிட்டவர் என்பதே மறைந்திருக்கும் உண்மை. சமாதான காலத்தில் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டபின் ஒத்திவைக்கப்பட்ட யாழ் .மாநகரசபைத் தேர்தலில் சி.வி. கே .சிவஞானமும் சிறிலுமே மேயர் தெரிவுக்கான புலிகளின் பரிசீலனையில் இருந்தனர். சி.வி. கே.மாநகரசபை ஆணையாளர் பதவி வகித்தவர். சிறில் ஏற்கனவே உறுப்பினராக இருந்தவர்.

### சதிக்குச் சன்மானம்

கடந்த மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் மூத்த உறுப்பினர்கள் என்று பார்த்தால் சிறிலுக்கே அந்தத்தகுதி இருந்தது. ஆனாலும் அப்போது சுமந்திரனின் ராஜ்ஜியம் கொடிகட்டிப் பறந்ததால் அவரை நிராகரிக்க ஒரு காரணத்தை தேடிப்பிடித்தார். "வெளிநாட்டு பிரதிநிதிகள் வரும்போது உரையாடிக் கருமமாற்றக்கூடிய ஒருவரே மேயர்"என்று முதலடியைப் போட்டார். இனப்படுகொலை குறித்த சர்வதேச விசாரணை வேண்டுமென்று வடமாகாண சபையில் தீர்மானம் கொண்டு வந்தவர் வடக்கு முதலமைச்சர். அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை யைப் சுமந்திரனின் கண்ணசைவுக்கிணங்க நெறிப்படுத்தியவர்களில் முதன்மையானவர் ஆர்னோல்ட். அதற்கு சன்மானமாக வழங்கப்பட்டதே இந்த மேயர் பதவி. இந்தக் களயதார்த்தத்தை புரிந்து கொள்ள முயற்சியுங்கள் என்பதே தமிழரசுக்கட்சி உறுப்பினர்களுக்கு மறைமுகமாக சுமந்திரன் சொன்ன செய்தி.

(14ஆம் பக்கம் பார்க்க)



# புதிய அரசியல் ஆண்டில்

# தமிழ் மக்களுக்கு எது நற்செய்தி?



நிலாந்தன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பொதுநூலகத்தில் ஒரு நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டத்தில் ஈடுபட்டு இறந்துபோன 75 க்கும் குறையாத உறவினர்களின் தகவல்களைத் தொகுத்து ஓர் ஆவணக் கையேடு வெளியிடப்பட்டது. கடந்த பத்தாண்டுகளாக காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடியலையும் முதிய பெற்றோர் நோய் காரணமாகவும், வயது காரணமாகவும், நீதி கிடைக்காத விரக்தி காரணமாகவும் இறந்து கொண்டிருக்கிறார்கள். இந்த உலகம் நீதியானது என்று மனநிறைவோடு அவர்கள் இறக்கவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நீதியும் கிடைக்கவில்லை; நிவாரணமும் கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் எனப்படுவது 2009 க்குப்பின்ன ரான ஈழத் தமிழ் அரசியல் பரப்பில் அதிகம் உணர்ச்சிகரமான ஒரு பாதிக்கப்பட்டவர்கள் மைய போராட்டம்( victim oriented ). அதுதான் இந்தப்போராட்டத்தின் பலம். அதுவே இந்தப்போராட்டத்தின்பலவீனமும். ஏனெனில் இவ்வாறு போராடும் முதிய பெற்றோர் ஒவ்வொருவராக இறந்து கொண்டே போனால் ஒரு கட்டத்தில் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க யார் மிஞ்சியி ருப்பார்கள்? கடந்த சுமார் 1410 நாள்களுக்கு மேலாக போராடிக்கொண்டிருக்கும் உறவினர்களுக்கு திருப்தியான தீர்வு எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.நிலைமாறு கால நீதியின் கீழ் அவர்களுக்கென்று உருவாக்கப்பட்ட காணாமல் போனவர்களுக்கான அலுவலகம்(ஓ.எம்.பி.) அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதை நிராகரித்துவிட்டு தொடர்ந்தும் போராடுகிறார்கள். ஆனால் தீர்வு கிடைக்க வில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் எனப்படுவது ஒரு புறம் அனைத்துலக சமூகத்தின் இயலாமையைக் காட்டுகிறது.இன்னொருபுறம் 2009 க்குப் பின்னரான ஈழத் தமிழ் அரசியலின் இயலாமையைக் காட்டுகிறது.

ஈழத்தமிழர்களுக்கு அனைத்துலக சமூகம் பரிந்துரைத்த நீதி எனப்படுவது நிலைமாறு காலநீதிதான். ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதே சமயம் அதை விட அடர்த்தி கூடிய ஒரு நீதிக்காக அவர்களால் தாக்கமானவிதங்களில் போராடவும் முடியவில்லை என்பதுதான் இங்குள்ள கொடுமையான யதார்த்தம் ஆகும். ஒரு புறம் உலக சமூகம் போரில் வெற்றி பெற்ற இலங்கை அரசாங்கத்தை விசாரிக்கத்தயாரில்லை. வெற்றி பெற்றவர்களைவிசாரிக்கத் தயாரற்றஉலகம் ஈழத்தமிழர்களுக்கு பரிந்துரைத்தது தான் நிலைமாறுகால நீதி. ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் உறவினர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி யென்றால் அதைவிட அடர்த்தி யான ஒரு நீதியைக் கேட்டு அவர்கள் போராட வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட போராட் டம் எதுவும் தொடர்ச்சியாக உல கின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் முன்னெடுக்கப்பட வில்லை.

தமிழ் கட்சித் தலைவர்கள் "நாங்கள் போராடுவோம் போராடுவோம்" என்று அடிக்கடி கூறிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களில் யாருமே இங்கு போராடவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் முதிய பெற்றோர் சிலரே பெருஞ்சாலைகளின் ஓரங்களில் அமர்ந்திருந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.விரல் விட்டு எண்ணக்கூடிய சில முதியவர்களிடம் போராட்டத்தை ஒப்படைத்துவிட்டு முழுச்சமூகமும் பார்வையாளர்களாக இருந்து கொண்டு "போராடுவோம் போராடுவோம்" என்று பொய் சொல்லிக்கொண்டிருக்கிறதா? கைதிகளுக்காக கைதிகளின் உறவினர்களைப் போராட விட்டுவிட்டு, காணாமல் ஆக்கபட்டவர்களுக்காக அவர்களுடைய இரத்தஉருத்துக்களைப் போராட விட்டுவிட்டு அவை மக்கள் போராட்டம் எனலாமா?இந்த வகையான போராட்டங்களால்கொழும்பையும் திரும்பிப்பார்க்க வைக்க முடியவில்லை.உலகசமூகத்தையும் திரும்பிப் பார்க்கவைக்க முடியவில்லை. அண்மையில் தமிழ்ப் பகுதிகளைத் தாக்கிய புரேவிப்புயலால் வவுனியாவில் போராட்டக்குடிலின் மீது மரக்கிளை முறிந்து விழுந்தது. இதனால் தொடர்ச்சியாக ஐந்தாறு நாள்களுக்கு மேல் அந்தக் குடில் மின்சார இணைப்பின்றி இருள் மண்டிக் கிடந்தது. இவ்வாறு குடில்களில் தனித்திருக்கும் பெற்றோர் குறித்து சில ஆண்டுகளுக்கு முன்பு கண்ணன் அருணாச்சலம் என்ற ஒரு விவரணப்பட இயக்குநர் உருவாக்கிய ஒரு படம் உண்டு. அதற்குப் பெயர் குடில். அது முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் மக்களைப்பற்றியது.

> காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் ஒரு குறியீடு. அது தமிழ் அரசியல் இயலாமையின் குறியீடு. அதைப்போன்றதே அரசியல் கைதிகளின் போராட்டமும், நிலத்தை மீட்பதற்கான போராட்டமும்.

> கொள்கைக் கூட்டுக்கள் உருவாக்கப்படும் வரையிலும் கொள்கையற்றவர்கள் தமிழ்மக்களை விற்பதை தடுத்தாலே போதும் என்ற ஒரு நிலைக்கு இப்பொழுது தமிழ் அரசியல் வந்துவிட்டது.

தெருவோரப் போராட்டங்களை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தி அரசாங்கத்துக்கும் உலகத்துக்கும் அழுத்தம் கொடுக்கும் விதத்திலான புதிய போராட்ட வடிவங்களைக் கண்டுபிடிக்க தமிழ்க் கட்சிகள் எதனாலும் முடியவில்லை.அரசியல் செயற்பாட்டாளர்களாலும் முடியவில்லை. பாதிக்கப்பட்ட அந்த மக்களாலும் முடியவில்லை. இதுதான் நிலைமை. இது விடயத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் ஒரு குறியீடு. அது தமிழ் அரசியல் இயலாமையின் குறியீடு.அதைப்போன்றதே அரசியல் கைதிகளின் போராட்டமும், நிலத்தை மீட்பதற்கான போராட்டமும்.இந்தப்போராட்டங்கள் எவையும் தொடர்ச்சியானவை அல்ல.கொழும்புக்கு அல்லது வெளி உலகத்துக்கு அழுத்தத்தைப் பிரயோகிக்க கூடியவையும் அல்ல. இதுதான்பிரச்சினை. ஒருபுறம் முப்படைகளின் பலத்தோடு மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்குக் கிட்டவாக மக்கள் ஆணையைப் பெற்றிருக்கும் மிகப் பலம் பொருந்திய ஓர் அரசாங்கம். இன்னொருபுறம் அதற்கு எதிராக போராடத் திராணியற்ற ஒரு சிறிய மக்கள் கூட்டம். அதைக்கூட கட்சிகளும் அமைப்புகளும் வாக்காளர்களாகப் பிரித்து வைத்திருக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில்தான் அடுத்த ஜெனிவாக் கூட்டத்தொடர் வருகிறது. அடுத்த ஜெனிவா கூட்டத் தொடரை தமிழ்த் தரப்பு ஒற்றுமையாக அணுகுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக இல்லை என்பதைத்தான் கடந்த வார நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றனவா?

அரசாங்கம் ஐ.நாவையும் உலக சமூகத்தையும் ஏமாற்றும் நோக்கத்தோடு ஒரு புதிய யாப்பை உருவாக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.அதற்குரிய மக்கள் முன்மொழிவுகளை அனுப்புவதற்குரிய திகதி நேற்றுடன் முடிவடைந்துவிட்டது. இவ்வாறு முன்மொழிவுகளை அனுப்பும் பொருட்டு தமிழ்த் தரப்புகள் ஒன்றிணைந்து ஒரே தரப்பாக ஒரே முன்மொழிவை வழங்கியிருந்திருந்தால் அற்புதமாக இருந்திருக்கும். அது அரசாங்கத்தை அம்பலப்படுத்த உதவியிருந்திருக்கும். தமிழ் மக்கள் ஒரு தேசமாக நிற்கிறார்கள் என்பதையும் வெளிப்படுத்தியிருந்திருக்கும்.

ஆனால் தமிழ் தரப்பு பல்வேறு கட்சிகளாகவும் தாயகத்திலும் புலம்பெயர்ந்த பரப்பிலும் பல்வேறு குடிமக்கள் சமூகங்களாகவும் பிரிந்து நின்று முன்மொழிவுகளை வழங்கியிருக்கிறது. அதாவது புதிய யாப்பு ஒன்றுக்கான முன் யோசனைகளை வழங்கும் விடயத்தில் தமிழ்த் தரப்பு ஒரு தேசமாக இல்லை என்ற செய்தி மிகக் கேவலமான விதத்தில் கடந்த வாரம் வெளிப்பட்டிருக்கிறது.இது முதலாவது.

இரண்டாவது இந்தக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கங்களின் நூல் வெளியீட்டு விழாவில் நடந்த ஒரு விடயம்.அந்த நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கலந்துகொள்ளவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோருக்காகப் போராடும் சங்கங்களின் தலைவிகள் அக்கட்சியின் இரண்டு பிரதானிகளையும் நேரில் சந்தித்து அழைப்பு விடுத்திருந்தார்கள். எனினும் அவர்கள் அந்தக் கூட்டத்துக்கு வரவில்லை.




(04ஆம் பக்கம் பார்க்க)




# பனங்காமம்: அடங்காத் தமிழ் பூமி

○ சாதுரியன்

மல்லாவியிலிருந்து துணுக்காய் நோக்கிச் செல்லும் போது, துணுக்காய்ச் சந்திக்கு அண்மையில் இடதுபக்கமாக ஒரு வீதி தென்படும். அந்த வீதியால் சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் போனதும் ஒரு ஊர் தென்படும். அதுதான் பனங்காமம் .

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பனங்காமம் , இப்போது ஒரு குக்கிராமம் போல சுருங்கி, அடங்கிக் கிடந்தாலும், அதற்குள் பெரும் வரலாறு ஒளிந்திருக்கிறது.

வாளோடும் ,வேலோடும் அரசோச்சி நின்ற வன்னி இராச்சியத்தின் மூலவேர் பனங்காமமே. இறுதிவரை அந்நியருக்கு அடி பணியாது நின்ற வன்னித் தமிழினத்தின், வீரம் விளை பூமியும் இதுதான். குறிஞ்சி, முல்லை,மருதம் நெய்தல் என நான்கு வகை நிலங்களும் ஒருங்கே அமைந்த, இயற்கைப் பேரழகு வாய்த்த, எந்த இடத்துக்கும் இல்லாத புவியியல் சிறப்பும் இதற்குண்டு.

**பனங்காமம் இப்போது**

இயற்கைவளம் நிறைந்த பனங்காமத்தில் தென்னை, கமுகு, வாழை என எங்கு பார்த்தாலும் இயற்கை எழில்கொஞ்சும் . காடுகளில் பெறுமதிமிக்க மரங்களும் பல்வகையான வனவிலங்குகளும் வளம் நிறைந்த வயல் நிலங்களும் தோப்புகளும் குளங்களும் குளங்களைப் போசிக்கும் சிற்றாறுகளும் பனங்காமத்தில் தாராளம். பனங்காம மக்களது பிரதான தொழில் விவசாயமே. பனங்காமத்துக்கு தெற்காக வீரப்பராயன் குளமும் வட்கிழக்காக மிகவும் செழிப்புள்ள நட்டாங்கண்டல் கிராமமும் அமைந்துள்ளன. இயற்கையுடன் இணைந்த மக்களுக்கு இங்கு பால்,நெய், தயிர், தேன் என்பவை வேண்டி அளவு கிடைப்பதால் அவர்களின் வாழ்வும் சுவை பெற்றதாக இருக்கின்றது.

**அடங்காத் தமிழர்களின் பற்று**

அடங்காப்பற்று என அறியப்பட்ட வன்னியின் தலைநகரமாக ஒருகாலத்தில் இருந்தது இந்தப் பனங்காமம் பற்றுத்தான்.

வடக்கே யாழ்.கடல் நீர் ஏரியையும், தெற்கே அருவியாறு மற்றும் நுவரகலாவியவையும் , மேற்கே மாதோட்டத்தையும் ,கிழக்கே திருகோர் ணமலையையும் எல்லைகளாகக் கொண்டு தமிழ் அரசர்கள் ஆண்ட நிலப்பரப்பே வன்னி என்பர்.

"எல்லை வடக்கில் எழிழ் யாழ் பரவுகடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லை நல்லதிரி
கோணமலை கீழ்ப்பால் கேதீச்சரம் மேற்கில்
மாணத் திகழ்வன்னிநாடு"

என்னும் பாடலூடாக இதன் எல்லைகள் புலப்படுகின்றன.

ஆய்வாளர் சி.எஸ்.நவரத்தினத்தின் கருத்துப்படி, வடக்கில் யாழ்.குடாநாட்டுக்கும் ,நுவரகலாவியவுக்கும் இடைப்பட்ட பகுதியே வன்னி இராச்சியமாகும். அடங்காப்பற்று இராச்சியம் தற்போதைய வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியிருந்தது.

அடங்காப்பற்று என ஒரு இராச்சியமாகச் சொல்லப்பட்டாலும், அது ஏழு பிரிவுகளாக, (ஏழு பற்றுக்களாக )பிரிக்கப்பட்டு வன்னியர்களால் ஆட்சி செய்யப்பட்டுவந்தது.

**1) பனங்காமம் பற்று**
**2) முள்ளியவளைப்பற்று**
**3) கருநாவல் பற்று**
**4) தென்னைமரவாடி பற்று**
**5) மேல்பற்று**
**6) கரிக்கட்டைமூலைப்பற்று**
**7) செட்டிகுளப்பற்று**

என்பவையே அந்த ஏழு பற்றுக்களாகும். இதில் பனங்காமம்பற்று அடங்காப்பற்றின் அரைவாசி நிலப்பரப்பைக் கொண்டதாயிருந்தது. அடங்காப்பற்றின் தலைமை வன்னியர்களாக, பனங்காமம்பற்றை ஆட்சி செய்தவர்களே இருந்தனர். ஆயினும் இந்த ஏழு பற்றுக்களையும் ஆட்சி செய்தவர்கள், தமக்குள் ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட உறவு முறையைக் கொண்டவர்கள்.

## பனங்காமம் சில ஐதீகங்கள்

**ஐதீகம் 1**

பாணன்கமம் என்ற பெயர் தான் பின்னாள்களில் மருவி, பனங்காமமாகியது.

இராவணனின் வழிவந்த மன்னன் ஒருவன் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் பாணன் (இசைஞானம் படைத்தவன்) ஒருவனுக்கு தானமாக வழங்கிய கமம் (விவசாயநிலம்)தான் பனங்காமமாகியதாக செவிவழிக்கதை ஒன்றும் உள்ளது.

**ஐதீகம் 2**

ஒருமுறை இந்துத் தெய்வமான சிவ பெருமானை நோக்கி சம்பு முனிவர் என்பவர் அரக்கர்களை அழிக்க வேண்டி யாகம் மேற்கொண்டார். அப்போது சிவனில் இருந்து கையில் வாளோடும் வில் அம்போடும் தோன்றினான் உருத்திரபுத்திரன். உருத்திரபுத்திரன் தேவலோக மன்னன் இந்திரனின் இரண்டாவது மகளான மந்தரமாலையை மணந்தான் . அவர்களின் பிள்ளைகளான பிரமவன்னியன், அக்கினி வன்னியன் கிருஷ்ண வன்னியன் போன்றவர்களின் வழித்தோன்றல்களே வன்னியர் பரம்பரையினர் என செவிவழிக்கதை கூறுகிறது.

**ஐதீகம் 3**

சோழர் ஆட்சிக்காலத்தில் படைத் தளபதிகளாக வன்னியர்களே இருந்தனர். சோழ மன்னர்களால் இலங்கையைக் கைப்பற்ற அனுப்பி வைக்கப்பட்டவர்களின் வழிவந்தவர்களே வன்னியை ஆண்டனர் என்கின்றது யாழ்ப்பாண வைபவமாலை . ஆயினும் இலங்கையில் சோழர்படை எடுப்பு நடந்த காலப்பகுதிக்கு (கி.பி 965-1015) முன்னரே வன்னியில் தமிழர் வாழ்ந்ததற்கான வரலாற்று எச்சங்கள் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**கப்பம் செலுத்தாத கைலாய வன்னியன்**

வரலாற்றாசிரியர் றொபேட்நொக்ஸ் என்பவர் தனது வரலாற்றுப் பதிவில் தமிழர் தேசம் எனக் குறிக்கும் இடங்களில் கொய்லத் வன்னி நாடு எனக் குறிப்பிடப்படும் இடமே'கைலாய வன்னி நாடு அல்லது பனங்காமம் பற்று ஆகும்.

கி.பி 1505 இல் இலங்கையைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் என்பவற்றைக் கைப்பற்றிய போதும் வன்னியை அவர்களால் நெருங்க முடியவில்லை. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட சங்கிலிகுமாரன் மீது போர்த்துக்கேயர் படையெடுத்தபோது, சங்கிலி மன்னனுக்கு ஆதரவாகப் படை அனுப்பிய வன்னியர்களில் முதன்மைபெறுபவன் பனங்காமம் பற்றை ஆட்சிசெய்த கைலாயவன்னியனாவான். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றியபின்பு போர்த்துக்கேயருக்கு கப்பம் செலுத்த கைலாயவன்னியன் மறுத்துவிட்டான். ஆனபோதும் போர்த்துக்கேயர் பனங்காமம் பற்றின் மீது போர்தொடுக்க முனையவில்லை. இதற்கான காரணம் பனங்காமம் பற்றில் வலிமைமிக்க சுதந்திரதாகம் கொண்ட கைலாய வன்னியனின் ஆட்சி நடைபெற்றதேயாகும்.

கி.பி 1678 இல் கைலாய வன்னியன் உயிர்துறக்கும்வரை போர்த்துக்கேயருக்கு கப்பம் செலுத்தாது ஆட்சிசெய்தான் எனவும் இதுதொடர்பில் இலங்கையின் போர்த்துக்கேய ஆளுநர் பனங்காமம்பற்றுக்கு தொடர்ச்சியாக ஓலை அனுப்பிக்கொண்டிருந்தான் எனவும் " வன்னி அன்ட் வன்னியாஸ்" என்ற நூலில் சி. நவரத்தினம் குறிப்பிடுகின்றார்.



கைலாயவன்னியனின் இறப்பைத் தொடர்ந்து பனங்காமம் பற்றை ஆட்சி செய்த அவனது பேரன் காசியவன்னியன் போர்த்துக்கேயருக்கு திறைசெலுத்த ஒத்துக்கொண்டான் என போர்த்துக்கேயரின் குறிப்புக்கள் மூலம் அறியமுடிகிறது. இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட அடங்காத்தமிழனான கைலாயவன்னிய மன்னன் பனங்காமம்பற்றில் அமையப் பெற்ற கைலாயநாதரை வழிபட்டு அவரது அருளைப்பெற்று ஆட்சி புரிந்தான் என்பதையும் இப்போது செவிவழிக் கதை மூலமே அறியமுடிகிறது.





## பனங்காமம்பற்று - சில வரலாற்றுக்குறிப்புகள்

17ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் ஒல்லாந்தர் அடங்காப்பற்றையே வன்னி என்று குறிப்பிட்டனர். இதில் பனங்காமம்பற்று 23 கிராமங்களை கொண்டிருந்தது. இது வன்னிப் பிரதான அதிகாரியின் தலைமைச்செயலகமாக இருந்துள்ளதையும் ஜே.எஸ் லூயிஸ் வன்னிமாவட்டங்கள் என்னும் நூலில் குறிப்பிடுகிறார். அது மட்டுமன்றி இந்தக்கிராமத்தின் தொன்மைபற்றி காசிச் சைமன் செட்டியார், இலங்கையின் விசேடங்களைக்குறிக்கும் அகராதியில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். " பனங்காமம் ஒரு கணிசமான கிராமம். இது திருகோணமலை வீதியில் விடத்தல் தீவுக்கு கிழக்கே இருபது மைல் தொலைவில் அமைந்துள்ளது. இது முன்பு ஓர் வன்னிச்சியின் வாசஸ்தலமாக இருந்துள்ளது. இங்கே பல நெல் வயல்களும் குடியிருப்பாளர்களின் வீடுகளும் தென்னைமரங்களும் புளியமரங்களும் இருக்கின்றன" என அவர் பதிவு செய்துள்ளார்.

பண்டாரவன்னியனின் சகோதரியான உமைச்சி நாச்சியரார் பனங்காமம்பற்றை ஆட்சி செய்தவேளையில் தான், பண்டாரவன்னியன் கண்டிப் பெருந்தெருவில் கொக்காவில் அருகே உள்ள பதினெட்டாம்போர் ஏற்றம் என்னும் இடத்தில் வெள்ளையர்களுடன் நடைபெற்றபோரில் காயமடைந்து, சிகிச்சைக்காக பனங்காமம் கொண்டுசெல்லப்பட்டான் எனவும் சொல்லப்படுகின்றது.

### கண்டுபிடிக்கப்பட்ட கயிலைநாதர்

வன்னியிலுள்ள சிவாலயங்களில் வரலாற்றுப்பழமை வாய்ந்ததும், சிறப்புமிக்கதும் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் அமையப்பெற்ற ஆலயமாகவும் பனங்காமம் கயிலைநாதர் சிவாலயம் மிளிர்கிறது. திருக்கேதீச்சரத்துக்கு ஒத்த காலப்பகுதியில்- இது அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. ஆலயச்சூழலில் அருவியும் அடர்ந்த காடுகளும் வயல் நிலங்களும் குளமும் அமைந்துள்ளன. 1950 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் காட்டுக்கு தேன் எடுப்பதற்காகச் சென்ற ஒருவர், காட்டின் நடுவே இடிபாடுகளுக்குள் மூன்று லிங்கங்கள் இருக்கக்கண்டுள்ளார். உடனே அவர் பிரதேச வாசிகளின் உதவியுடன் ஈழத்துச் சித்தர்களில் ஒருவரான செல்லப்பா சுவாமிகளைத் தொடர்புகொண்டு அவரை பனங்காமம் பகுதிக்குவரவழைத்துள்ளனர். அங்குவந்த செல்லப்பா சுவாமிகள் ஆலயத்தின் இட அமைவைப் பார்வையிட்டு இது ஐந்துலிங்கங்கள் (பஞ்ச லிங்கங்கள்) அமையப்பெற்று பூசைவழிபாடுகள் நடைபெற்ற ஆலயமாக இருந்துள்ளது எனக்கூறியுள்ளார். இவற்றுள் ஒருலிங்கம் சாஸ்திரி கூழாங்குளம் என்னும் இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது எனவும் ,மற்றையது பரப்புக்கால் என்னும் இடத்துக்கு கொண்டு செல்லப்படும்போது ஆற்றில்கைவிடப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. மீண்டும் இந்த ஆலயம் செல்லப்பா சுவாமிகளால் ஆகம முறைப்படி அமைக்கப்பட்டது.

### அழிந்து போன கோட்டை எச்சம்

" எனது தந்தையரர் வேலாயுதர் செல்லையா வெள்ளைக்காரர்களின் காலத்தில் பொலிஸ் விதானையாக 1921 ஆம் ஆண்டு தொடக்கம் 1952 ஆம் ஆண்டு வரை பனங்காமத்தில் கடமையாற்றினார். பனங்காமமும் அதனுடன் இணைந்த மூன்று முறிப்பு கிராமமும் எங்களது பூர்வீக பகுதிகள். பண்டாரவன்னியனின் இளைய சகோதரி உமைச்சி நாச்சியார் இங்குதான் ஆட்சி செய்தார்.பழையகாலத்து கோட்டையின் இடிபாடுகள் யுத்த காலத்துக்கு முன்னர் இங்கே இருந்தன. ஆனால் மீள்குடி யேற்றத்தின் பின்னர் அவற்றைக் காணமுடியவில்லை" என்று சொல்கிறார் பனங்காமத்தில் பூர்வீகக் குடிவழி வந்தவர்களில் வருவரான செல்லையா பூலோகசிங்கம்.

### ஆறு பெருக்கெடுத்த அற்புதம்


பனங்காமம் கயிலாசநாதர் சுவாமிக்கு வருடந்தோறும் ஆடிஅமாவாசை தினத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறுவது வழமை. 1990 ஆம்ஆண்டு சுவாமி தீர்த்தஉற்சவத்துக்காக பறங்கியாற்றங்கரையில் எழுந்தருளியபோது கடுமையான வறட்சி நிலை காரணமாக ஆறு தண்ணீரின்றி வறண்டிருந்தது . இதனால் பக்தர்கள் கவலையடைந்த நிலையில் எங்காவது குன்றுகளில் நீர் இருக்கின்றதா எனத் தேடினர். ஆனால் எங்கும் தண்ணீர் தென்படவில்லை. வெயில் தாக்கமோ அதிகமாயிருந்தது. மழை பெய்வதற்கான சாத்தியக்கூறு அறவே இருக்கவில்லை. ஆயினும் பேரதிசயம் ஒன்று நிகழ்ந்தது. பேரிரைச்சலோடு மூன்றடிக்கும் மேல் நீர்மட்டம் திடீரென ஆற்றில் பெருக்கெடுத்து ஓடியது என்று அந்தத் தீர்த்தக்கரையில் நின்றவர்கள் இன்றும் பயபக்தியோடு நினைவு கூருகிறார்கள்.


## சொல்லி மாளாக் குறைகள்

"மீள்குடியேற்றம் நடைபெற்ற பின்பும் இன்றுவரை பனங்காமத்தின் பிரதான வீதிகூட புனரமைக்கப்படாத நிலையில் குண்டும் குழியுமாக காணப்படுகின்றது. சீரான போக்குவரத்து சேவைகள் இடம் பெறவில்லை .கிராமத்துக்குள் யானைகள் புகுந்து விவசாயப் பயிர்களை நாசம் செய்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கான மின்சார வேலிகள் எவையும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

கூடுதலானவர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுகின்ற போதும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகள் எவையும் ஒதுக்கப்படவில்லை" என்று தங்கள் குறைகளைச் சொல்லி புலம்புகிறார்கள் பனங்காம மக்கள்.

வரலாற்றில் ஏடுகளில் தமிழர்களைத் தலைநிமிர வைத்த பழம்பெரும் இராச்சியத் தலைநகரமொன்று, இன்று குறைகளின் பூமியாக இருக்கின்றது, குறைகளைக் களைந்து , பனங்காமத்துக்கு பெருமை சேர்க்க உரிய அதிகாரிகள் முன்வரவேண்டும்.






# புதிய அரசியல் ஆண்டில்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே கடந்த ஆண்டு இடம்பெற்றஅனைத்துலக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினத்தில் யாழ்ப்பாணத்தில் இரண்டு ஊர்வலங்கள் நடந்தன.கிழக்கிலும் இரண்டு ஊர்வலங்கள் நடந்தன.இது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சங்கங்கள் கட்சிகளால் இரண்டாகப் பிளக்கப்பட்டிருப்பதைக் காட்டியது.இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் பங்குபற்றவில்லை. பாதிக்கப்பட்ட முதியஅன்னையரின் விடயத்தில் கூட தமிழ்க்கட்சிகளால் ஐக்கியப்பட முடியவில்லையென்றால் வேறு எந்த விடயங்களில் அவர்கள் ஐக்கியப்படப்போகிறார்கள்?


மூன்றாவது,கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் நடந்த ஒரு சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்து கொள்ளவில்லை.ஜெனிவாவை எதிர்கொள்வதற்கான ஒரு கூட்டுப்பொறிமுறை பற்றி முடிவெடுப்பதற்கான ஒரு சந்திப்பு அது.எனினும் அடுத்த சந்திப்பில் அந்தக்கட்சி கலந்துகொள்ளும் என்று தெரியவருகிறது.

அதேசமயம்,கடந்த திங்கட்கிழமை நல்லூரில், நல்லை ஆதீனம் முன்பாக ஒரு கவன ஈர்ப்பு எதிர்ப்புக் காட்டப்பட்டது. அதில் பெரும்பாலான தமிழ்த் தேசிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றினார்கள்.அது வரவேற்கத்தக்கது. அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி அந்த எதிர்ப்பு ஒழுங்கு செய்யப்பட்டது.அது ஒரு சிறிய எதிர்ப்பு.

எனினும் அது விடயத்தில் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் அனைத்தும் இணைந்துநின்றமை அரசியல் கைதிகளுக்கு நம்பிக்கை தரக்கூடியது. அப்படித்தான் அடுத்த ஜெனிவாவை எதிர்கொள்ளும் விடயத்திலும் ஒன்றாக நிற்கலாம். கொள்கை அடிப்படையில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளை ஒன்றாக்குவது கடினமானது என்பதை கடந்த ஐந்தாண்டுகள் நிரூபித்திருக்கின்றன.இங்கு ஐக்கியம் என்பது கொள்கை அடிப்படையில் அல்ல. விவகார அடிப்படையில்தான்.தந்திரோபாய அடிப்படையில் கூறின் அது கொள்கைகளைக் கைவிடக் கூடியவர்களை கட்டுப்படுத்தும் நோக்கிலானது. எனவே இப்போதைக்கு தேவையாக இருப்பதும் சாத்தியமானதும் விவகாரங்களை மையமாகக் கொண்டு கட்டியெழுப்பப்படும் கூட்டுக்கள்தான்.

> தமிழ்க் கட்சிகள் இப்புதிய ஆண்டில் தமிழ் மக்களுக்கு நற்பலன்கள் கிடைக்க வேண்டும் என்று கருதினால் குறைந்த பட்சம் விவகாரங்களை மையப் படுத்தி கூட்டுக்களை உருவாக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதனை வெளியுலகத்துக்கு கூறக்கூடிய தருணங்களில் அல்லது அன்னையரின் கண்ணீரை அரசியல் ஆக்க சக்தியாக மாற்ற வேண்டிய போராட்டக்களங்களில் அல்லது அரசியல் கைதிகளுக்கான விடுதலை கேட்டு அல்லது மேய்ச்சல் தரைகளுக்கான போராட்டத்தில் அல்லது காணிகளை விடு விக்கக்கோரி அல்லது நில ஆக்கிரமிப்புக்கு எதிராக அல்லது மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாப்பதற்காக அல்லது நினைவுகூர்தலுக்கான கூட்டு உரிமையை கேட்டு அல்லது ஒரு புதிய யாப்புக்கான தீர்வு முன்மொழிவை வழங்கும் பொழுது இது உதவும்.ஜெனிவாவை எதிர்கொள்வதற்கான பொறிமுறையில் ஒரு கட்சி ஏனைய கட்சிகளுக்குத் தெரியாமல் தமிழ் மக்களை விற்பதைத் தடுக்க இது உதவும். இது ஒரு தற்காலிக ஏற்பாடுதான். கொள்கைக் கூட்டுக்கள் உருவாக்கப்படும் வரையிலும் கொள்கையற்றவர்கள் தமிழ்மக்களை விற்பதை தடுத்தாலே போதும் என்ற ஒரு நிலைக்கு இப்பொழுது தமிழ் அரசியல் வந்துவிட்டது.உத்தியோக பூர்வமாகவேனும் தமிழ்த் தரப்பு தன்னை ஒரு தேசமாக காட்டத் தவறினால் வரும் ஜெனிவாக் கூட்டத்தொடரில் மட்டுமல்ல இந்த ஆண்டு முழுவதிலும் தமிழ் அரசியல் மேலும் நீர்த்துப்போகும் ஆபத்து அதிகம் உண்டு.எனவே தமிழ்க் கட்சிகள் இப்புதிய ஆண்டில் தமிழ் மக்களுக்கு நற்பலன்கள் கிடைக்க வேண்டும் என்று கருதினால், குறைந்த பட்சம் விவகாரங்களை மையப்படுத்தி கூட்டுக்களை உருவாக்க வேண்டும். அதுதான் தமிழ் மக்களுக்கு இக்கட்சிகள் வழங்கக் கூடிய புத்தாண்டு நற்செய்தியாக இருக்கும்.






# ஐ.சி.சி.பி.ஆர் சமவாயம் ஜெனீவாவில் பேசப்படுமா?

அ.நிக்ஸன்

ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (International Covenant on Civil and Political Rights ICCPR) இலங்கையின் 2007ஆம் ஆண்டு 56 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் இலங்கை ஒற்றையாட்சி அரசின் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தபோதே இந்தச் சமவாயம் முன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இலங்கை அரசமைப்பில் சேர்க்கப்படாமல் சாதாரண இலங்கைச் சட்டங்களில் ஒன்றாக சர்வதேச நாடுகளின் அழுத்தங்களால் இணைக்கப்பட்டிருக்கிறது.

ஆறு பகுதிகளாக, குறைந்தது 37 பக்கங்களைக் கொண்ட ஐ.சி.சி.பி.ஆர் எனப்படும் இந்தச் சமவாயத்தில் "ஒரு நாட்டில் வாழும் அனைத்து இன மக்களின் சுயநிர்ணய உரிமை (selfdetermination) அங்கீகரிக்கப்பட வேண்டும்" என்பது பிரதான உள்ளடக்கமாகும். ஆனால் பிரதான உள்ளடக்கங்களைத் தவிர்த்து, அதாவது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டு, இலங்கைக்கு ஏற்ற சில பகுதிகள் மாத்திரமே 56 ஆம் இலக்கச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட நாடொன்றில் வாழும் அனைத்து இன மக்களிடையே இனக் குரோதங்கள், மதங்களிடையேயான வெறுப்புகள் போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் மனித குலவிரோதங்களைத் தூண்டுதல் போன்ற குற்றங்களுக்குக் கடும் தண்டனை விதிக்கும் உறுப்புரைகள் ஐ.சி.சி.பி.ஆர் சமவாயத்தின் பிரிவு 3(1) இல் உள்ளன.

ஆனால் 56 ஆம் இலக்கச் சட்டத்தில் ஐ.சி.சி.பி. ஆர் சமவாயத்தை ஏற்றுக் கொண்ட இலங்கை அரசு பிரிவு 3(1) உள்ளிட்ட சில பகுதிகளை மாத்திரமே இணைத்துள்ளது. உறுப்புரை 1.இல் கூறப்பட்டுள்ள ஏனைய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்ற பகுதி திட்டமிடப்பட்டு நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சமவாயத்தை 2007ஆம் ஆண்டு அப்போதைய அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். விவாதம் நடத்தப்படும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவரும் சுயநிர்ணய உரிமைக்கான உறுப்புரிமை நீக்கப்பட்டமை தொடர்பாக உரிய முறையில் சுட்டிக்காட்டவேயில்லை. இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு ஏற்ற முறையிலேயே ஐ.சி.சி.பி.ஆர் சர்வதேசச் சமவாயத்தை இலங்கை அங்கீகரிப்பதாக பீரீஸ் அப்போது துணிவுடன் கூறியிருந்தார்.

ஆனால் 2010 ஆம் ஆண்டு முதன் முதலாக நாடாளுமன்றத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் தெரிவான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், இது குறித்துப் பேசியிருந்தார். சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 1.இல் உள்ளவாறு இலங்கையின் 56 ஆம் இலக்கச் சட்டத்தில் சுயநிர்ணய உரிமை நீக்கம் செய்யப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டி கேள்வி எழுப்பியிருந்தார். அதன் பின்னர் அது குறித்த மேலதிக விவாதங்கள் எதனையும் சுமந்திரன் தொடரவில்லை.

2015 ஆம் ஆண்டு ஜெனீவா மனித உரிமை சபையில் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையோடு கொண்டுவரப்பட்ட 30/1 தீர்மானத்தின்போதுகூடஐ.சி.சி.பி.ஆர் சமவாயத்தின் உறுப்புரை 1.இல் கூறப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற பகுதி நீக்கம் செய்யப்பட்டே இலங்கையின் 56 ஆம் இலக்கச் சட்டத்தில் இணைக்கப்பட்டது என்ற விடயத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அம்பலப்படுத்தவுமில்லை.

இனக் குரோதங்களைத் தூண்டுதல் மதங்களிடையே வெறுப்புகளை உருவாக்குதல் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைத் தூண்டுதல் போன்றவற்றுடன் இலங்கை தேசிய பாதுகாப்புக்கு எதிரான விடயங்களும் இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள பிரிவு 14. 2 இல் ஏற்கனவே கூறப்பட்டுள்ளன. இந்த நிலையில், ஐ.சி.சி.பி.ஆர் சமவாயத்தின் உறுப்புரை 3(1) இல் கூறப்பட்டுள்ள அதே விடயத்தை 56 இலக்கச் சட்டத்தில் சேர்த்துக்கொண்டமை வேண்டுமென்றே ஈழத்தமிழர்களை சர்வதேச சமவாயம் ஒன்றின் மூலமாக அச்சுறுத்தும் செயல் எனவும் இதுவரை சுட்டிக்காட்டவில்லை.

ஜெனீவா மனித உரிமை சபை 2012 ஆம் ஆண்டு முதன் முதலாக இலங்கை தொடர்பான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தபோது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் நீக்க வேண்டுமெனக் கோரியிருந்தது. 2015 ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென 30/1 தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக அப்போதைய மைத்திரி ரணில் அரசாங்கம் வேறொரு புதிய சட்டத்தைக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. அப்போதுகூட ஐ.சி.சி.பி.ஆர் சமவாயத்தின் உறுப்புரை 3(1) இல் கூறப்பட்டுள்ள விடயங்கள் அகற்றப்பட வேண்டுமென்றோ அல்லது, சர்வதேச சமவாயத்தின் உறுப்புரிமை 1இல் உள்ள சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தவில்லை. ஐ.சி.சி.பி.ஆர் சமவாயம் அங்கீகரிக்கப்பட்டுள்ள நாடொன்றில் அதன் உறுப்புரிமை 1.இன் பிரகாரம் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டிருந்தால் மாத்திரமே, சமவாயத்தின் பிரிவு 3(1) சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இலங்கை வெறுமனே பிரிவு 3(1) உறுப்புரையை மாத்திரம் அங்கீகரித்திருக்கிறது. சமவாயத்தின் உறுப்புரை 1.இல் கூறப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமை இலங்கை நாடாளுமன்றத்தில் ஏன் அங்கீகரிக்கப்படவில்லை என்று சர்வதேச நாடுகள்கூட இதுவரை கேட்கவுமில்லை.

சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ள நாடொன்றில், மக்களிடையே இனக் குரோதங்கள் மதங்களிடையேயான வெறுப்புகள் போன்றவற்றை உருவாக்குதல மற்றும் மனிதகுல விரோதங்களைத் தூண்டுதல் ஆகிய குற்றச் செயல்கள் எழுக்கூடாதென்ற நோக்கிலேயே ஐ.சி.சி.பி.ஆர் சமவாயத்தின் பிரிவு 3(1;) சேர்க்கப்பட்டிருக்கிறது என்ற புரிதல்கூட சிங்கள ஆட்சியாளர்களுக்கு இல்லை என்பதைவிட, இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பைப் பாதுகாத்தலே பிரதான இலக்காகவுள்ளது என்பதற்கு 56 ஆம் இலக்க சட்டம் சிறந்த உதாரணமாகும்.

இதனடிப்படையில் சர்வதேச அழுத்தங்களைச் சமாளிக்கவும், ஜெனீவா மனித உரிமை சபையைத் திருப்திப்படுத்தவும் மைத்திரி ரணில் அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது. நாடாளுமன்றமே அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டுப் புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்துக்காக ஒவ்வொரு தலைப்புகளில் ஆறு உப குழுக்களும் அமைக்கப்பட்டிருந்தன. அத்துடன் ஜனாதிபதி, சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், மற்றும் கட்சித் தலைவர்களைக் கொண்ட வழிகாட்டல் குழுவும் அமைக்கப்பட்டிருந்தது.

ஆறு உப குழுக்களும் தத்தமது தலைப்புகளுக்குரிய விதப்புரைகளை சபாநாயகரிடம் கையளித்துமிருந்தனர். அந்த விதப்புரைகளில் என்ன விடயங்கள் உள்ளடங்கியுள்ளன என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ஆனாலும் எந்தவொரு விதப்புரை களிலும் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. குறைந்தபட்சம் ஐ.சி.சி.பி.ஆர் சர்வதேச சமவாயத்தின் உறுப்புரிமை 1.இல் கூறப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமையை இலங்கையின் புதிய அரசியல் யாப்பு மூலமாக அங்கீகரித்தல் என்பதுகூட உப குழுக்கள் கையளித்திருந்த விதப்புரைகளில் இல்லை என்பதே வெளிப்படை.

ஏனெனில் இலங்கை ஒற்றையாட்சியின் தன்மை மாற்றமடையாமலும், 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள அரச கொள்கைத் தத்துவம் மாறுபடாமலும் புதிய அரசியல் யாப்புக்கான நகல் வரைபு தயாரிக்கப்பட்டிப்பதாக அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்திலேயே கூறியிருந்தார். பௌத்த சமயத்துக்கு முன்னுரிமை வழங்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒப்புகொண்டுள்ளதாகவும் கூறியிருந்தார். ஆனால் ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி இருப்பதாக சம்பந்தன் தமிழ்மக்களுக்கு விளக்கம ளிக்கும் போது மார் தட்டியிருந்தார்.

ஐ.சி.சி.பி.ஆர் சர்வதேச சமவாயம் முழுமையாக இலங்கை அரசியல் யாப்பில் இணைக்கப்பட்டிருந்தால், பௌத்த சமயத்துக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுப்பதோ அல்லது இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் அனைத்து சமூகங்களும் கட்டுப்பட வேண்டிய வற்புறுத்தலோ இருந்திருக்காது. சர்வதேச சமவாயத்தைக் கொச்சைப்படுத்தும் முறையிலேயே இலங்கை நாடாளுமன்றம் 2007 இல் அதனை அங்கீகரித்துள்ளது என்பதைக்கூட ஜெனீவா மனித உரிமைச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்குச் சம்பந்தன் இடித்துரைக்கவில்லை. மாறாக ரணில் மைத்திரி அரசாங்கம் மீதான பொய்யான நம்பிக்கை மாத்திரமே மக்களுக்கு ஊட்டப்பட்டது.

தற்போது கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம். புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஆனால் மைத்திரி- ரணில் அரசாங்கம், தயாரித்த நகல் வரைபின் அடிப்படையில் அல்ல. மீண்டும் புதிதாகவே யாப்புருவாக்க முயற்சி இடம்பெறுகின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி உள்ளிட்ட பல கட்சிகளும் தங்கள் நகல் வரைபுகளைக் கையளித்துள்ளன. அவ்வாறு கையளிக்கப்பட்ட நகல் வரைபுகளில், சுயநிர்ணய உரிமை பற்றி அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் தங்கள் நகல் வரைபில் நிச்சயமாகக் குறிப்பிட்டிருப்பர் என்பது கண்கூடு.

ஆனால் எந்த அடிப்படையில் என்பதிலேதான் குழப்பம் இருக்கும். இருந்தாலும் சர்வதேச சமவாயத்தில் கூறப்பட்டுள்ளவாறான சுயநிர்ணய உரிமை இலங்கையின் 56 ஆம் இலக்கச் சட்டத்தில் நீக்கம் செய்யப்பட்டிருப்பதைத் தங்கள் நகல் வரைபில் இந்தக் கட்சிகள் சுட்டிக்காட்டியிருக்கும் என்று நம்ப இடமில்லை.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைச் சபையின் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் எடுக்கப்படவுள்ள நிலையில் தங்கள் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கவும் தமிழ்த்தேசியக் கட்சிகள் தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றன. அந்தப் பரிந்துரைகளில்கூட ஐ.சி.சி.பி.ஆர் சர்வதேச் சமவாயம் இலங்கைச் சட்டத்தில் புதைக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுவார்களா என்பதும் சந்தேகமே. சமவாயம் குறித்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அப்போதிருந்தே வாதிட்டு வருகின்றது. இதனால் இந்தப் பொறுப்பு முன்னணிக்கு தற்போது அதிகமாகவுள்ளது.

30/1 தீர்மானத்தில் அரசியல் தீர்வுக்கு முன்னோடியாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கூறப்பட்டிருப்பதால், தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஐ.சி.சி.பி.ஆர் சர்வதேச சமவாயத்தை இலங்கை எப்படி நாசம் செய்துள்ளது என்பதை இம்முறை வெளிப்படுத்த வேண்டும். 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில், சிங்கள ஆட்சியாளர்கள் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான அங்கீகாரத்தை அரசியல் ரீதியிலும் முற்றாக அழிக்கும் நோக்கிலேயே புவிசார் அரசியலைப் பயன்படுத்துகின்றனர்.

எனவே கோத்தா, மஹிந்த, ரணில், சந்திரிகா என்ற தனிநபர் அரசியல் செயற்பாடுகளுக்குள் அமுங்காமல், இலங்கை அரசு என்ற கட்டமைப்பை நோக்கியே செயற்பாடுகள் அமைதல் காலத்தின் அவசியம்.





# புரியுமா இது?

○ பரமேஸ்வரன்

கொரோனவால் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதற்கு எதிராக முஸ்லிம்கள் இலங்கை முழுவதும் போராட்டங்களை மேற்கொண்டு வ்ருவதுடன், புலம் பெயர் நாடுகளிலும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை கொரோனவால் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் ஜனாஸாக்களை புதைக்கக்கூடாது எரிக்க வேண்டும் என பௌத்த பிக்குமார் போராட்டம் நடத்தியுள்ளனர். கொரோனவால் கொல்லப்படுபவர்களின் சடலங்களை புதைத்தால் நிலத்தடி நீர் மாசடையும் என அரசாங்கம் கூறி வருகிறது.

அப்படி கொரோனாவால் கொல்லப்படுபவர்களின் சடலங்களை புதைத்தால் நிலத்தடி நீர்மாசடையும் என்பதை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்க முடியுமா ? என முஸ்லிம் அரசியல்வாதிகள் சவால் விட்டுள்ளனர்; அத்துடன் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவார்கள் என்றும் அரசாங்கத்தை எச்சரிக்கின்றனர்.

கொரோனவால் கொல்லப்பட்டவர்களில் கிறிஸ்தவர்களும் அடங்குகின்றனர். கிறிஸ்தவர்களும் இறந்தவர்களின் சடலங்களை புதைப்பதையே மரபாகக் கொண்டவர்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் புதைப்பதா எரிப்பதா என்ற விடயத்தை பெரிதுபடுத்தவில்லை; சிறியளவி லான அடையாள எதிர்ப்பை வெளியிட்டதைத் தவிர. சமூக வலைத்தளங்களிலும் கிறிஸ்தவர்கள் இந்த விடயத்தைப்பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

முஸ்லிம்கள் தாங்கள் வாழும் நாடுகளில் எல்லாம் தமது மத உரிமைகளை வலியுறுத்தி தமது மத அடையாளங்களுக்காக அந்தந்த நாடுகளில் போராடி வருகின்றனர். மனித உரிமைகள், மதச் சுதந்திரம் என்ற பெயரில் முஸ்லிம்களுக்கு ஏனையவர்களை விட விசேட அல்லது கூடுதலான சுதந்திரம் பல நாடுகளில் வழங்கப்பட்டுள்ளது இலங்கை உட்பட. பௌத்த மதம் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும் என அரசியல் யாப்பில் வலியுறுத்தப்பட்டுள்ள இலங்கையில் கூட, முஸ்லிம் அரச ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் தொழுகைக்கு செல்வதற்காக ஒன்றரை மணி நேரம் குறுகிய நேர லீவு வழங்குமாறு இலங்கை அரசாங்கத்தின் தாபனவிதிக் கோவை கூறுகிறது; ஒரே நாடு ஒரே சட்டம் என்று பிரசாரம் மேற்கொள்ளப்படும் இலங்கையில் முஸ்லிம்களுக்கு மட்டும் விசேட சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. ஏனைய மதத்தவர்களுக்கு இந்த சலுகைகள் இல்லை. இதேபோல் திருமண விடயத்திலும் முஸ்லிம்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய மதத்தவர்கள் எதற்காக முஸ்லிம்களுக்கு மட்டும் விசேட சலுகைகள் என எங்கும் போராட்டம் நடத்தியதாகத் தெரியவில்லை; வெள்ளிக்கிழமை இந்துக்களுக்கும் புனிதமான நாள் ஆனால் இதுவரை எந்தவொரு இந்து அரசியல்வாதியோ அல்லது இந்து அமைப்புகளோ முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகை இந்து அரச ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கவில்லை.

இவை யாவும் ஒருபுறமிருக்க தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் சிலர் முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்புக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவாக தமது கட்சி வேறுபாடுகளை மறந்து களமிறங்கியுள்ளனர். ஜெனிவா விவகாரத்தில் ஒன்று பட முடியாமல் ஆளாளுக்கு தனித் தனி வரைபுகளை தயாரிக்கும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் முஸ்லிம்களுக்காக ஒன்று பட்டு களமிறங்கியிருப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம். இவ்வாறு முஸ்லிம்களுக்கு ஆதரவாக களமிறங்கியுள்ள தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளிடம் தமிழ் மக்கள் சார்பில் சில வினாக்களை தொடுக்கலாமென நினைக்கிறேன். வடக்கு -கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்கள் ஒருபோதும் சம்மதிக்க மாட்டார்கள் என்பது தெரிந்த விடயம். எனவே அதை விடுத்து வேறு சில அடைப்படை கோரிக்கைகளை முன்வைக்கலாமென நினைக்கிறேன். நீங்கள் (தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அல்லது தமிழர்களின் தலைவர்கள்) முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்தாலும் முஸ்லிம்கள் கிழக்கு மாகாண தமிழர்களின் அடிப்படை உரிமைகளையாவது கிழக்கு மாகாணத் தமிழர்கள் அனுபவிப்பதற்கு தடைபோடாமல் இருப்பார்களா?

குறிப்பாக கல்முனைத் தமிழர்களை சரிசமமாக நடத்துவதற்கு முஸ்லிம்கள் தயாரா? கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு நாங்கள் தடை விதிக்க மாட்டோம் என எந்தவொரு முஸ்லிம் அரசியல்வாதியாவது சொல்வாரா? சரி ,ஒரு கணக்காளரை நியமிப்பதற்காவது எதிர்ப்பு தெரிவிக்காமலிருப்பார்களா? .

ஒன்றும் வேண்டாம் ,முஸ்லிம்கள் தமது மத விழுமியங்களின் படி ஜனாஸாக்களை புதைப்பதற்காக போராட்டம் நடத்துகிறார்கள். கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்களின் மத வழிபாட்டு சுதந்திரத்தையாவது முஸ்லிம்கள் அனுமதிப்பார்களா ? கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் பிரதேச செயலக வளாகத்தினுள் தாம் வழிபடுவதற்காக இந்து ஆலயம் ஒன்றைக் கட்ட முற்பட்ட வேளையில் (காத்தான் குடியில் அல்ல) கல்முனை நகரபிதா ஆலயம் கட்டுவதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். "இன்னா செய்தாரை ஒறுத்தல்" என்ற வள்ளுவனின் வாக்குக்கமைய ( சக தமிழ் அரசையல்வாதிகள் மட்டும் தான் அவர்களுக்கு ஜென்மவிரோதிகள்) செயற்பட்டு வரும் தமிழ்த் தேசிய அரசியல் வாதிகளைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை.

கல்முனை விவகாரத்துக்காகவே தாங்கள் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்ததாக முஸ்லிம் அரசியல்வாதிகள் கல்முனையில் தெரிவித்துள்ளனர். கல்முனையில் வியாழேந்திரன், கருணா போன்றவர்களின் செல்வாக்கு அதிகரித்து வருவதாகவும் அவர்களது கொட்டத்தை அடக்கவும் தான் தாங்கள் 20 க்கு ஆதரவளித்ததாக அந்த முஸ்லிம் அரசியல் வாதிகள் கூறியுள்ளனர். இதன் அர்த்தம் கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த அனுமதிக்க மாட்டோம் என்பதே. அரபு வாசகங்களை தூக்கிப்பிடிக்கும் தமிழ்த் தேசியவாதிகளுக்கு இது புரியுமா? ■

# யாழ்ப்பாண புது மேயர் மணிவண்ணனுக்கு...



## அவசரமா ஒரு கடுதாசி!

மேயர் பதவிக்கு போட்டிக்கு நிண்டு நீங்கள் வெண்டுட்டீங்கள் எண்டு கேள்விப்பட்டேக்கை நான் சண்முகம் கடையிலை சாப்பிட்டுக் கொண்டு இருந்தன். அப்ப பக்கத்திலை இருந்த என்ரை சகா சொன்னான். "ஆள் அல்பிரட் துரையப்பா மாதிரி. எங்கை கண்டு மறிச்சாலும் நிண்டு கதைக்கக் கூடியவர்." எண்டு. அவர் சொன்னதை ஏன் நான் உங்களுக்கு எழுதிறன் எண்டால், அதைச் சும்மா எடுக்கப்படாது. அது ஒரு நம்பிக்கை. அவற்றை மட்டுமில்லையாழ்.மாநகரத்திலை இருக்கிற பலரின்ரை நம்பிக்கையும் அதுதான் எண்டு சொல்ல வாறன். மாநகர சபைக்குள்ளை பல குறைபாடுகள் இருக்கு.

அதை முறையாகக் கையாண்டு சனத்துக்கு ஒரு தீர்வைச் சொல்லக் கூடியஒரு மேயராக ஆனோல்ட் இருக்க இல்லை எண்டதும் சனபேரின்ரஅபிப்பிராயம். அரசியலிலை தன்னை வளர்க்க வேணும், மேயர் பதவிக்குள்ளாலை தன்னை அடுத்தபடிக்கு உயர்த்த வேணும், மேயர் பதவியிலை கிடைச்ச சுகத்தை அனுபவிக்க வேணும் எண்டு காட்டின ஆர்வத்தை நல்ல நிர்வாகம் செய்யிறதிலை அவர் காட்டேல்லை எண்டும் சனம் கதைச்சது. தயவுசெய்து நான் அவரைக் குறை சொல்லுறதா எடுக்க வேண்டாம். என்னவோ தெரியாது , அவராலை நிர்வாகத்தைக் கொண்டு நடத்த முடியேல்லை.

ஆரியகுளம், வின்சர் சந்தியிலை இருக்கிற புல்லுக்குளம், ஆஸ்பத்திரிச் சுற்றாடல், சீரீபி பஸ் ஸ்ராண்ட் எண்டு எல்லாம் பல வருசங்களா அப்பிடியேதான் இருக்கு. அதுகளாலை சனத்துக்கு ஏற்படுற இட்டலிடைஞ்சல் கொஞ்சநஞ்சமில்லை. ராணி தியேட்டரடியிலை நிண்டு வின்சர் தியேட்டர் பக்கம் திரும்பிப் பாத்தால் யாழ்ப்பாண ரவுனின்ரை அரைவாசிச் சீத்துவக் கேட்டையும் பாக்கலாம். அந்த வாய்க்காலைச் சுத்தப்படுத்தி மழைத்தண்ணி ஓடுற வழிவாய்க்கால்களைச் சரியாப் பராமரிக்காத படியாலைதான் இந்த முறை யாழ்ப்பாணத்துக்கை மழை வெள்ளம் நிண்டு சனபேருக்கு நட்டம் வந்ததெண்டு கடைக்காரர் கதைச்சவை.

என்னசொன்னாலும் இந்தப் புது மேயர் பதவி உங்களுக்கு நித்திய கண்டம் பூரண ஆயுள் எண்ட மாதிரித்தான்.கத்தியிலை நடக்கிறமாதிரி எண்டும், உங்கடை கதிரைக்கு மேலை முகட்டிலை பெரிய கொடுவாக் கத்தி ஒண்டு தொங்க விட்டிருக்கிற மாதிரியான நிலைமைதான் எண்டும் ஒரு கதை இருக்கு.

இடையிலை திரும்பவும் அல்பிரட் துரையப்பாவைப் பற்றி எழுதிறனெண்டு குறைவிளங்க வேண்டாம். அவரும் அப்ப சிறிமாவின்ரைஎடுபிடியாத்தான் இருந்தவர். ஆனால், இண்டைக்கும் யாழ்ப்பாணத்திலை உள்ளவையளிட்டை மக்கள் மேயர் ஆர் எண்டு கேட்டால், உடனை துரையப்பாதான் எண்டு பதில் சொல்லுவினம். அவ்வளவுக்கு அவர் செய்த நல்ல வேலைகள் கொஞ்ச நஞ்சமில்லை. அவர் காலத்திலைதான் யாழ்ப்பாணப் புது மாக்கற் கட்டித் திறந்தது. துரையப்பா விளையாட்டரங்கைத் திறந்தவை. யாழ்ப்பாண றெயில்வே ஸ்டேசன் மற்றது யாழ்ப்பாண திறந்த வெளியரங்கம் எண்டு இப்ப யாழ்ப்பாணத்திலை பெரிய இடம் எண்டு சொல்லுற எல்லாத்தையும் கொண்டுவந்தது அவர்தான். அது மட்டுமில்லை, எங்கை கலியாணவீடு, செத்தவீடு நடந்தாலும் முதல் ஆளா நிக்கிறது அவராத்தானிருக்கும். அவரைப் பற்றி ஏன் இவ்வளவையும் நான் எழுதி மினைக்கெடுறன் எண்டால் அது உங்களுக்கு ஒரு நல்லபாடமா இருக்க வேணுமெண்டதுக்குத்தானே ஒழிய துரையப்பாவை நியாயப்படுத்தி றதுக்காக இல்லை. இத்தனையும் செய்த துரையப்பா சில விசயங்களிலை நிதானமா நடக்கேல்லை எண்டது மக்களின்ரை எண்ணம். அடுத்தது வீணைக்காரர் உங்களைத் தோழர் எண்டு கூப்பிடத் துவங்கிவிட்டினமாம் எண்டும் சனம் கதைச்சவை. அது உண்மையோ? அதுக்கு நான் அவையளை "சும்மா பேய்க்கதை பறையாதையுங்கோ." எண்டு பேசிப்போட்டன். மணியிட்டை இருந்து மணிக்குரிய சத்தம் வருமோ? இல்லாட்டி வீணைச் சத்தம்தான் வருமோ? எண்டதை ஒருக்காகச் சொல்லுங்கோ? பதில் போடுவியள் எண்டு காத்திருக்கிறன்.

அதிபட்சமுள்ள ,

[illegible]

# உப்புச் சப்பற்ற உச்ச நட்சத்திரம்

○ மையலோன்

இதோ வருகிறது, அதோ வருகின்றது என்று எதிர்பார்த்திருந்த புயல் கரையைக் கடக்காது சென்றமை போன்றே தமிழக சுப்பர் ஸ்டார் ரஜினியின் அரசியல் பயணமும் முடிந்துவிட்டது.

1990ஆம் ஆண்டு ஆரம்பம். தளபதி படம் வெளியாகியிருந்தது. அப்போது தமிழகத்தின் சில மாவட்டங்களில் "வருங்கால முதல்வர்" என்று குறிப்பிட்டு சுப்பர்ஸ்டார் ரஜினியின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. திரையுலகின் உச்சியில் இருந்த ரஜினியை எப்படியாவது அரசியலுக்குள் இழுந்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் ரஜினி ரசிகர் மன்றத்தினர் ஒட்டிய சுவரொட்டிகள்தான் அவை. அன்றில் இருந்து அரசியல் சூழலுக்குள் மெல்ல மெல்ல இழுபட ஆரம்பித்தார் ரஜினி.அதுதான் ரஜினியின் அரசியல் ஆரம்பம்.

1992 ஆம் ஆண்டு. அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவர் செல்வி ஜெயலலிதா. அவருக்குத் தமிழகத் திரைத்துறையின் சார்பில் ஒரு பாராட்டு விழா நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்ட ரஜினி, ஜெயலலிதா முன்பாக உரையாற்றினார். "நேற்று பஸ் கண்டக்டர், இன்று சூப்பர் ஸ்டார், நாளை என்னவோ... அதே நேரத்தில், ஆண்டவா எந்தச் சூழ்நிலையிலும் என்னை அரசியலில் விட்டுடாதேன்னு வேண்டிக்கிறேன். ஏன்னா அரசியலுக்கு வந்தா நிம்மதி போயிடும்." என்று வாயைக் கொடுத்தார். அரசியல் வேண்டாம் என்பது போன்று பேசிய ரஜினி, ஓரிரு மாதங்களில் "அரசியலுக்கு வருவது ஆண்டவன் கையில்.." என்றார். பின்னர் உழைப்பாளி படத்தில் "நேற்றுக் கூலி, இன்னைக்கு நடிகன், நாளை..." என்று பாதியிலேயே விட்டு, தனது ரசிகர்களைச் சந்தோசப்படுத்தினர். அந்த இடைவெளியை முதல்வர் என்று நிரப்பி ரசிகர்களும் சந்தோசப்பட்டுக் கொண்டனர். அதன்பின்னர் ரஜினியின் படங்களில் இப்படியான "பஞ்ச்" வசனங்கள் தாராளம். திரையில் தெறிக்க விட்டுக் கொண்டிருந்த ரஜினி, அரசியலுக்காகத் தரையில் எதுவும் செய்யவில்லை.

1995 ஆம் ஆண்டு வெளியான முத்து படத்தில் "நான் எப்போ வருவேன் எப்டி வருவேன்னு தெரியாது... ஆனா வர வேண்டிய நேரத்துல கரெக்டா வருவேன்..." என்று அவர் பேசிய பஞ்ச் வசனம், தங்கள் தலைவர் எப்படியும் அரசியலுக்கு வருவார் என்ற நம்பிக்கையை அவரது ரசிகர்களுக்கு ஏற்படுத்தியது.

இதுவரையில் திரையில் மட்டுமே அரசியல் கலந்த வசனங்களை தெறிக்க விட்டுக் கொண்டிருந்த ரஜினி, 1996ஆம் ஆண்டு முதல்முறையாக வெளிப்படையாக அரசியலில் இறங்கினார். அந்த ஆண்டில் ஜெயலலிதாவை எதிர்த்துப் பல கருத்துக்களை முன்வைத்தார். "ஜெயலலிதா திரும்பவும் ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது" என்று அவர் பகிரங்கமாகக் கூறியது அப்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அந்த ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி பெரும் வெற்றி பெற்றது. அது ரஜினியால் கிடைத்த வெற்றியாக அவரது ரசிகர்கள் கொண்டாடினார்கள்.

1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரஜினிக்கு அரசியலில் போதாத காலம் எனலாம். அதன்பின்னர் அவர் கூறிய அரசியல் கருத்துக்கள் மக்கள் மத்தியில் எடுபடவில்லை. 1998 ஆம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணிக்கு ரஜினி ஆதரவளித்தும் அந்தக் கூட்டணி தோல்வியையே தழுவியது.

2002 ஆம் ஆண்டு ரஜினியின் பாபா படம் வெளியானது. அதில் ரஜினி புகைபிடிக்கும் காட்சிகள் இருந்தமைக்கு பாட்டாளி மக்கள் கட்சி கடும் எதிர்ப்பு வெளியிட்டது. அதனால் கடுப்பாகிய ரஜினி 2004ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அந்தக் கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தார். ஆனால் போட்டியிட்ட ஆறு இடங்களிலும் அந்தக் கட்சி வெற்றி பெற்றது. நிலைமை கொஞ்சம் சிக்கல்தான் என்று உணர்ந்த ரஜினி, 2001ஆம் ஆண்டு தடாலடியாக ஒரு காரியம் செய்தார். இதுவரை கரித்துக் கொண்டிருந்த ஜெயலலிதாவை நேரில் சந்தித்து அவருக்கு பூங்கொத்து கொடுத்து பாராட்டி, தைரிய லட்சுமி என்று புகழ்ந்து தள்ளினார்.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரஜினி பெரிதாக அரசியல் விடயங்களில் கால் வைப்பதில்லை. சிவனே என்று இருந்தவரை 2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்காக வந்த நரேந்திர மோடி சந்தித்தார். அது மீண்டும் ரஜினியின் அரசியல் வருகையை பேசுபொருளாக்கியது. ஆனால் அது மரியாதை நிமித்தமான சந்திப்பு என்று கூறப்பட்டது. அதன்பின்னரும் ரஜினி கமுக்கமாக இருந்தார்.

2017ஆம் ஆண்டு மே மாதம் ரஜனி தனது ரசிகர்களை ராகவேந்திரா கல்யாண மண்டபத்தில் சந்தித்தார். அந்த மேடையில் தாமரையின் மீது பாபா சின்னம் இருப்பது போன்ற படங்கள் இருந்தன. அதனால் தலைவர் அரசியலில் குதிக்கப் போகின்றார், அதை அறிவிக்கப் போகிறார் என்று ரசிகர்கள் எதிர்பார்ப்புடன் இருந்தனர். அங்கும் வந்து வழமை போன்று "நான் அரசியலுக்கு வருவது ஆண்டவன் கையில்தான் இருக்கிறது" என்று குழப்பினார். என்னடா இது என்று விழித்த ரசிகர்களுக்கு, ரஜினி அங்கு பேசிய, "சிஸ்டம் கெட்டுப்போச்சு", "போர் வரும்போது பார்த்துப்போம்" என்பவை போன்ற வார்த்தைகள் கொஞ்சம் நம்பிக்கையளித்தன.

அதே ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி மீண்டும் ரசிகர்களைச் சந்தித்தார் ரஜினி. இந்த முறை கட்சி அறிவிப்பு வெளியாகும் என்ற பெரும் நம்பிக்கையுடன் இருந்தனர் ரசிகர்கள். "இது காலத்தின் கட்டாயம்... வரப்போற சட்டமன்றத் தேர்தல்ல தனிக் கட்சி ஆரம்பிச்சு, 234 தொகுதியிலேயும் நாம போட்டியிடுறோம்" என்று அறிவித்தார் ரஜினி. அந்த மண்டபம் அதிர்ந்தது, ரஜினி முதல்வர் என்று கனவு காணத் தொடங்கினர் ரசிகர்கள். 2018ஆம் ஆண்டு ஏப்ரம் மாதம் ஊடகங்களிடம் பேசிய அவர் "கட்சி ஆரம்பிப்பது உறுதி, திகதி பின்னர் அறிவிக்கப்படும்" என்றுகூறினார். அதன்பின்னர், அந்த ஆண்டு ஊடகங்களைப் பல தடவைகள் சந்தித்தார். டுவிற்றரில் கருத்துக்களைப் பதிவிட்டார். ஆனால் அவை பூமராங்காக மாறி அவரையே திரும்பி வந்து தாக்கின. சேப்பாக்கத்தில் நடந்த காவிரி மீட்புப் போராட்டத்தில் பொலிஸார் சிலர் தாக்கப்பட்டபோது, "வன்முறையின் உச்சக் கட்டமே சீருடையில் பணிபுரியும் காவலர்கள் தாக்கப்படுவதுதான்" என்று கருத்து வெளியிட்டு வாங்கிக் கட்டினார். அதிகார வர்க்கத்துக்கு வக்காலத்து வாங்குகின்றார் என்று கடும் விமர்சனங்கள் எழுந்தன. பல்டியடித்த ரஜினி பொலிஸார் மக்களைத் தாக்கியதும் குற்றமே என்றார்.

அணு உலைக்கு எதிராக தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு நடந்தவுடன் "மக்களின் உணர்வுகளை மதிக்காத அரசின் அலட்சியப்போக்கால் மக்கள் சுடப்பட்டு உயிரிழப்புக்கள் ஏற்பட்டன" என்று அரசை விமர்சித்தார் ரஜினி. மே மாதம் 30ஆம் திகதி தூத்துக்குடிக்கு மக்களை நலன் விசாரிக்கப் புறப்பட்ட அவர், நான் ஒரு நடிகனாகத்தான் தூத்துக்குடி செல்கின்றேன். என்னைப் பார்த்தால் மக்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று கூறிச் சென்றார்.

தூத்துக்குடி மருத்துவமனையில், அணு உலைக்கு எதிரான போராட்டத்தில் காயடைந்த ஒரு இளைஞரை நலம் விசாரித்தார் ரஜினி. "நீங்க யார்... சென்னையிலிருந்து இங்கே வர 100 நாள்களா?" என்று ரஜினியை ஊடகங்கள் முன் கேட்டு நாறடித்தார் அந்த இளைஞர். தூத்துக்குடியில் இருந்து சென்னை திரும்பியதும் செய்தியாளர்கள் துளைத்தெடுத்ததில் கடுப்பான ரஜினி, "மக்கள் எல்லாத்துக்கும் போராட்டம் போராட்டம்னு போனா... தமிழ்நாடு சுடுகாடா மாறிடும்" என்று கூறினார். இது அவருக்குப் பெரும் எதிர்ப்பை அந்த நேரத்தில் ஏற்படுத்தியது.

ரஜினிகாந்த் சினிமாவைப்போலவே அரசியலை அணுகுகிறார். அங்கும் யாரோ எழுதிக் கொடுத்த வசனத்தைப் பேசுகிறார். இங்கும் யாருக்காகவோ பேசுகிறார் என்று கடுமையாக விமர்சிக்கப்பட்டார் ரஜினி. அதன்பின்னர் பெரிதாக அரசியல் கருத்துகள் தெரிவிக்காமல், வாழ்த்து செய்திகள், இரங்கல் செய்திகளை மட்டுமே டுவிற்றர் பக்கத்தில் பதிவதை வழக்கமாக்கிக் கொண்டார். கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஊடகங்களிடம் பேசிய ரஜினி, தனக்கு முதல்வர் பதவி வேண்டாம் என்றார். மக்கள் மத்தியில் எழுச்சி வந்தபின்னர் அரசியலுக்கு வருவேன் என்று வழக்கம் போன்று பேசினார். அதனால் ரஜினி அரசியலுக்கு வந்தால் என்ன வராவிட்டால் என்ன என்ற முடிவுக்கு வந்தனர் ரசிகர்கள்.

அதன்பின்னர் அமைதியாக இருந்தவரை இழுத்துத் தெருவில் விட்டது, கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் அவரது பெயரில் வெளியான அறிக்கை.

அந்த அறிக்கையில் ரஜினியின் உடல்நிலையைக் குறிப்பிட்டு, அதனால் அரசியலுக்கு வரமாட்டார் என்று குறிப்பிட்டிருந்தது. அந்த அறிக்கை தன்னுடையது இல்லை என்று அறிவித்த ரஜினி, அதில் உள்ள உடல்நிலை பற்றிய விடயங்கள் சரியானவை என்று கூறினார். இது நடந்த பின்னர் ரஜினி மக்கள் மன்ற நிர்வாகத்தி னருடன் ஆலோசனை நடத்திய ரஜினி, எனது முடிவை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அறிவிப்பேன் என்றார். கடந்த ஆண்டு டிசெம்பர் 3ஆம் திகதி தனது கட்சி ஆரம்பத்தை அறி வித்தார். "ஜனவரியில் கட்சி ஆரம்பம், டிசெம்பர் 31இல் திகதி அறிவிப்பு" என்று தனது டுவீற்றரில் அறிவித்தார். அதன்பின்னர் ஊடகங்களிடம் பேசிய ரஜினி, "எனக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக இருப்பதால், கொரோனா காலத்தில் மக்களைச் சந்திக்க வேண்டாமென்று மருத்துவர்கள் சொன்னார்கள். ஆனால், தமிழக மக்களுக்காக உயிரே போனாலும் நான் சந்தோ ஷப்படுவேன். அரசியல் மாற்றம் ரொம்பக் கட்டாயம். அது காலத்தின் தேவை.

(08ஆம் பக்கம் பார்க்க)





அடுத்த முதலமைச்சர் ரஜினி என்று கனவு கண்ட அவரது ரசிகர்கள், தமது எதிர்பார்ப்பு எல்லாமே கனவாகிப் போனதில், இப்போது ரஜினியைக் கரித்துக்கொட்டத் தொடங்கியுள்ளார்கள். ஒரு உச்ச நட்சத்திரம் உப்புச்சப்பில்லாமல், கண் முன்னே உதிர்ந்து கொண்டிருக்கிறது.

# மௌன மொழி

## 28 இற்கான கவிதைகள்



மழையது இடையறாது பொழிந்து
மன்னக வாழ்வில் மாற்றம் மிகுந்த போதும்
மலையாய் சோகமது சூழ்ந்திடினும் - நம்
மழைகளில் மகிழ்ந்து நீராடும்
மனக்களிப்புக்கு எல்லையது ஏதும் உன்டோ!!!

**இ.ரிஷிதா, நயினாதீவு**

மாடி வீட்டருகே
கோடிகொட்டித் தடாகம் அமைத்து
கும்மி அடிப்போரே பாரீர்
இதுவொன்றும் ஜலம் மிகு
மாஜா ஜாலம் எனவெண்ணாதீர்
இத் தரணியிலே
இயற்கை அன்னை எமக்களித்த
இணையில்லா வரங்களில் ஒன்றென
எப்போது தான் புரிந்திடுமோ உமக்கு?

**வாமதேவன் வினோத்**
அரியாலை

இளமைப் பருவம் தனை
இனிமைப் பொழுதாக களித்திடவே
வெயிலோடும் மழையோடும் போராடி
நல்ல நட்போடு உறவாடி
நீரோடை தனில் உல்லாசமாய்
நீச்சலடித்த காலங்கள்
கானல் நீராய் கனவாகிப்
போனது தான் ஏனோ?

**ஆ. பாலமதுஜா,**
மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

### பரிசு பெறும் கவிதை

வான்மகள் பூமகளுக்கு அளித்த பரிசு மழை
அதனால் நிறைந்து வழிகிறது நீர் நிலை
நீர் நிறைந்த குளம் தனில் குதூகலமாய்
குளிக்கும் சிறார்களே!
கவனமாய் வீடு போய் சேருங்கள்
காவு கொள்ள காத்திருக்கின்றன
மாரிகால குளங்களும் கிணறுகளும்

**ச.மாலவன்**
*இல.159, பிறவுண் வீதி*
*யாழ்ப்பாணம்*

வாய்க்காலில் நீச்சலிட்டு
உல்லாசக் கூச்சலிட்டு
கூத்தாடும் போது மனம்
காத்தாடி போலலையும்
களிப்புடனே பொழுது கழிய
மகிழ்வெங்கும் பரவிடுதே

**காந்தருபன் கனிவிழி,**
தரம்6, வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை

பச்சைப் புல்வெளியுள்
தேங்கிய நீர் சுனையில்
ஆனந்த குளியலில்
உல்லாசம் காணும்
சின்னஞ் சிறுசுகளே
தண்ணீர் கன மட்டம்
எழுந்து மேல் பரவி வர
பூவுடலை புண்ணாக்கும்
இன்னுயிரையும் காவு கொள்ளும்

**ர.கார்த்திகாயினி**
வற்றாப்பளை

மாரி மழைக்கால
பள்ளி விடுமுறையில்பசும்
பச்சைப் புல்வெளியில்
மேலாடையின்றி
நீராடும் காக்கைகளாய்
பள்ள நீரோடையில்
இயற்கையின் குளிச்சியில்
குதூகலிக்கும் இளம் குஞ்சுகள்

**ரன் மதுசுதன்**
வற்றாப்பளை"

பகலவன் பார்வை படுமிப்பாரிலே
வருடும் பூங்காற்றை உணர்ந்து,
வயல்வெளிதனில் நீச்லடித்து,
வானளவு உவகையுடன்
வாழ்வுதனை வசந்தமாக்கும்
வஞ்சகமில்லா வாழ்வை
வாழும் பாலகர்கள் தான் இவரோ......

**ஆ கர்ஷிகா**
யா/ ஸ்கந்தவரோதயக்கல்லூரி

## 29



இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**
**09.01.2021**

கவிதைக்கு பரிசு 1000/=

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*
0773165555

# உப்புச் சப்பற்ற...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது இப்போ இல்லைன்னா... எப்பவும் இல்லை. எல்லாத்தையும் மாத்தணும்" என்று தனது அரசியல் பிரவேசத்தை உறுதிப்படுத்தினார்.

கட்சி அறிவிப்புக்கு முன்னர் தனது 'அண்ணாத்த' படப்பிடிப்பை முடிக்க வேண்டும் என்று கூறியிருந்த ரஜினி, ஹைதராபத்தில் படப்பிடிப்பில் கலந்து கொண்டார். அந்தப் படப்பிடிப்புக் குழுவில் சிலருக்கு டிசெம்பர் 24ஆம் திகதி கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து ரஜினி தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார். அவருக்கு இரத்த அழுத்தம் சீரற்று இருக்கின்றது என்ற தகவலும் வெளியானது.

அங்குள்ள அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மூன்று நாள்கள் சிகிச்சையின் பின்னர் 27ஆம் திகதி வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார். பின்னர் தனி விமானத்தில் சென்னை திரும்பினார். சென்னை வந்தவர் 3 பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டார். "கட்சி தொடங்கவில்லை, பரப்புரைகளின்போது என் உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டால், என்னை நம்பி என்கூட வந்து, என்னுடன் அரசியல் பயணம் மேற்கொண்டவர்கள் பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர்கொண்டு மன ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பல துன்பங்களைச் சந்திக்க நேரிடும். இல்லை, நான் கொடுத்த வாக்கைத் தவற மாட்டேன். நான் அரசியலுக்கு வருவேன் என்று சொல்லி, இப்போது அரசியலுக்கு வரவில்லை என்று சொன்னால் நாலு பேர் நாலு விதமா என்னைப் பற்றிப் பேசுவார்கள் என்பதற்காக என்னை நம்பி என்கூட வருபவர்களை நான் பலிக்கடா ஆக்க விரும்பவில்லை. ஆகையால், நான் கட்சி ஆரம்பித்து அரசியலுக்கு வர முடியவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதை அறிவிக்கும் போது எனக்கு ஏற்பட்ட வலி, எனக்கு மட்டும்தான் தெரியும்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். "மக்களுக்கு என்னால் என்ன சேவை செய்ய முடியுமோ, அதை நான் செய்வேன். என் நலத்தில் அக்கறை உள்ள என் மேல் அன்பு கொண்ட என்னை வாழவைக்கும் தெய்வங்களான ரசிகர்களும் தமிழக மக்களும் என்னுடைய இந்த முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என்றும் ரஜினி அந்த அறிக்கையில் தெரிவித்திருந்தார். அடுத்த முதலமைச்சர் ரஜினி என்று கனவு கண்ட அவரது ரசிகர்கள் எல்லாமே கனவாகிப் போனதில், இப்போது ரஜினியைக் கரித்துக் கொட்டத் தொடங்கியுள்ளார்கள். ஒரு உச்ச நட்சத்திரம் உப்புச்சப்பில்லாமல், கண் முன்னே உதிர்ந்து கொண்டிருக்கிறது.

# மணிக் கதை

○ மௌனா

## பஸ் நிலையம்

ஜனசந்தடிகளின் ஆர்ப்பரிக்கும் ஒலியையும் மீறி எழுந்து, அனைவரையும் ஆக்கிரமித்து மயக்கிக் கொண்டிருந்தது அந்தப் புல்லாங்குழல் இசையின் நாத வெள்ளம்.

விழாவொன்றில் பேசப் போகும் அவசரம் எனக்கு. இருப்பினும் இசையில் லயிக்கும் மனதை இழுத்துக்கொண்டுபோவது அவ்வளவு சுலபமாயில்லை. குழுமி நிற்கும் கூட்டத்திடையே தலையை நுழைத்துப் பார்க்கின்றேன். பத்துப் பன்னிரண்டு வயதுப் பாலகன், கோவில் விக்கிரகம் மாதிரி. பிறவி ஞானம் போலும், இசை மடை திறந்து பாய்கின்றது. நுழைத்த தலையை இழுக்க மறந்த நிலை. பிரபஞ்ச கீதம் நின்றது போன்று சில்லறைகள் விழுகின்றன. கூட்டம் கலைகிறது. நான் நிற்கின்றேன். மெய் மறந்த நிலை. அந்தச் சிறுவன் என்னையே பார்க்கின்றான் இல்லை. ஆட் கொள்கின்றானோ...

நான் கேட்கின்றேன்...

"தம்பி உங்கட அப்பா, அம்மா?"

ஒரு கணம் மௌனம் .... பிறகு

" அப்பா காலஞ்சென்ற சங்கீத வித்துவான் ஞான பண்டிதர் அம்மா..." என்றபடியே பின்னால் இருந்த முதிய பெண்ணைப் பார்த்தான் எனக்குப் பொறி தட்டியது.

அவசரமாக பொக்கற்றுள் இருந்த விழா அழைப்பிதழை எடுத்துப் பார்த்தேன் மகாவித்துவான் ஞான பண்டிதர் நினைவு விழா.

கண்களை ஏதோ மறைக்கின்றதே..........

கூட்ட நினைவு அகல சரியான கூட்டத்தில் கலந்துவிட்ட நினைவு எனக்கு

"தம்பி இன்னொரு பாட்டு வாசிக்கிறாயா?"

என்றபடி அவனருகே அமர்கின்றேன்....

# சிறுநீர் கழிக்கும்போது எரிச்சலும் நோவும் ஏற்படுவது ஏன்?

## நலம் அறிய...




மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
- சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)

**எனக்கு அடிக்கடி சிறுநீர் கழிக்கும் போது மிகுந்த எரிச்சலும் அடிவயிற்று நோவும் ஏற்படுகிறது. ஏன் என்று காரணம் புரியவில்லை. நிறையத் தண்ணீர் குடித்தால் மாறி விடும் என்று அம்மா சொல்கிறார். இது உண்மையா டாக்டர்? இவ்வாறு அடிக்கடி சிறுநீர் தொற்று ஏற்படுவதனால் எனக்கு நிரந்தரமாக ஏதாவது உடலுறுப்பு பாதிப்படையும் சாத்தியக்கூறு உள்ளதா?**

**த.சியாளினி, வல்வெட்டித்துறை.**

Urinary Tract Infection (UTI)




### சிறுநீர் வெளியேறும் பாதையில் தொற்று

சிறுநீரக தொகுதியானது, யூரிட்டர், சிறுநீர்ப்பை, சிறுநீரகம் மற்றும் யூரேத்திராவை உள்ளடக்கியது. சிறுநீர் வெளியேறும் பாதையில் ஏற்படும் தொற்று பெரும்பாலும் பக்றீரியாக்களால் ஏற்படுவது (E.COLI). நீங்கள் பெண்ணாக இருக்கும் பட்சத்தில் ஆண்களை விட உங்களுக்கு இத்தொற்று ஏற்படும் வாய்ப்பு அதிகம். ( ஏன் என்றால் பெண்களின் யூரேத்திரா ஆண்களுடைய யூரேத்திராவுடன் ஒப்பிடுகையில் சற்று நீளம் குறைவானது. எனவே பக்றீரியாத் தொற்று ஏற்படின் அது இலகுவாக சிறுநீர்ப் பையைச் சென்றடைந்துவிடும்) உடலில் ஏற்படும் தொற்றுக்களில், சிறுநீர் வெளியேறும் பாதை தொற்றானது இரண்டாம் இடத்தை வகிக்கும் பொதுவான தொற்றாகும்.

### தொற்றுக்கான அறிகுறிகள்

- நோயாளியின் வயது
- தொற்றின் தீவிரத்தன்மை
- தொற்று உண்டாகும் சிறுநீரகத் தொகுதியின் பாகம்
- என்பவற்றுக்கு ஏற்ப வேறுபடும்.

1. சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல்/ வலி
2. சிறுநீர் கழிக்கும் தடவை அதிகரித்தல்
3. சிறுநீர் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறுதல்
4. துர்நாற்றத்துடன் கழியும் சிறுநீர்
5. மேகமூட்டம் போல (Cloudy) சிறுநீர்
6. சிவப்பு/ குருதியுடன் கலந்த சிறுநீர் (Cococola – கொக்ககோலா போன்ற)

- அடிப்பாக வயிற்றுவலி
- காய்ச்சல்/ குளிர்காய்ச்சல்
- முதுகில் மேற்புறமும், ஒரு புறத்துவலி
- வாந்தி
- நலிவான உடல்நிலை.

இவ்வாறான அறிகுறிகள் ஏதும் ஏற்படின் மருத்துவ உதவியை உடனடியாக நாட வேண்டும்.

### தொற்று ஏற்படுவதற்கான காரணங்கள்

1. சிறுநீர் செல்லும் பாதையில் அடைப்பு ஏற்படுதல்
2. Sexually active - ஒப்பீட்டளவில், கிரமமாக உடலுறவு மேற்கொள்வோர்
3. பிறப்பிலிருந்து வரும் அசாதாரணமான கட்டமைப்பு. பெரும்பாலும் சிறார்களில் இது காணப்படும். Vesicoureteric Reflex (வழமையாக சிறுநீர் கீழ்நோக்கி வருதல் வேண்டும். இதற்கு மாறாக சிறுநீர் மேலே நோக்கி செல்வதாகும்.)
4. சிறுநீர்ப்பை/ யூரீட்டர்/யூரேத்திரா/ சிறுநீரக- கற்கள்
5. **catheterization** மருத்துவ தேவைகளுக்காக உடலினுள் செலுத்தப்பட்டிருக்கும் கதீட்டர்கள்.
6. Benign Prostatic hyperplasia - புரொஸ்டேட் சுரப்பி விரிவதால் 55-60 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு இதனால் ஏற்படும் சிறு நீர்த் தொற்று.
7. நோயெதிர்ப்பு சக்தி உடலில் குறையும் வண்ணம் ஏதும் நோயுள்ளவர்கள்

**உதாரணம் : நீரிழிவு, எய்ட்ஸ் , புற்றுநோய்.**

மீண்டும் மீண்டும்/ குறைந்த கால இடைவெளியினுள் ஏற்படும் இத்தொற்றால் வயது முதிர்ந்தவர்கள் நிரந்தர பாதிப்பு எதனையும் அடைவதில்லை. ஆனால் சிறுவர்கள்/ குழந்தைகளை பொறுத்தவரையில் காலதாமதமோ அல்லது முறையான சிகிச்சையோ அளிக்கப்படாத பட்சத்தில் சிறுநீரகம் செயலிழக்கும் அபாயம் உண்டு. எனவே சிறுநீர்த் தொற்று சிறார்கள் விடயத்தில் மிக மிக அவதானமாக கையாளப்பட வேண்டிய ஒன்று.

மருத்துவர் உங்களின் சிறுநீரைப் பரிசோதிப்பர்
1. UFR (Urine full report) 2.Urine cullture & ABST
இதுவே தொற்றை உறுதிப்படுத்தும் முதன்மையான சோதனை
ANTIBIOTIC - அன்டிபயாட்டிக் உட்கொள்ள முதல் செய்ய வேண்டியது.
குறிப்பாக எந்த பக்றீரியா தொற்றை ஏற்படுத்தியது என கண்டறியப்படும்.

**FBC - Full Blood Count**
**RFT - Renal function test**

இவை மேலதிகமாக மேற்கொள்ளப்படும்.

இவை அனைத்தின் பின்னரும் மருந்தளித்தும் மீண்டும் மீண்டும் சிறுநீர்த் தொற்று ஏற்படின் அல்லது நோயாளி குணமடையாத விடத்தில் **USS / Xray** - அல்ட்ராசவுண்ட் சோதனை/ எக்றோ சோதனை மேற்கொள்ளப்படும்.

**CT Scan / MRI Scan** மூலம் வயிற்றின் அடிப்பகுதி படமெடுக்கப்படும்.

**Voiding Cystourethrogram**
**Intravenous Urography**

காசநோய் உள்ளதா என்று சோதித்தல்
**Cystoscopy / Urodynamics**

### இத்தொற்றை தடுக்கும் வழிமுறைகள்

1. அன்றாடம் 3-4 லீற்றர் திரவ/நீர் உட்கொள்கை. இது பக்றீரியாவை சிறுநீர் பாதையிலிருந்து வெளியேற்ற உதவும். (Flushing effect)
2. குறித்த கால இடைவெளியில் (2/3 மணி நேரத்துக்கு ஒருமுறை சிறுநீர் கழிப்பதை பழக்கமாகக் கொண்டிருத்தல்.
3. சிறுநீரை அடக்கி வைத்திருப்பதை தவிர்க்க வேண்டும்.
4. Vit c அதிகமுள்ள உணவுகளை உட்கொள்ளுதல்
5. மலச்சிக்கலை தவிர்த்தல்/ உரிய சிகிச்சை மேற்கொள்ளுதல்
6. பெண்கள் முன்புறத்திலிருந்து பின்புறமாக சுத்திகரிக்கையில் நன்றாக கழுவவேண்டும். (இது பக்றீரியாக்கள் பெண்குறியிலிருந்து யூரேத்திராவுக்கு பரவுவதை தடக்கும்)
7. பிறப்புறுப்பையும் மலவாசலையும் உடலுறவுக்கு முன்னும் பின்னும் நன்றாக சுத்திகரித்தல் வேண்டும்.
8. நன்கு காற்று உட்புகக்கூடிய உடலுக்கு ஒத்த சுகாதாரமான உள்ளாடையணிதல்.

# வித்துவான் பதில்கள்!

**வித்தூ ஐயா.. உருமாறிய கொரோனா என்ன பஞ்ச் டயலொக் பேசும் என்று உங்கள் கற்பனைக் குதிரையை தட்டிவிடுங்க பார்ப்போம்...?**

பார்கவி, திருநெல்வேலி.

நான் எப்ப வருவேன். எப்படி வருவேன் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் வர வேண்டிய நேரத்தில் கரெக்டா வருவேன்.



**வித்தூஸ்...
திடீரென்று உங்கள் முன் ஆணோ பெண்ணோ வந்து உங்களை காதலிக்கிறேன் என்று சொல்லும்போது உங்கள் ரியாக்சன் என்ன ?**

சுலோஜினி, கொக்குவில்.

ஐயோ! இதை இருபது வருடத்துக்கு முந்திச் சொல்லி இருக்கக் கூடாதா என்று தோன்றும்.



**வித்துவானே...உங்கள் உடனிருப்பவர்களே உங்களுக்கு பகையாய் மாறும்போது உங்களின் ரியாக்சன் எப்படி இருக்கும்?**

கண்மணி, சண்டிலிப்பாய்.

முன்னால் நிற்பவர் கண்ணில் குற்றினால் தாங்கிக் கொள்ளலாம். தன்கையே கண்ணில் குற்றினால் என்ன செய்வது?



நீங்களும் கேள்விகள் கேட்கலாம்...
எழுதி அனுப்புங்கள்

வித்துவான் பதில்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
sanjeevi@uthayan.com



○ மின்னல்

# திரடி அரங்கு

## கல்லுக்குள் ஈரம்

சாவகச்சேரி மருத்துவமனையில் கடந்தவாரம் சிறுவன் ஒருவன் சிகிச்சை பெறுவதற்காக சேர்க்கப்பட்டிருந்தான். அவன் சேர்க்கப்பட்டிருந்த அதே விடுதியில் இன்னொரு நோயாளியின் செல்போனைக் காணவில்லை. இதுபற்றி அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அவருக்கு இந்தச் சிறுவன் மீது சந்தேகம்.

விடுதியில் தங்கியிருந்த 14 வயதான சிறுவன் வெளியே சென்று வருவதற்கும் முயற்சித்தான். ஆனால் அனுமதிக்கப்படவில்லை.

இதனால் சிறுவன் அடிக்கடி விடுதியின் வெளிப்புறமாக ஒரு இடத்தை மட்டும் அடிக்கடி 'வைத்த கண் வாங்காமல்' நோட்டமிட்டதைப் பாதுகாப்பு உத்தியோகத்தர் அவதானித்துவிட்டார். உடனேயே அவனை விடுதிக்குள் செல்லப் பணித்துவிட்டு, சிறுவன் 'கண்வைத்த' இடத்தை சல்லடை போட்டு தேடினார் பாதுகாப்பு உத்தியோகத்தர். செல்போன் சிக்கியது.

பின்னர் சிறுவனை தனியே அழைத்து கேட்டபோது முதலில் "நான் எடுக்கவில்லை" என அவன் மறுத்துள்ளான். பின்னர் "பொலிஸில் கொடுப்போம்" என மிரட்ட, சிறுவன் உண்மையை ஒத்துக்கொண்டதோடு, தன்னிடமிருந்த சில 'சிம் கார்ட்' களையும் ஒப்படைத்துள்ளான். சிறுவனின் வயதையும், எதிர்காலத்தையும் கருத்திற் கொண்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவனை மன்னித்து, "இனிமேல் இப்படிச் செய்யக்கூடாது" என்று எச்சரித்து விடுவித்தனர்.அதை விட அந்தச் சிறுவன் அங்கேயே தொடர்ந்தும் சிகிச்சை பெறவும் அனுமதித்துள்ளனர். நோயாளிகள் மீதும், அவர்களைப் பார்வையிடச் செல்வோர் மீதும் "வள்" ளென்று பாயும், மருத்துவமனைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மத்தியில் இப்படி நல்லமனம் கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

## குப்பை வேலை



கடந்தவாரம் யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் நடந்த சம்பவம் இது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் குழுவொன்று தன்னார்வ அடிப்படையில், தங்கள் கிராமச் சூழலைச் சிரமதான அடிப்படையில் சுத்தம் செய்திருந்தனர்.

குறிப்பாக அந்தப் பகுதியில் பலர் தங்கள் வீட்டுக் குப்பை, கூழங்களை வீதிகளில் கண்டபடி கொட்டி,. சூழலை அசுத்தமாக்கி வந்தனர். அவ்வாறு கிராம வீதியோரங்களில், போடப்பட்டிருந்த குப்பைகளை அகற்றிய இளைஞர்கள் . இனிமேல் இப்படி பொறுப்பற்ற வகையில் செயற்பட வேண்டாம் கோரிக்கையும் விடுத்தனர்.

ஆனால் அடுத்த நாள் காலை சுத்தமாக்கப்பட்ட இடமொன்றில் , மீண்டும் குப்பைகள் கொட்டப்பட்டிருந்தன. முதல் நாள் முழுவதும் கஷ்டப்பட்டு, சுத்தம்செய்த இளைஞர்களுக்கு கோபம்தான் வந்தது. ஆனால் இப்படி குப்பை கொட்டிய விஷமி யார் என்று தெரியாதே. உடனேயே அவர்கள் குப்பையை பிரித்து மேயத் தொடங்கினர். இதன் போது ஒரு சில பழைய ஆவணங்கள் அந்தக் குப்பைக்குள் இருந்தன.

அந்த ஆவணங்களில் உள்ள முகவரி மூலம் குப்பை கொட்டியவரை இளைஞர்கள் இனம் கண்டனர்.

அவ்வளவுதான். அத்தனை குப்பையையும் அள்ளிக் கட்டிக் கொண்டுபோய், குறித்த நபரின் வீட்டுக்கு முன்பாக இளைஞர்கள் கொட்டி விட்டு வந்தனர். அந்தக் குப்பை கொட்டிக்கு திருடனுக்கு தேள் கொட்டியது போலாயிற்றாம்.

○ கோகுலராகவன்



# II குழைக்காட்டு கதைகள்

## தானாகச் செத்த குரங்கில்லை

சாவகச்சேரி, மற்றும் பளை பிரதேசங்களில் குரங்குகள் அதிகம் . இந்தப் பிரதேசத்தில் வாழும் குரங்குகளை 'மந்தி' எனவும் அழைப்பர். கறுப்பு நிறத்திலானவை. 'சிறியான்' என்ற வகையும் இருக்கின்றது. இவை வடமராட்சி கிழக்கில் அதிகம். இந்த இரண்டு வகைக் குரங்குகளும் பயன்தரு மரங்களுக்கு அழிவைத் தருபவை. இவை கூட்டம் கூட்டமாக வாழும் தன்மை கொண்டவை. பெரிய கண் குரங்கை 'தாட்டான்' என அழைப்பர். இது சிலவேளை கூட்டத்தின் தலைவராகவும் இருக்கும். கட்டளை இடுவதில் மிகத் தேர்ச்சி பெற்றதாகும். உணவு கிடைத்தால் ஒரு தொனி, எதிரியைக் கண்டால் ஒரு தொனி. சேதாரம் செய்வதற்கு ஒரு தொனி என பல ஒலிகளில் கட்டளை இடும்.

ஒரு தடவை மிளகாய்த் தோட்டத்தில் நாய்களால் சுற்றி வளைக்கப்பட்டு வசமாக மாட்டிக் கொண்ட குரங்கை ராசாண்ணை மண்வெட்டிப் பிடியால் அடிக்க ஓங்கியபோது அதன் கண்களில் இருந்து கண்ணீர் வருவதைக் கண்டுவிட்டார். நாய்களைப் பிடித்து வைத்துக் கொண்டு அந்த குரங்கை ஓட விட்டு விட்டார். பிறகு எங்களுக்குச் சொன்னார்,

"பாவமடா தம்பி கண்ணீர் விட்டு அழுகுது"

## கோணாத தென்னை இல்லை

பளைப் பிரதேசத்தின் பிரதான பயிர் தென்னை. பனை தானாக வளரும். ஆனால் தென்னை அப்படியல்ல. தென்னைகளுக்கும் எங்களுக்கும் ஊடாட்டம் மிக அதிகம். எங்களைப் படிக்க வைத்ததில் அவற்றின் பங்கு அளப்பரியது. அம்மா தென்னைகளுக்கு பேர் வைத்தே விடுவார். "கிணற்றடிச் சிவப்பி, கோழிக் கூட்டடி பச்சைக்காய்ச்சி, பாக்கு கொட்டச்சி" இப்படி அவற்றின் குறியீட்டுப் பெயர்கள் அமைந்து விடும். வளவு மூலையில் சோடைத் தென்னை ஒன்று நீண்டநாள்களாக நின்றது. நல்ல பச்சை நிறத் தேங்காய். தேங்காய் விழுந்தால் குண்டு போட்ட மாதிரி 'தொபீர்' என்ற சத்தம் எழும். 1985 இல் பலமான சூறாவளிக் காற்று வீசும் என வானொலியில் அறிவித்தார்கள். சோடைத் தென்னை கொஞ்சம் சரிந்தபடி நின்றது. வீட்டில் விழும் அபாயம் இருந்ததால் தறிக்க முடிவு செய்தார் அப்பா.

மரத்தைத் தறிக்க ராசாண்ணை வந்தார்.

"சரியான உயரமப்பா. துண்டு போட்டுத்தான் தறிக்க வேணும். கயிறு எடுத்துக் கொண்டு வாறன்"

கயிறு எடுக்கப் போனவர் கயிற்றை எடுத்துக் கொண்டு எங்கள் வீட்டு வளவு படலைக்குள் நுழையவும், அந்தத் தென்னை வீட்டுப் பக்கமாக விழாமல் கொஞ்சம் விலத்தி "தொமார்" என்று விழுந்தது. கயிறு போட ராசாண்ணை ஏறி இருந்தால்..? "தம்பி... எலும்பு எண்ணித்தான் எடுத்திருக்கவேணும்" அவருக்கு கைகால் நடுங்கியதை இரகசியமாக கண்டேன். "அப்பு தென்னை இராச பயிர். மனிதருக்கு தீங்கு செய்யாது"

## வீணான நிலம் இல்லை

பளைப் பிரதேசம் மணற்பாங்கான நிலம். போடுகின்ற பசளை முழுவதும் நிலத்துக்குள் விரைவாகப் போய்விடும். ஆனாலும் திரும்பத் திரும்ப பசளை போட்டு மண்ணை வளமாக்கி பிழைத்தவர்கள் எமது ஊர்க்காரர்கள். நெல்வயலும் தோட்டமும் செழிப்பாக வரப்பண்ணியவர்கள். கன கப்பா மாட்டு எரு பறித்து தோட்டம் செய்வார். எருவைப் பரவி தரையைக் கொத்த வேண்டும்.

அவரும், மகனும், வேலைக்கார பொடியனும் சேர்ந்து கொத்துவார்கள். கொத்தும்போது மண்ணுக்குள் இருந்து வெளிவரும் " குறவணன்" எனும் புழுவை கையால் எடுத்து முன் தரையில் அடிக்க வேண்டும். அது உடல் சிதறி பலியாகிவிடும். ஒவ்வொரு புழுவையும் ஓங்கி அடிக்கும் போது கனகப்பா "அவன்தான்" என்று பாராட்டுவார்.


ஒருமுறை மகன் அடித்த புழு கை நழுவி கனகப்பா முதுகில் பட்டு 'சளீர்' என்று வெடித்து முதுகில் வழிந்தது. கனகப்பா "அடப் பாழ்படுவானே" என்று கத்தியபடி கிணற்றடிக்கு குளிக்க ஓடினார்.

**இப்போது பளைப் பகுதியில் ஊர் மக்களால் பேசப்படும் ஒரு பழமொழி சார்ந்த இந்த மூன்று கதைகளின் தலைப்புகளையும் ஒன்றாகச் சொல்லிப் பாருங்கள். இது பளைப் பகுதியில் செவி வழியாக வந்து கொண்டிருக்கும் ஒரு பழமொழி.**

**"தானாகச் செத்த குரங்கில்லை**
**கோணாத தென்னை இல்லை**
**வீணான நிலம் இல்லை"**

# கொரோனா காலம்: நெருக்கடிகளை எதிர்கொள்ளல்

சிக்மலிங்கம் றெஜினோல்ட்



கொரோனா உங்களுக்கும், எனக்கும் மட்டுமல்ல உலகெங்கும் உண்டாக்கியிருக்கும் புதிய வாழ்க்கைச் சவால்கள் கொஞ்சமல்ல. மிகச் சாதாரண மக்களிலிருந்து அரசுகள் வரையில் ஆட்டம் காண வைத்திருக்கிறது என்பதையெல்லாம் நீங்களும் அறிவீர்கள். பெரிய பெரிய நிறுவனங்கள் எல்லாம் இந்த நெருக்கடி நிலையை எப்படிச் சமாளிப்பதென்று தெரியாமலே திணறிக்கொண்டிருக்கின்றன. இதெல்லாம் ஒட்டு மொத்தத்தில் சாதாரண சனங்களையே கூடுதலாகப் பாதிக்கும். இதற்கு உதாரணமாக இங்கே இரண்டு கடிதங்கள். இவை காலத்தின் சாட்சியங்கள். ஒரு கடிதம் தமிழ்நாட்டைச் சேர்ந்த நண்பர் ஒருவருடையது. மற்றையது நம்முடையது.

## கடிதம் 01

கொரோனா ஊரடங்கு காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் நான் பணியாற்றி வந்த இதழ் அச்சாகவில்லை. இந்நிலையில் ஜூலை மாதம் குறித்த இதழை நிறுத்துவதாக நிர்வாகம் முடிவெடுத்துவிட்டது. இப்போது எல்லாப் பக்கங்களில் இருந்தும் ஆட்குறைப்பு, சம்பளக் குறைப்பு என்ற செய்திகளே வருவதால், நான் புதிதாக எங்கும் முயற்சி செய்யவில்லை. ஊருக்கு வந்து விட்டேன். ஆனால், வரும் நாள்களில் பணி இல்லை என்றாலும், புதிய முயற்சிகள், இணையத் தளம் என என் வாசிப்பு ஆர்வங்களுக்கு தீனி போடும் வேலைகளை தொடர்ந்து செய்துகொண்டுதான் இருக்கிறேன்.

ஊரில் எங்கள் அப்பா வழியாக எனக்கு வந்த நிலம் + என் தம்பி பாகம் சும்மாதான் கிடந்தது. அதில் மரங்கள் போட்டு ஒரு தோட்டமாக மாற்ற வேண்டும் என்று கடந்த சில வருடங்களாகவே முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். ஆனால், ஊரில் தொடர்ந்து 2 3 நாள்களுக்கு மேல் இருக்க முடியாததால் அது நடக்கவில்லை. எனவே, இப்போது அந்த முயற்சியில் உள்ளேன்.

ஒகஸ்ட் மாதம் ஊருக்கு வந்தேன். முதலில் ஊரில் இருக்கும் எங்கள் பூர்வீக வீட்டை சரி செய்யும் வேலைகளை செய்து கொண்டுள்ளேன். அது தை பொங்கலுக்கு முன்னால் முடிந்துவிடும். அதன்பின்னர் தோட்டத்தில் வேலைகளை தொடங்க வேண்டும்.

நான் சிறு வயதில் அறிந்து, பழகி வைத்திருக்கும் விவசாயம் வேறு. இப்போதுள்ள விவசாய முறைகள் வேறு. இதில் எப்படிப் பொருந்திக் கொள்வதென்று திணறுகிறேன். வந்ததும் பூசணி, உழுந்து பயிர் செய்தேன். இரண்டிலும் முழுமையாக நட்டம். பூசணியில் வைரஸ் தாக்குதல் காரணமாக இலைகள் மஞ்சளாகி, பின்னர் சாம்பலாகிவிட்டன. 1.75 ஏக்கரில் இருந்து 100 காய்கள் மட்டும்தான் கிடைத்தன. அதுவும் சிறிய காய்கள். உழுந்தை, களை மூடிவிட்டது. அரை ஏக்கரில் இருந்து ஒரு கிலோ உழுந்துதான் கிடைத்தது. முருங்கை மரம் வைக்கலாம் என்று 1500 செடிகள் வாங்கினேன். அத்தனையும் பூச்சி சாப்பிட்டு ஒன்றும் இல்லாமல் ஆகிவிட்டன. இந்த மூன்று முயற்சிகளும் பலன் தராததால்தான், வீட்டு வேலைகளை முடித்து விட்டு, பின்னர் பார்க்கலாம் என தற்போது தோட்டத்தில் எதுவும் செய்யாமல் உள்ளேன்.

சொட்டுநீர்ப்பாசனம் அமைத்துவிட்டு, தென்னை மா கொய்யா என பல்வேறு வகை மரங்கள் வைக்கத் திட்டம். இந்த மரங்கள் வளர்ந்து பலன் தருவது வரைக்கும் இடையிடையே ஊடு பயிர்கள் செய்து வருமாணம் எடுக்க முயற்சிக்க வேண்டும். இரண்டு வருடங்கள் வரைக்கும் பார்ப்போம் என நினைத்திருக்கிறேன். அதன்பின்னரும் தோட்டம் கை கொடுக்கவில்லை என்றால் மீண்டும் சென்னை சென்று வேலை தேடவேண்டும். நீங்களும் விவசாயம் சார்ந்த பணிகளில் இருப்பது தெரியும். கடந்த ஜனவரியில் சென்னையில் பார்த்தபோது, நிலங்களை திருத்தும் பணிகளை செய்துகொண்டிருப்பதாக சொன்ன ஞாபகம். பின்னர் இது தொடர்பான உங்கள் ஃபேஸ்புக் பதிவுகளைப் பார்த்தேன். நீங்கள் எத்தனை பெரிய பெரிய நெருக்கடிகளை கடந்து வந்தவர். இந்தக் காலகட்டத்தையும் கடந்து விடுவீர்கள்.

கொஞ்சம் சிரமப்பட்டாலும் பின்வாங்காமல் இந்தக் காலகட்டத்தை கடந்துவிட்டால், ஒரு பிரகாசமான எதிர்காலம் இருக்கலாம் என்ற நம்பிக்கையுடன் தான் நான் தோட்டத்தில் இறங்கியுள்ளேன். பார்ப்போம்.

அன்புடன்,
இந்திய நட்பு.

## கடிதம் 02

நீங்கள் சொல்வதைப்போல கொரோனா நம்மைப் போன்றவர்களை நெருக்கடிக்குள்ளாக்கியது மட்டுமல்ல, நம்மைப் பல கோணங்களில் ஆழமாகச் சிந்திக்கவும் வைத்துள்ளது. நெருக்கடிகளுக்குள்ள பொதுவான இயல்பு இது. யுத்தகால நெருக்கடிகளில் நாங்கள் வழமைக்கு மாறாக ஆனால், அந்த நிலைமையை வெல்வதற்கான அல்லது தாக்குப் பிடிப்ப தற்கான முறைமைகளை உருவாக்கினோம். அப்படித்தான் உள்ளது கொவிட் 19 நெருக்கடியும்.

நம்மைப்போன்றவர்கள் பொருளாதார ரீதியில் தாக்குப் பிடிக்கவோ பதிலாக அடுத்த தளத்தை நிர்மாணிக்கவோ உடனடிச் சாத்தியம் குறைந்தவர்கள். அல்லது இல்லாதவர்கள். அதனால் மரபார்ந்த தொழில் - வாழ்க்கை நிலைக்குத் தள்ளப்படுகிறோம். எப்போதும் நெருக்கடியில் அல்லது கடைசியில் கை கொடுப்பது அது ஒன்றுதான். நெருக்கடி காலத்தில் கூட்டுறவுக் கடைகளில் போய் நிற்பதைப்போல.

ஆனால், ஒன்று பலரையும் தங்களுடைய வேர்களை நோக்கியும் கிராமங்களை நோக்கியும் செல்ல வைத்துள்ளது. வாழ்க்கையைக் கூடத்தான். உங்களைப்போலவே எனக்கு தாயாரின் வழியான நிலம் இப்போதுதான் கிடைத்திருக்கிறது. சாதி விலக்குத் திருமணத்தினால் தொடர்புகள், உறவுகள் எல்லாம் விலகிய நிலையில் அதை இதுவரையில் பெற முடியவில்லை. இப்போது வேறு வழியில்லாமல் சட்டத்தின்படி எனக்குரிய பங்கு வந்து சேர்ந்திருக்கிறது. சட்டமும் ஒரு வகையில் நமக்கு உதவுகிறது. நீதி வழங்குகிறது எனும் போது ஆச்சரியம் வருகிறது.

அந்த நிலத்தில் என்ன செய்யலாம் என்று குழப்பம். எந்தப் பயிரிடலுக்கும் இப்போதுள்ள விவசாய முறைகளைக் கொஞ்சமாவது கற்றுக் கொள்ள வேண்டும். நீங்கள் சொல்வதைப்போல நாம் அறிந்த, பழகிய விவசாயம் இன்றில்லை. இடையில் நாம் விவசாயத்தைக் கை விட்டதைப்போல அதுவும் நம்மை விட்டு வேறு எங்கோ, எப்படியோ ஆகி விட்டது.

கொரோனா நாள்களில் நானும் இங்கே பயிரிடல்களை உற்சாகமாகச் செய்தேன். ஆனால், பங்கசு, வைரஸ் தொற்றுகளால் அத்தனை செடிகளும் நாசமாகி விட்டன. தொடக்கத்தில் செழித்து மதாளித்து நம் உழைப்புக்கு மதிப்பைத் தருவதைப்போல இருந்தது. நமக்கொரு எதிர்காலம் உண்டு என நம்பிக்கையளித்தது. ஆனால், பூக்கும் பருவத்தில் மெல்ல மெல்ல செடிகளில் வாட்டம் ஏற்பட்டு, கத்தரி, பூசணி, வெண்டி, மிளகாய் எல்லாமே நாசமாகி விட்டன. வெண்டி மட்டும் ஒரு முறை காய்த்தது. பூசணியில் ஒரேயொரு காய் மட்டுமே எடுத்தோம்.

இப்பொழுது சோளம் போட்டேன். அதுவும் பெரிய அளவுக்கு நல்ல மாதிரி வந்திருக்கிறது என்றில்லை. ஏதோ செய்ய வேணும் என்பதற்காகச் செய்ய வேண்டியுள்ளது. ஆனால், சில விவசாயிகள் வெற்றிகரமாக அறுவடைகளைச் செய்கிறார்கள். அவர்கள் இரசாயன மருந்தையும் உரத்தையும் கூடுதலாகப் பயன்படுத்துகிறார்கள். அதனால் தோட்டம் செழிப்பாக இருக்கிறது. இது நமக்குப் பொருந்தாது. அதுமட்டுமல்ல,. அது கூடாது என்று புத்தி வற்புறுத்திக் கொண்டேயிருக்கிறது. அவர்களுக்கும் இது கட்டுப்படியாகுமோ தெரியவில்லை. மருந்துக்கும் உரத்துக்கும் செலவழித்துக் கொண்டு எப்படி லாபத்தைப் பெற முடியும்? இதனால் அந்த நிலத்தில் எந்த மாதிரியான பயிரிடலைச் செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

விவசாயத்தை ஏன் பலரும் விரும்பாதிருக்கிறார்கள் என்பது இப்போதுதான் புரிகிறது. விவசாயம் சார்ந்த திணைக்களங்களும் அதிகாரிகளும் இருக்கிறார்கள்தான். ஆனால், அவர்களாலும் வெற்றிகரமாக விவசாயத்தை மாற்றியமைக்க முடியவில்லை. இவ்வளவுக்கும் மனிதர்களுக்கான உணவுக்கு விவசாயம் ஒன்றுதான் வழி. ஏன் விலங்குகளுடைய உணவுக்கும் கூடத்தான்.

எங்கள் ஊரும் ஏறக்குறைய உங்கள் பக்கம் போலத்தான். ஆனால். மலைகளில்லை. தென்னை நன்றாக வரும். தென்னைகளிலும் ஒரு வகையான வைரஸ் தொற்றுண்டு. காய்களை அது சிறுக்க வைக்கிறது. அடுத்தது மரமுந்திரி. அதற்கும் பேர் போனது எங்கள் ஊர். கொய்யா, முருங்கை போன்றவையும் நன்றாக வரும். சிலர் முருங்கைத் தோப்புகளை வைத்திருக்கிறார்கள், பத்துப் பன்னிரண்டு ஏக்கர்களில் என்று. இப்பொழுது அது ஒன்றுதான் உடனடி வருமானத்துக்குச் சாத்தியமானது. ஆனால், அதற்கும் விமானப் போக்குவரத்து சீராக நடக்க வேண்டும். இந்த முருங்கைகள் பெருமளவுக்கும் இலைக்காகவே பயிரிப்படுபவை. இலை ஏற்றுமதி இல்லை என்றால் அதுவும் நட்டமே.

முருங்கைச் செய்கையில் ஈடுபடவும் ஒரு விருப்பம் உண்டு. அடுத்த சித்திரை மாதத்தில் கிணற்றை அமைத்துக் கொண்டு எதையும் தொடங்கலாம் என்றிருக்கிறேன்.

இப்போது நமக்கு பொருத்தமான உதவக்கூடிய விவசாயத்துறையினரின் ஆலோசனைகளும் உதவிகளும் தேவை. அதைக் கண்டு பிடியுங்கள். இங்கே அப்படியான இருவர் அண்மையில் எனக்கு அறிமுகமாகியிருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனைப்படி மண்ணின் இயல்பு, சூழல், சந்தைவாய்ப்பு போன்றவற்றுக்கு ஏற்ற பயிரிடல்களைச் செய்யலாம் என்பதுதான் இறுதித் தீர்மானம்.

உங்கள் பூர்வீக வீட்டைத் திருத்துவது மகிழ்ச்சியான சேதி. அது பல நினைவிழைகளோடு பின்னப்பட்ட ஒன்றல்லவா? இங்கே நாங்கள் இருந்த வீடு, வளவு எல்லாமே காடாகி விட்டன. 35 ஆண்டுகள் அந்தப்பகுதியில் மக்களே இல்லை என்றால் எப்படியிருக்கும்? அதனால் இப்பொழுது காடழிக்கும் வேலையில் உள்ளேன். உங்கள் வீட்டுக்கு ஒருநாள் வருவோம். காலம் வழி திறந்தால் எங்களிடத்துக்கு நீங்கள் வரவேணும். நீங்கள் ஆரம்பிக்கவுள்ள தென்னை ,மா ,கொய்யா பயிர்ச் செய்கை நல்ல ஐடியாதான். உண்டாக்கி விட்டால் பிறகு கவனிப்பது மட்டுமே வேலை. நல்லமுறையில் கவனித்துக் கொண்டால் போதும். நிரந்தர வருவாய் கிடைக்கும். வயதாகும் காலத்தில் இந்த மாதிரியான தொடர் வருமானத்துக்குரிய பயிரிடல்தான் பொருத்தமானது. எல்லாமே ஒரு நம்பிக்கைதான். அதை விட நமக்கு வேறு என்னதான் வழி?

நட்புடன்,
நான்.



# தாயோடு சேயையும் விழுங்கிய கிணறு!

பா.குமுதன்



> அவளது 15 வயது மகளும், 8 வயது மகளும் தனித்து விடப்பட்டனர். தந்தை இருந்தாலும், அந்தப் பிள்ளைகளுக்கு தாய் இருந்து கவனிப்பது போல வருமா? தாய்ப்பாசமும், அரவணைப்பும் இல்லாத அந்தப் பிஞ்சுகளின் எதிர்காலம் என்ன?



லலிதா



28.12.2020

இரவு 1 மணி.

மழைபெய்து ஓய்ந்திருந்தது. நன்கு உறங்கிக் கொண்டிருந்த சிறுமிக்கு திடீரென முழிப்பு வந்தது. 15 வயதிருக்கும். பெயர் திசாளினி.

“வள்...வள்..வள்”

மீண்டும் உறங்க நினைத்த திசாளினியின் கவனத்தைக் கலைக்கிறது அவர்கள் வீட்டு நாய்.

எழுந்து பார்க்கின்றாள். படுக்கைவிரிப்புக்கள் அப்படியே இருக்க, தன்னுடன் கூடவே உறங்கிக்கொண்டிருந்த அம்மாவையும், தங்கையையும் காணவில்லை. நாய் மீண்டும் குரைத்தது.. மனதில் அச்சம் குடிகொள்கின்றது.

“ அம்மா ..” என அழைக்கிறாள் பதில் கிடைக்கவில்லை. படுக்கையில் இருந்து எழுந்து தேடிப் பார்த்தாள் .எங்கும் காணவில்லை. அச்சம் அதிகரித்தது.கும்மிருட்டு ஒருபுறம் நாயின் குரைப்பு மறுபுறம். அருகில் உள்ள அப்பம்மாவின் வீட்டுக்கு பயத்தோடு ஓடிப்போனாள்.

“அப்பம்மா..அப்பம்மா.. ”

அவள் குரல் கேட்டு தூக்கக் கலக்கத்தோடு வந்த அப்பம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

வழமைக்கு மாறாக அந்தநேரத்தில் பேர்த்தி வந்திருப்பது அவருக்கு அச்சஉணர்வை ஏற்படுத்தியிருந்தது. “என்ன பிள்ளை நடந்திச்சு? இந்த நேரத்தில வந்திருக்கிறாய்? “

“அம்மாவையும் தங்கச்சியையும் காணேல்ல” என்று படபடப்புடன் திசாளினி சொன்னாள்.

“ இந்தநேரத்தில இதுகள் எங்கபோனதுகள்..”என்று புறுபுறுத்துக்கொண்டு திசாளினியின் வீட்டுக்கு சென்றார் அப்பம்மா.

“லலிதா...லலிதா” என்று அந்த இரவின் அமைதியைக் குலைக்கும் பலத்த குரலில் அப்பம்மா பல முறை அழைத்தும் எந்தப் பதிலும் இல்லை.

வீடுமுழுவதும் தேடுகின்றார். இருவரையும் எங்கும் காணவில்லை. திடீர் என்று ஒரு நம்பிக்கை. வீட்டின் படலை திறக்கப்பட்டிருந்தது.

“ஒருவேளை ,குழந்தைப்பிள்ளைக்கு வருத்தம் கிருத்தமோ?.. பக்கத்துல யாருட்டயும் காட்டக் கொண்டு போனாளோ?” என்று சந்தேகமடைந்த அவர் தொலைபேசியை எடுத்து வழமையாக லலிதா( திசாளியின் தாய்) சென்றுவரும் வீட்டுக்கு அழைப்பை எடுக்கிறார்.

நள்ளிரவுநேரம் என்பதால் அழைப்புக்கு பதில் இல்லை.நேரமோ1.30 மணியை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அப்பம்மாவுக்கு என்னசெய்வது என்று புரியவில்லை.நித்திரையில் இருந்த தனது கணவனையும்,லலிதாவின் 8 வயதான மகனையும் எழுப்புகின்றார்.

“இஞ்சாருங்கோ லலிதாவையும்,றிதுவையும்( லலிதாவின் கடைசிப்பிள்ளை) காணேல்ல. நான் இங்கால போய் ஒருக்காப் பாத்துப் போட்டுவாறன். திசா.. நீ தாத்தாவோட நில்லு”

என்று கூறிவிட்டு பேரனை அழைத்துக்கொண்டு அயல்வீட்டாரை எழுப்பி, “ லலிதாவும் பிள்ளையும் வந்தவையோ? ரெண்டு பேரையும் கன நேரமா வீட்டில காணேல்ல. எல்லாஇடமும்தேடிப் பாத்திட்டம்” என்று தகவலைச் சொன்னார்.அவர்களும் அதிர்ச்சியடைந்த நிலையில் லலிதாவின் வீடு நோக்கி ஓடிச் சென்றார்கள். ஊர் முழுதும் தகவல் காட்டுத்தீயாகப் பரவுகின்றது. அனைவரும் ஒன்றுகூடித்தேடத் தொடங்கினர்.

### காட்டிக்கொடுத்த கால் அடையாளம்

லலிதாவுக்குப் பூர்வீகம் முல்லைத்தீவு, ஒதியமலை. போர்க்காலத்தில் அவளுக்கும் ரமேஸுக்கும் அவசர அவசரமாக பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்துவைக்கப்பட்டது. ரமேஸ் லலிதாவை விடவும் 6 வயது இளையவர். திருமணம் முடித்த பின்னர் ரமேஸின் ஊரான வவுனியா, பறண்நட்டகல்லில் தனது மூன்று பிள்ளைகளுடனும் வசித்துவந்தார் லலிதா. ஒரு காணியில் இரண்டு வீடுகளில் ஒன்றில் லலிதாவின் குடும்பமும், மற்றைய வீட்டில் அவளது கணவனின் பெற்றோரும் வசிக்கின்றனர். லலிதாவின் வீடு கிராமத்தின் கடைக்கோடியில், வயல்வெளிகளை அண்டியதாக இருந்தது. அநேகமாக மாலை 6 மணிக்குப் பின்னர் அந்த வீதியால் பொதுமக்கள் பய ணிப்பது குறைவு.

லலிதாவின் வீடு அமைந்துள்ள வீதியில் வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் யாரோ பயணித்த மைக்கான காற்தடஅடையாளம் ஒன்று,லலிதாவைத் தேடிக்கொண்டிருந்தவர்களின் கண்களில் தென்பட்டது. சந்தேகம் மேலும் வலுக்கின்றது. ‘ஒருவேளை அது லலிதாவின் காலடித் தடமாக இருக்குமோ?’. ‘ மழை பெய்ஞ்சு ஓய்ஞ்சிருந்ததால, அந்தக் காலடித்தடத்தைப் பார்க்ககூடியதாய் இருந்திச்சு. அந்தப் பக்கமா சனங்கள் எல்லாம் போய்த் தேடினம்.

அப்பதான் அந்தப்பக்கமா ஒரு தூர்ந்து போன வயல் கிணறு தெரிஞ்சுது. மழைகாலமெண்டுறதால அந்தக் கிணறு முழுசா நிறைஞ்சு கிடந்துது.அந்தக்கிணத்துக்கு பக்கத்தில இருந்த வேலியில துவாய் ஒண்டு தொங்கிக் கொண்டிருந்திச்சு,பக்கத்தில குடையும் இருந்திச்சு.அது லலிதாவின்ர தான் என்று உறுதியாகிச்சு. அந்த இடம் முழுக்கத் தேடினம் கூப்பிட்டும் பாத்தம். ஒரு அசமாத்தமும் இல்லை. அதுக்குப்பிறகுதான் ஓமந்தைப் பொலிசுக்கு தகவலைச்சொன்னம்” என்கிறார் லலிதாவைத் தேடிய கிராமவாசிகளில் ஒருவர்.

### இறைக்கப்பட்ட கிணற்று நீர்

விடிகாலை 5.30 மணி.அப்போதும் கிராமமக்கள் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை.ஓமந்தைப் பொலிஸாரும் வந்துவிட்டனர்.கிணற்றுப்பகுதியில் துவாயும்,குடையும் அவதானிக்கபட்டதால் அனைவரது கவனமும் கிணற்றை மையப்படுத்தியே இருந்தது. கிராமமக்களின் உதவியுடன் கிணற்றுநீரை இறைப்பதற்கான ஆயத்தங்களைப் பொலிஸார் மேற்கொள்ளத் தொடங்கினர்.

தூர்ந்துபோயிருந்த கிணறு என்பதால் அதன் ஆழம் 10 அடிக்கு குறைவாகவே இருந்தது. எனினும் மழையால் நிலமட்டத்தை மேவியபடி நீர் நிறைந்திருந்தது. மழையுடனான காலநிலை,மற்றும் வயல்

(மறுபக்கம் பார்க்க)



சடலங்கள் மீட்கப்பட்ட கிணறு

பகுதியில் கிணறு அமைந்திருந்ததால் நீர் ஊற்று அதிகமாகவே இருக்கும். எனவே அந்தக் கிணற்றுநீரை இறைப்பதென்பது அவ்வளவு இலகுவான காரியமில்லை . எனினும் அந்த முயற்றிக்கு செயல்வடிவம் கொடுத்தனர். நான்கு நீர்ப்பம்பிகள் பொருத்தப்பட்டு கிணற்றுநீர் இறைக்கபட்டது. காலை 5.30மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இறைப்புப்பணி 10 மணிவரை நீடித்தது. நீர் மட்டம்குறையக் குறைய மக்களின் மனங்களில் அச்சமும் கவலையும் பெரிதாகிக் கொண்டிருந்தன.

காலை 10.30 மணியாகியது. கிணற்றின் நீர்மட்டம் பாதியாக குறைந்திருந்தபோது, கிணற்றுக்குள் இறங்கித்தேடுதல் நடத்தத் தீர்மானித்து, கிராம இளைஞர்களும்,பொலிஸாரும் அந்த பணியில் இறங்கினர்.சற்றுநேரத்தில்.....

கடவுளே!! இது என்ன சோதனை.

குழந்தையை அரவணைத்தபடி நீருக்குள் மூழ்கியிருந்த லலிதாவின் சடலம் தென்பட்டது.

அவளைத்தூக்கியபோது மூன்றே வயதான குழந்தை தாயின் பற்றுதலில் இருந்து விலகி நீருக்குள் சென்றதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். சடலங்களைப் பார்வையிட்ட நீதவான் அவற்றை உடற்கூற்று ஆய்வுக்குட்படுத்துமாறு பொலிஸாருக்குப் பணித்திருந்தார். சடலங்கள்மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டன.

### இரவு அம்மாதான் சமைச்சவா

"அண்டைக்குப் பின்னேரம் அம்மாவும் நானும் தங்கச்சியும் தான் வீட்டில இருந்தனாங்கள். அம்மா எங்களுக்கு ரொட்டியும் கிழங்குக்கறியும் சமைச்சுத் தந்தவா.அதைச் சாப்பிட்டுப்போட்டு இரவு 7 மணிக்கே படுத்திட்டம்.வழமையாவே ஒண்டாத்தான் படுப்பம்.அண்டைக்கு தம்பி அப்பம்மா வீட்ட போட்டான்.அப்ப நாங்க மூண்டு பேரும் தான் வீட்டில.எங்கட நாய் குரைக்கிற சத்தம் கேட்டுத்தான் எழும்பிப் பாத்தன். லைற்எல்லாம் போட்டிருந்திச்சு.. அம்மாவையும் தங்கச்சியையும் காணேல்ல "என்று லலிதாவின் மூத்தமகளான திசாளினி தாயோடு இருந்த கடைசி நிமிடங்களை நினைவு கூர்கிறார்.

### ஒருநாளும் போனதில்லை

"அண்டைக்கு காலமை வீட்டிலதான் நிண்டனான். நான் எல்லா வேலைக்கும் போவன். சிலநேரம் தங்கி நிண்டும் வேலைகள் செய்யவேண்டிவரும். அண்டைக்கு வயல் வேலைக்கு போட்டன். இரவும் தங்கி நிண்டு வேலை செய்ததால வீட்டில நிக்கேலை. எனக்கும் அவாக்கும் எந்தப் பிரச்சினையும் இருக்கேல்ல. ,அவா கொஞ்சம் யோசிச்சுக் கொண்டிருப்பா. கலியாணம் செஞ்சு 15 வருசமாப் போச்சு. ஒரு நாள் எண்டாலும் கோபிச்சுக்கொண்டு போனதில்ல. இப்பிடிநடக்கும் எண்டு நான் எதிர்பார்க்கேல்ல. சிலநேரம் அண்டைக்கு வீட்டில நான் நிண்டிருந்தாலும் அவாவைத் தடுத்திருக்க முடியுமோ தெரியேல்லை" என்று புலம்புகிறார் லலிதாவின் கணவரான ரமேஸ்.

ஏராளமானோர் கிணற்றடியில் குழுமியிருந்தனர். அப்போது

"எல்லாத்துக்கும் நீங்கள்தான் காரணம்" என்று கூறி, லலிதா வீட்டார், ரமேஸூடனும், அவரது பெற்றோருடனும் முரண்பட்டிருந்தனர்.இருந்தபோதும் சுற்றிநின்றவர்கள் பிரச்சினை பெரிதாகாமல் பார்த்துக் கொண்டனர்.

"அவங்களை கிணத்துக்கு வெளிய எடுக்கும் வரைக்கும் அவளின்ர புருசனோ மாமியாரோ அவடத்துக்கு வரேல்ல.அழுது புலம்பவும் இல்லை. வெளிய எடுத்த பிறகு வேடிக்கை பாக்க வந்தவை மாதிரி ஓடிவந்திச்சினம். ஆத்திரம் வந்திச்சு. அதாலதான் அவையள அடிக்கப் போனன்" என்கிறார் லலிதாவின் சகோதரர் நவசீலன்.

### அவளுக்கு ஒரே கரைச்சல்

" எங்களுக்கு 11 சகோதரங்கள். லலிதா ஏழாவது. இருந்திருந்திட்டு ஒருக்கா அம்மாவோட போன் எடுத்துக் கதைப்பா. இப்ப கூட ரெண்டு நாளைக்கு முதல் எடுத்து கதைச்சிருந்தா. தனக்கு வருத்தமா இருக்கு, மருந்து எடுக்கவேணும் எண்டு சொன்னவா.அக்கா மட்டும் தான் அவாவோட அடிக்கடி கதைப்பா.

நாங்கள் பெரிசா கொண்டாடுறதில்ல. நாங்கள் அங்க போறது லலிதாவின் மாமிக்கு (அப்பம்மா) அவ்வளவாப் பிடிக்காது.அவளைப் பேசிக் கொண்டிருப்பினம். அதால நாங்கள் போகாமலே விட்டிட்டம்.அவளின்ர மாமியும் மாமாவும் ஒரே கரைச்சல் குடுக்கிறதா அறிஞ்சிருக்கிறம்.இப்ப இப்பிடி நடந்து போட்டுது.கட்டின புதுசில ரெண்டு வருசம் எங்களோடதான் ரெண்டுபேரும் இருந்தவை.நல்லாத்தான் வாழ்ந்தவை.பிறகுதான் வவுனியாவுக்கு போனவை.நாங்கள் குடுக்க வேண்டியதெல்லாம் குடுத்துத்தான் இந்தக் கலியாணத்தை செய்து வைச்சம். இப்பிடி முடிவெடுக்க என்ன நடந்தது எண்டு உறுதியாச் சொல்லமுடியேல்ல" என்று கவலையோடு சொல்கிறார் லலிதாவின் சகோதரனான நவசீலன் .



சம்பவ இடத்தில் மீட்கப்பட்ட துவாய் மற்றும் குடை

### சந்தேகம் 1

லலிதாவின் வீட்டின் முற்றத்திலேயே பெரிய தோட்டக்கிணறு ஒன்று அமைந்துள்ளது.அதில் குதிக்காமல், எதற்காக மழை பெய்யும் போது குடையோடு குழந்தையையும் சுமந்து சென்று தூரத்தில் உள்ள தோட்டக் கிணற்றில் குதிக்க வேண்டும்? சாவதென்று முடிவெடுத்தவள் அந்தச் சமயத்திலும் குடை பிடித்துத்தான் கிணற்றில் குதிக்கப் போவாளா? வீட்டில் முரண்பாடு என்றால், எதற்காக தன்னோடு 3 வயதேயான பெண் குழந்தையையும் சேர்த்தபடி கிணற்றில் குதிக்க வேண்டும்?

### சந்தேகம் -2

லலிதாவின் படுக்கையில் இருந்து கடிதம் ஒன்று பொலிஸாரால் முதலில் மீட்கபட்டி ருந்தது. எனினும் பிறிதொரு கடிதமும் லலிதாவால் எழுதப்பட்டுள்ளதாகவும் அது பின்னரே கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவளது மாமியார் தெரிவிக்கின்றார். அந்த கடிதத்தை வீட்டுக்கு செல்பவர்களிடம் காட்டுகின்றார்.அதில் லலிதாவின் மாமியார்,கணவர் ஆகியோரைப் பற்றி நல்லவிதமாக எழுதப்பட்டுள்ளது. எனினும் அந்தக் கடிதம் பொலிஸாரிடம் வழங்கப்படவில்லை. அந்தக் கடிதம் எப்படி பொலிஸாரின் சோதனையில் சிக்காமல் போனது? சரி, பின்னர்தான் அந்தக் கடிதம் கிடைத்திருந்தா லும் ஏன் அதனைப் பொலிஸிடம் ஒப்படைக்கவில்லை?

### சந்தேகம் -3

கிணற்றுக்குள் இருந்து சடலங்கள் மீட்கப்பட்டபோது தாயைப் பற்றியபடி குழந்தையின் சடலமும் இருந்துள்ளது.லலிதாவின் சடலம் மீட்கபட்டபோது அவளது கைகள் பிள்ளையை இறுக்க அணைத்தபடியே இருந்தன. எனினும் பிள்ளையின் சடலம் நழுகி நீருக்குள் சென்றதாக அதனை மீட்டவர்கள் தெரிவித்தனர். அப்படியானால் தற்கொலைசெய்த லலிதா நீருக்குள் மூச்சு அடங்கும் போதுகூட எதேச்சையாகவேனும் கைகளை ஏன் அசைக்கவில்லை?

### நரம்பில்லா நாக்கு

"நாங்கள் லலிதாவுக்கு கொடுமை செய்தது எண்டு சொல்லுகினம் . கலியாணம் கட்டி 15 வருசமாகுது. கொடுமை செய்திருந்தம் எண்டால் அவள் எப்பிடி இவ்வளவுகாலம் இங்க இருந்தவள்? பிள்ளை வேற வளர்ந்திட்டு. அதுட்ட கேட்டுப் பாருங்கோ, நாங்கள் கொடுமை செய்த இல்லையோ எண்டு.எலும்பில்லாத நாக்காலை என்னத்தையும் சொல்லட்டும்" என்கிறார் லலிதாவின் மாமியாரரான (அப்பம்மா) சாந்தா.

### என்ன கதி?

கணநேர தவறான முடிவால் லலிதா தன் உயிரையும், குழந்தையின் உயிரையும் மாய்த்து விட்டாள். ஆனால் இப்போது அவளது 15 வயது மகளும், 8 வயது மகளும் தனித்து விடப்பட்டனர். தந்தை இருந்தாலும், அந்தப் பிள்ளைகளுக்கு தாய் இருந்து கவனிப்பது போல வருமா? தாய்ப்பாசமும், அரவணைப்பும் இல்லாத அந்தப் பிஞ்சுகளின் எதிர்காலம் என்ன? உயிர் மாய்க்க நினைப்போர், தங்களை நம்பியிருப்போரைக் கொஞ்சமேனும் சிந்தியுங்கள், சாவதற்கு வரும் துணிவில் சிறுதுளி துணிவிருந்தாலே போதும், எதையும் தாங்கி வாழ்ந்து விடலாம்.

## மீட்கப்பட்ட கடிதம்

லலிதா காணாமல் போனநிலையில் அவள் எழுதியதாகத் தெரிவிக்கப்படும் கடிதம் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தது. லலிதாவின் படுக்கையின் கீழே அந்தக் கடிதம் வைக்கப்பட்டிருந்தது. "கிராமத்தில் அமைந்துள்ள சுய உதவிக்குழுவில் சிறு தொகைபணம் உள்ளது. அந்த பணத்தைப் பெற்று வாழ்ந்துகொள்ளுங்கள் .நான் போகிறேன் என்ற சாரப்பட அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது.

அது அம்மாவின் எழுத்துதான் என்று அடித்துச் சொல்கிறார் மகள் திசாளினி.

அத்துடன் லலிதாவுக்குச் சொந்தமான நகைகளும் பத்திரப்படுத்தி படுக்கைக்கு அருகில் வைக்கபட்டிருந்தன. லலிதா அண்மைக்காலமாக மன உளைச்சலில் இருந்துள்ளார் என்பதை ஊர்மக்களும் ஒத்துக்கொள்கின்ற னர்.

"அவள் லேசில ஒண்டையும் யாரிடமும் சொல்லமாட்டாள். தனக்குள்ளேயே வச்சிருப்பாள் என்கின்றனர் ஊரவர்கள்.

லலிதாவின் வீட்டாருக்கும், ரமேஸ் வீட்டாருக்கும் இடையே சுமுகமான உறவுநிலை இருக்கவில்லை. இதனை சடலம் மீட்டபோது கூட ,ஊரவர்கள் கண்முன்னே கண்டனர். சடலம் கண்டுபிடிக்கப்பட்டு அதை மீட்க முயற்சிகள் நடந்தபோது,

## தொடரும் விசாரணை

சம்பவங்களை ஆராய்ந்த ஓமந்தைப் பொலிஸார் வழக்குப்பதிவுசெய்து விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

"குறித்த மரணங்கள் கொலையா? தற்கொலையா? என்பதனை உறுதியாகக் கூறமுடியாது.சந்தேகப்படும் படியான விடயங்கள் எவையும் இதுவரை தென்படவில்லை.அது தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. மீட்கப்பட்ட தடயப்பொருட்கள் மற்றும் கடிதத்தினை நீதிமன்றில் ஒப்படைத்துள்ளோம்.சடலங்கள் உடற்கூற்றுப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனது.இரசாயனபகுப்பாய்வுக்காக மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.அதன் அறிக்கைள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றோம்" என ஓமந்தை பொலிஸ்நிலையத்தின் உபபொலிஸ்பரிசோதகர் சுகந் தெரிவித்தார்.





# 18 யாழ்ப்பாணப் பதிப்புத்துறை 1990 - 1995

## அறிவுக் களஞ்சியம் -?

○ தில்லைநாதன் கோபிநாத்




அக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடையினால் ஏற்பட்ட கடதாசித் தட்டுப்பாடு அறிவுக்களஞ்சியத்தின் இரண்டாவது இதழிலேயே தாக்கத்தினை ஏற்படுத்தியது. முதல் இதழ் வெளியாகி நான்கே நாள்களில் பிரதிகள் அனைத்தும் விற்பனையாகி முடிந்ததால் இரண்டாவது இதழை அதிக எண்ணிக்கையில் அச்சிடத் தீர்மானித்தனர். அதற்குப் போதிய காகிதம் கிடைக்காத தால் அப்பியாசக் கொப்பிகளை வாங்கித் தாள்களைப் பிரித்து இரண்டாவது இதழை அச்சிட்டனர். அட்டைகள் மணிலாத் தாளில் அச்சிடப்பட்டன. அறிவுக்களஞ்சியத்துக்கு மாணவரிடையே கிடைத்த பெரு வரவேற்பு மாணவருக்கான வேறு நூல்களையும் வெளியிட வரதரைத் தூண்டியது. அவ்வகையில் 1993இல் கதை மலர் எனும் தொடர் வெளியீட்டினை வரதர் தொடங்கினார். இளம் சிறுவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பது ஒரு தேசியக் கடமை எனக் கருதுவதாகக் குறிப்பிட்டு இந்த நூல் வரிசையை வரதர் ஆரம்பித்தார்.

பதினைந்து வயதுக்குட்பட்ட சிறார்களுக்கான கதை எனக் குறிப்பிடப்பட்டுவெளியான இந்த நூல் வரிசையின் முதலாவது நூலாக அநு. வை. நாகராஜனின் 'அவன் பெரியவன்' வெளியானது. மூத்த எழுத்தாளர் சம்பந்தன் 'இராமன் கதை' எனும் தலைப்பில் இராமாயணத்தினைச் சுருக்கி எழுதினார். அரியாலையைச் சேர்ந்த எழுத்தாளர் சிவதாசன் 'வேப்பமரத்தடிப் பேய்' எனும் கதையினை எழுதினார். இவை தவிர ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு சொக்கனால் மொழிபெயர்க்கப்பட்ட 'போக்கிரி முயலாரின் சாகசங்கள்' என்ற நூலும் சீனத்துக் கதையின் மொழிபெயர்ப்பான 'சுதந்திரமாய்ப் பாடுவேன்' என்ற நூலும் வெளியாகின. இந்த நூல்களும் மாணவரிடையே நல்ல வரவேற்பைப் பெற்றன. 1994இல் புதினம் என்ற மாதமிருமுறை பல்சுவை இதழும் வரதரால் தொடங்கப்பட்டது.

மாணவருக்கான வரதர் வெளியீடுகள் பரவலான வரவேற்பைப் பெற்றபோதும் அறிஞர்களிடமிருந்து குறிப்பிடத்தக்க எதிர்க்குரல்களும் எழுந்தன. அவற்றில் முக்கியமானது "அறிவுக்களஞ்சியம் ?" என்ற தலைப்பில் அ. சி. உதயகுமார் வெளியிட்ட நூல் ஆகும். 40 பக்கங்கள் கொண்ட இரண்டாவது அறிவுக்களஞ்சியம் இதழின் உள்ளடக்கத்தை விமர்சித்து 98 பக்கங்களில் அந்த நூல் வெளியானது. தகவற் பிழைகள், விபரங்கள் முழுமையாக வழங்கப்படாமை, உச்சரிப்புப் பிழைகள், சில துறைகளை உள்ளடக்காமை போன்ற பல விடயங்களை உதயகுமார் தனது நூலில் முன்வைத்திருந்தார். இந்நூல் பரவலான கவனத்தைப் பெற்றுப் பலராலும் உரையாடப்பட்டது.

1992-1995 காலப்பகுதியில் இடையே ஓரிரு மாதங்கள் விடுபட்டது தவிர தொடர்ச்சியாக வெளியான அறிவுக்களஞ்சியத்தின் 34ஆவது இதழ் 1995 ஒக்ரோபரில் வெளியானது. இந்த இதழ் கடதாசித் தட்டுப்பாடு காரணமாக சிறிய அளவில் அச்சிடப்பட்டதுடன், விலையும் 10 ரூபாவிலிருந்து 15 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருந்தது. 35ஆவது இதழின் அச்சுவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது வலிகாமத்திலிருந்து மக்கள் இடம்பெயர வேண்டி ஏற்பட்டதால் அந்த இதழ் வெளியாகவில்லை.

வரதர் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிய பின்னர் 1998 யூலையில் மீண்டும் அறிவுக்களஞ்சியத்தைத் தொடங்கினார். மீண்டும் அரச கட்டுப்பாட்டுக்கு வந்திருந்த யாழ்ப்பாணத்துக்கு வெளியிலிருந்து நூல்கள், சஞ்சிகைகள் மட்டுமின்றித் திரைப்படங்கள், தொலைக்காட்சி போன்றனவும் கிடைத்திருந்த நிலையில் பழைய ஆதரவு அறிவுக்களஞ்சியத்துக்குக் கிடைக்கவில்லை. அவ்வகையில் 1998இல் மேலும் மூன்று இதழ்கள் வெளியாகிய நிலை யில் அறிவுக்களஞ்சியத்தின் பயணம் நிறைவ டைந்தது. 1990களின் ஆரம்பத்தில் அறிவுக்களஞ்சியத்தின் வருகையும் அது மாணவர் மத்தியில் பெற்ற பெரு வரவேற்பும் அத்தகைய பொது அறிவுச் சஞ்சிகைகள் பல அடுத்தடுத்து உருவாகக் காரணமாக அமைந்தன. நங்கூரம், மாற்றம், வானோசை, சிட்டு, நெம்பு, அறிவாயுதம் எனப் பல இதழ்கள் இவ்வாறு தொடங்கப்பட்டுப் பாடசாலைகள் ஊடாக விநியோகிக்கப்பட்டன. அவை தொடர்பில் அடுத்த வாரம் பார்க்கலாம்.

# ஒரு மேயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)




**ராஜாவும் அவரே, மந்திரியும் அவரே!**

கட்சித் தலைமையகத்தில் மேயர் பதவி தொடர்பான விடயம் பற்றி கணனியில் தட்டச்சு செய்யும்போது வெளியில் வந்து "ஆனோல்ட்தான் மேயர்" என்று ஊடகங்களுக்கு தன்னிச்சையாக அறிவித்தார் சுமந்திரன். இது தொடர்பாக தமிழரசின் தலைவரும், செயலரும் "இவ்வாறாக இன்னும் முடிவெடுக்கப்படவில்லை" என மறுத்தனர். இதைச் சுட்டிக்காட்டிய ஊடகவியலாளர்களுக்கு "அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். ஆனால் ஆனோல்ட்தான் மேயர்" என மீண்டும் உறுதிப்படுத்தினார் சுமந்திரன்.

அன்று அவருக்கு கட்சித் தலைமையோ, செயற்குழுவோ, வேட்பாளர் தெரிவுக் குழுவோ ஒரு பொருட்டல்ல . அன்று ஒரு ஆளுமையுள்ள தலைவராக எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்யத் தவறி விட்டார் மாவை. சுமந்திரன் என்ற காட்டாற்று வெள்ளத்தில் நீச்சலடிக்கத் தெரியாத அப்பாவியாகவே அப்போது அவர் இருந்தார். யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக விளங்கிய மோகனதாசும் வேட்பாளராக இருக்கிறாரே என்று சுமந்திரனின் முகத்துக்கு நேரே சுட்டிக்காட்டவும் துணியவில்லை மாவை.

**அன்று உறவு ; இன்று பகை**

இன்று ஆனோல்ட்டுக்கும் சுமந்திரனுக்கும் பகை. ஆகையால் ஏனையோரைப்போல சிறிலின் பெயரை முன்மொழிந்தார் சுமந்திரன். தேர்தல் முடிந்தபின்னர் யாரிடமேனும் ஆங்கிலம் கற்றுத் தேறிவிட்டார் சிறில் என சுமந்திரன் கருதுகிறாரோ? அன்றும் சிறிலை மேயர் பதவிக்கான வேட்பாளர் ஆக்கினால் ஆதரவு தருவதாக ஏனைய கட்சிகள் குறிப்பிட்டன. அதனைப் பொருட்படுத்தாத சுமந்திரன் ஆனோல்டை மேயராக்கி அழகு பார்த்தார். இன்று தான் ஒரு சுத்தமான சூசைப்பிள்ளை போல சிறிலை மேயராக்கும் முயற்சியை மாவை முன்னெடுக்கவில்லை என்றும் சபையின் ஆட் சியை இழந்தமைக்கு மாவையே பொறுப்பு எனவும் நாடகமாடுகிறார்.

**ஏட்டிக்கு போட்டி**

ஒரு துணைவேந்தரை அரசியல் அரங்கிலிருந்து அகற்றியதற்கு தானே பொறுப்பு என ஒப்புக்கொள்ளும் தைரியம் இருந்தால் இவர் மாவையின் தவறை சுட்டிக் காட்டுவதை ஏற்கலாம்.

போதாததற்கு மாவையும் போட்டி நடனம் ஆடுகிறார். சிறிலின் பெயரை எந்த உறுப்பினருமே முன்மொழியவில்லை என்று சின்னப்பிள்ளைத்தனமாகக் கூறுகிறார். தனியே கூட்டமைப்பு உறுப்பினர்கள் மட்டும் வாக்களித்தால் போதும் என்றா அவர் கருதுகிறார். சில நாள்களுக்கு முன்னர் தான் ஈ.பி.டி.பி, முன்னணி போன்ற கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படும் என்றார். சிறிலை மேயராக்குங்கள் என்று ஈ.பி .டி. பி யும் ஆனோல்ட்டைத் தவிர வேறு யாரையாவது வேட்பாளராக்கினால் ஆதரவளிப்போம் என முன்னணியும் சுட்டிக்காட்டியபோதும் ஏன் இப்படி சொதப்பினார் மாவை?

ஒரே ஒரு காரணந்தான். சிறில் புலிகளுக்கு ஆதரவானவர். தன்னைப் போன்றவர் அல்லர் என்பதை உணந்திருக்கிறார் மாவை.

கருணா பல களங்களைக் கண்டவர்தான்.படை நடத்தியவர்தான் . ஆனால் வரலாறு எல்லாவற்றையும் தலை கீழாக மாற்றிவிட்டது. அதேபோல மாவைக்கும் தமிழ்த் தேசியத்துக்காக சிறை சென்ற வரலாறு முதற் கொண்டுள்ளது. உணர்வாளர்களான பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் போன்றோரை ஒதுக்கியதால் இன்று " ஜால்ராக்கள்" மட்டுமே எஞ்சியுள்ளன.

தலைமைத்துவ ஆளுமைக் குறைபாடு, சுமந்திரன் போன்றோர் கொடுக்கும் குடைச்சல் , தனது பதவியை யாரும் பறித்துவிடுவார்களோ என்ற பயம் போன்றவை மாவையையும் தவறிழைக்க வைத்தன.

தந்தை செல்வாவுடன் பழகியவரும் அகிம்சைப் போராட்ட காலத்தின் பின் ஆயுதப்போராளியாகி முள்ளிவாய்க்கால்வரை பயணித்தவருமான ஒருவரை சம்பந்தன் வரவழைத்து உரையாடினார். இந்த விடயத்தை அறிந்ததும் மிக முக்கிய புள்ளிகள் மூவர் கலந்துரையாடினர். புலிகளோடு பேசுவது சரி: ஆனால் இவர் போன்றவர்கள் அரசியலுக்குள் வராமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டும் என முடிவெடுத்தனர்.

**மாவையைச் சந்திக்காத பிரபாகரன்**

இலட்சியவாதிகளின் உறவே நீடிக்கும். அவர்கள் தான் இன்னொருவருக்காக உயிரையும் கொடுக்கத் தயராக இருப்பார்கள். சுய நலக் கூட்டுகள் அவ்வாறில்லை. கூட இருப்பவர்களுக்கே குழிபறிக்கத் தயாராக இருப்பார்கள். தேசியப் பட்டியல் விவகாரம் இதனை உறுதிப்படுத்துகிறது .

மேயர் விடயத்திலேயே மாவை, புலிகளைச் சகிக்காதவர் என்றால் வேறு முக்கிய பதவிகளில் யாரையாவது ஏற்பாரா ?

பிரபாகரன் தான் இவரை நன்கு கணிப்பிட்டவர்.தமிழகத்தில் பிரபாகரன் உண்ணாவிரதம் இருந்தபோது அவரைப்பார்க்க மாவை சென்றார்.எனினும் அதற்கு அனுமதி கிடைக்கவில்லை. இது வேடிக்கை பார்க்கும் விடயமல்ல என மாவைக்கு உணர்த்தப்பட்டது. அவர் திரும்பி வரும்போது சந்தித்த போராளியைத் தான் இப்போது அரசியலுக்குள் அண்டவிடக் கூடாதவராக மாவை நோக்குகிறார்.

கொஞ்சம் கொஞ்சமாக கட்சியின் கட்டுப்பாடு மாவையே விட்டுச் செல்கிறது. ஆனால் சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழும் நிலைதான்.

**முரண்நகை**

தமிழரசுக் கட்சி உருவானது மலையகத்தமிழரை நாடற்றவர்களாக்கும் சட்டம் உருவானபோது அதற்கு எதிர்ப் பை வெளிப்படுத்தவே. ஆனால் மலையகத்தமிழரை இழிசொற்களால் வசைபாடும் ஒருவரும் கட்சித் தலைமையில் கண்வைத்திருக்கிறார்.இதற்கு சுமந்தி ரனும் ஆதரவு .

மொத்தத்தில் தமிழரசுக் கட்சியை அழிக்க வெளியிலிருந்து யாரும் வரத்தேவையில்லை. உள்ளிருப்போரே போதும்.

# ஆர்யா:



## பேரைக் கேட்டாலே சும்மா அதிருதில்லே...!

○ மயூ

21 வயதென்றதும் நமக்கெல்லாம் என்ன நினைவில் வரும். ஒரு சாவியின் வடிவில் ஐசிங் போடப்பட்ட கேக்கை வெட்டும் இளசுகளின் "கீ போர்த் டே" தான் இங்கே 21 வயதின் அடையாளம். ஆனால் அதே 21 வயதான கேரளாவைச் சேர்ந்த ஆர்யா உலகளவில் "ரெண்டிங்" ஆகியிருக்கின்றார். அப்ப்டி என்ன செய்து விட்டார் ஆர்யா என்றுதானே கேட்கிறீர்கள்?. இந்தியாவில் மிகச் சிறிய வயதில் மேயராக தெரிவாகியிருக்கின்றார்.

ஆர்யா கேரளா திருவனந்தபுரத்தில் உள்ள "ஒல் சைன்ட்ஸ்" கல்லூரியில் இளங்கலை கணிதவியலில் இரண்டாம் ஆண்டு கற்றுக் கொண்டிருக்கின்றார். அப்படியே கேரளாவின் தலைநகர் திருவனந்தர புரத்தின் மேயராகவும் தெரிவாகியிருக்கின்றார் என்பது ஆச்சரியம்தானே?

அங்கு ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி அவரை மேயராக்கியிருக்கின்றது. ஆர்யாகூட அதை முதலில் நம்பவில்லைத்தான். ஆனாலும் மிக இளம்வயதில் மேயராகி புதிய வரலாறு ஒன்றை உருவாக்கியிருக்கின்றார் ஆர்யா.

"நண்பர்கள் முதலில் இதைச் சொன்னபோது நான் நம்பவில்லை. ஏதோ "பிராங்க்" (வேடிக்கைக்காக) செய்கிறார்கள் என்று நினைத்தேன். ஆனால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டபோது எனக்கு ஆனந்த அதிர்ச்சியாக இருந்தது" என்கிறார் ஆர்யா.

ஓகோ, அப்படியானால் ஆர்யாவின் குடும்பம் பெரிய அரசியல் செல்வாக்குள்ள குடும்பம் போல இருக்கிறதே என்று நீங்கள் யோசிப்பது தெரிகிறது. ஆனால் ஆர்யாவின் குடும்பம் சராசரியான நடுத்தரக் குடும்பம். அவரது அப்பா ராஜேந்திரன் மின்னிணைப்பாளராக இருக்கின்றார். தாய் ஸ்ரீலதா காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகின்றார். ஆர்யாவின் மூத்த சகோதரர் மேற்கு ஆசிய நாடு ஒன்றில் வேலை செய்கின்றார். இவ்வாறிருக்க எவ்வாறு ஆர்யாவால் சாதிக்க முடிந்தது?. இந்தப் பெருமைக்குப் பின்னால் ஆர்யாவின் கடினமான உழைப்பும், நேர்மையும், உண்மையும் இருக்கின்றது என்பதே உண்மை. "நான் இளம் வயதிலேயே அரசியலுக்குள் நுழைந்து விட்டேன். கட்சியால் எந்த வேலைகள் கொடுக்கப்பட்டாலும் அதை முழு மனதுடனும், விருப்பத்துடனும் செய்வேன்" என்று கூறுகின்றார் ஆர்யா.



ஆர்யா தனது 6 வயதில் அரசியலுக்குள் நுழைந்துவிட்டார். புருவத்தை உயர்த்தாதீர்கள்... கட்சியின் குழந்தைகளுக்கான பாலசங்கம் என்ற அமைப்பில் 6 வயதில் இணைந்த ஆர்யா, அதன் பின்னர் படிப்படியாக அந்த அமைப்பின் பல பதவிகளைத் தன்வசமாக்கினார். அவை அவருடைய விடாமுயற்சிக்கும் உழைப்புக்கும் கிடைத்த பலன்களே. அந்த அமைப்பின் மாநிலத் தலைவராகவும், கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் பிரிவான இந்திய மாணவர் கூட்டமைப்பின் அலுவலகப் பொறுப்பாளராகவும் இருக்கின்றார்.

இந்தியாவில் வயது குறைந்த மேயரான பெருமை அலகபாத்தைச் சேர்ந்த அபிலாஷ் குப்தா நந்தியிடம் தான் இதுவரை இருந்தது.

அவருக்கு 23 வயதான போது நகரின் மேயர் பதவி அவருக்கு வாய்த்தது. அந்தப் பெருமையைத் தட்டிப் பறித்து, வரலாற்றை மாற்றி எழுதியிருக்கின்றார் ஆர்யா.

கேரளாவில் அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி பெரும்பாலான தொகுதிகளில் வென்றது. திருவனந்தபுரமும் கம்யூனிஸ்ட் கட்சி வசமானது.

ஆனால் மேயராகத் தெரிவாவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட, அரசியலில் பழம்தின்று கொட்டை போட்டவர்கள் எல்லாம் இந்தத் தேர்தலில் மண் கவ்வ, முடவன்முகல் தொகுதியில் போட்டியிட்டிருந்த ஆர்யா அமோக வெற்றி பெற்றிருந்தார்.

தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய ஜனநாயக முன்னணி வேட்பாளர் ஸ்ரீகலாவை 2 ஆயிரத்து 872 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்திருக்கிறார் ஆர்யா. இளையோருக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கியிருந்த நிலையில், கம்யூனிஸ்ட் கட்சி அதிரடியான, அலாதியான முடிவொன்றை எடுத்து ஆர்யாவை மேயராக அறிவித்திருக்கின்றது. அதற்காக கட்சியையும் பாராட்டலாம்.

"எனது தொகுதியில் உள்ளவர்கள் எனக்கு மிகப் பெரிய அங்கீகாரத்தைக் கொடுத்துள்ளனர். மக்கள் சேவையுடன் எனது படிப்பையும் தொடர்வேன்" என்று நெகிழ்ச்சியுடன் கூறுகின்றார் ஆர்யா. வயதில் குறைந்த பெண்கள் அரசியலில் சாதிக்க முடியாது என்ற எண்ணத்தை உடைத்திருக்கின்றார் ஆர்யா.

எந்தத் துறையானாலும் ஈடுபாட்டுடன் செயற்பட்டால் அதற்கான அங்கீகாரம் கிடைக்கும் என்பதற்கு ஆர்யா ஒரு எடுத்துக்காட்டு. பெண்களுக்கு ஒரு முன்னுதாரணமாகவும், உந்துசக்தியாகவும் ஆர்யா இனிவரும் காலத்தில் இருப்பார் என்று எதிர்பார்க்கலாம். இன்னும் அதிகமான பெண்கள் சாதனைகள் படைப்பார்கள் என்றும் நம்பலாம்.

தன்னலம் அற்ற மக்கள் சேவையே, வயதில் குறைந்த ஆர்யா மீது அந்தப் பகுதி மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்குக் காரணம். தன்னலமற்ற சேவையாளர்களை மக்கள் கைகளில் ஏந்திக் கொண்டாடுவார்கள். அதை இங்குள்ள அரசியல் வாதிகளும் மனத்தில் இருத்தலாமே? ■



# புதிர்மலை மர்மங்கள்

○ மாயன்

"தீபவர்மரே, இதோ இந்தக் குடுவையில் இருப்பது மந்திரத் தைலம். இதை உடலில் பூசிக் கொண்டால் எந்த நெருப்பும் எம்மை அணுகாது. ஆகவே இதனைப் பூசிக்கொண்டு அற்புதத் தீவிலே நாம் கால் வைக்கலாம்" எனத் தன் திட்டத்தை அவள் சொன்னாள். ஆனால் அந்தத் திட்டம் கரணம் தப்பினால் மரணம் என்பதை தீபவர்மன் உணர்ந்தான். ஏனெனில், அற்புதத் தீவில் எரிந்து கொண்டிருப்பது சாதாரண நெருப்பல்ல என்பதை அவன் மனம் நன்கே உணர்ந்திருந்தது. அந்த நெருப்பின் காரணியாக ஏதோ ஒரு அமானுஷ்ய சக்தி இருக்க வேண்டுமென அவன் ஊகித்திருந்தான். அப்படி இருக்கையில் இந்தத் தைலம் பயனற்றுப் போக அதிக சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறு நடந்துவிட்டால், பவளராணியும், தீபவர்மனும் அற்புதத் தீவில் காலடிவைத்த கையோடு கருக வேண்டியதுதான். ஆனால் அதைப் பவள ராணியிடம் சொல்லலாமா? வேண்டாமா? என அவன் மனதுக்குள் ஒரு போராட்டமே நடந்து

**புதிர் 25**



> தீபவர்மர்! அவ்வளவுதான் தொலைந்தோம் நாம்என அவள் உதடுகள் உச்சரிக்க முன்னரே அந்தச் சுழல் புஷ்பக விமானத்தை அப்படியே புரட்டிப் போட்டது.

கொண்டிருந்தது. ஏனெனில் அப்படிச் சொல்லப்போய், பவளராணியின் மாந்திரீகச் சக்தியில் தீபவர்மனுக்கு சந்தேகம் வந்துவிட்டதாக அவள்தவறாக எண்ணிவிடவும் கூடும். அதனால் வேறு வகையில் அந்தக் கேள்வியைக் கேட்டான் தீபவர்மன். "நாங்கள் கருகமாட்டோம் என்பது சரி. ஆனால் எம்மைச் சுமந்துவரும் இந்தப் புஷ்பக விமானமும், அன்னப்பட்சிகளும் எரிந்து விடுமே. அப்படி எரிந்தால் எப்படி அந்தத் தீவில் இருந்து மீள்வது?" என்றான் அவன். அவனது கேள்வி பவளராணிக்கும் சரியெனவே பட்டது. தாமிருவரும் உடல் கருகாமல் அற்புதத் தீவில் இறங்கும் வழியைக் கண்டுபிடித்தவளுக்கு, புஷ்பகவிமானத்தைப் பற்றிய எண்ணம் வராமலே போய்விட்டது. ஆனாலும் அவள் தன் முடிவில் தீர்க்கமாக இருந்தாள்.

" தீபவர்மரே, எது வந்தாலும் வரட்டும். என் முடிவில் மாற்றமில்லை. முதலில் அற்புதத் தீவில் தரையிறங்குவோம். அதன் பின்னர் மீண்டுவருவதற்கு வழி கண்டுபிடிப்போம்" அவள் குரலில் தென்பட்ட உறுதி மறுவார்த்தை பேசவிடாமல் தீபவர்மனைக் கட்டிப்போட்டது. ஆனால் அதெல்லாம் கொஞ்ச நேரம்தான். ஏனெனில் திடீரென வானில் ஒரு சுழல் தோன்றி இவர்களை நோக்கி வேகமாக வரத் தொடங்கியது. பவளராணியின் முகத்தில் கிலி பரவத் தொடங்கியது.

" தீபவர்மர்! அவ்வளவுதான் தொலைந்தோம் நாம்" என அவள் உதடுகள் உச்சரிக்க முன்னரே அந்தச் சுழல் புஷ்பக விமானத்தை அப்படியே புரட்டிப் போட்டது. பவளராணியும், தீபவர்மனும் வானிலிருந்து வேகமாக கிழே எரிந்து கொண்டிருந்த தீச்சுவாலைகளை நோக்கி விழுந்து கொண்டிருந்தார்கள்.

(புதிர்கள் தொடரும்)

# பாவம்(ம்)க் கோழிகள்




தொல்புரம்
க.சிதம்பரபாலினி

"எணேய். இஞ்ச ஒருக்கா வாணை" என் குரல் கேட்டதும் தான் தாமதம், பதறியபடி அம்மம்மா ஓடி வந்தார்.

"என்னடா.... என்ன நடந்தது?"

நான் எதுவும் பேசவில்லை. என் கண்கள் தோட்டப்பக்கமாக இருப்பதைக் கண்டு, அம்மம்மாவும் அந்தப் பக்கமாகத் திரும்பினார். பார்த்தவர் மீண்டும் பதறினார்.

"ஐயோ! இதென்ன கோலம்? என்ர பேரப்பிள்ளை கஷ்டப்பட்டுத்தானே எல்லாத்தையும் உண்டாக்கினவன்....." எனக் குழறினார். எனக்கோ ஏதோ எல்லாவற்றையும் இழந்த உணர்வு. நம்பிக்கை எனும் சுடர் பிரகாசிக்கத் தொடங்கிய போதே, பலத்த காற்று அதை அணைத்து விட்டது போல் இருந்தது. சுற்றும் முற்றும் பார்வையை ஓட விட்டேன். வேலிக்குள்ளும், பாத்திகளிலும் கோழி இறக்கைகளும் கால் தடங்களும் தெரிந்தன.

" உந்தக் கோழியள்தான் எங்கையோ இருந்து வந்து தோட்டத்தை இப்பிடி நாசமாக்கி இருக்குதுகள்"

என்று கோபத்தோடு சொன்னேன்.

கோபம் வராமல் இருக்குமா என்ன? அம்மாவும், அப்பாவும் இல்லையெண்ட பிறகு, எனக்கு எல்லாமே அம்மம்மாதான். நான் பெரிசாப் படிக்காட்டியும் கூலி வேலைக்கு போய் சீவியத்தைப் பார்க்கத் தெரியும். அது காணும் தானே மானத்தோட வாழ. ஆனால் எப்ப இந்தக் கொரோனா வந்திச்சோ அதோட, கூலி வேலை கிடைக்கிறதும் குதிரைக் கொம்பாப் போச்சு. அதாலதான் சும்மா இருக்காமல் முன்னுக்கு இருந்த காணித் துண்டைக் கொத்தி, சின்னதா ஒரு தோட்டம் போட்டன். அந்தக் காணியைக் கொத்திப் பண்படுத்துவதென்பது , அவ்வளவு சுலபமில்லை. ஒரு கொத்துக்கே மண்வெட்டி தெறிச்சுப் பறக்கும். அந்த அளவுக்கு மண் இறுக்கம். அதுவும் வெயிலுக்க சொட்டுத் தண்ணியுமில்லாமல் வரண்டு போய் இருக்கையில், அதைக் கொத்திப் பண்படுத்துவதற்கிடையில் உயிரே போய்விடும் போல இருக்கும்.

ஒருமாதிரி கொத்தி..
பண்படுத்தி...
விதை போட்டு...
தண்ணி விட்டு...
மருந்தடிச்சு..
உரம் போட்டு...

என் கைராசியோ என்னவோ தோட்டத்தில் பயிர்கள் துளிர்த்து சிலிர்க்கத் தொடங்கின. சரி, இனி தோட்டத் தோடையே சீவியத்தைப் பார்க்கலாம் என்றிருந்த கனவைத்தான் , இந்தக் கோழிகள் முளையிலேயே கிளறி நாசமாக்கி விட்டுப் போயிருந்தன.

**கோழிகளால் ஒரு தோட்டத்தை, இப்படிச் சிதைக்க முடியுமா? ஆனால் சிதைத்திருந்தன. நான் குழந்தைகளாக நினைத்த எல்லாப் பயிர்களினதும் தலைகள் கொய்யப்பட்டிருந்தன. இனி அவையெல்லாமே துளிர்விடச் சாத்தியமேயில்லை. நடந்ததை நினைத்து என்ன செய்வது? இனியாவது நடக்க வேண்டியதைப் பார்ப்போம் என நினைத்துக் கொண்டேன். ஆனாலும் கோழிகள் மீதான கோபம் இன்னும் ஆறவில்லை.**

**கோபத்தைக் குறைக்க, வேலிகளைச் சரிப்படுத்துவதில் மனதைத் திருப்ப முனைந்தேன்.**

**" போகட்டும் அப்பு ... கவலைப்படாதையடா. இந்த வேலிப் பொட்டை அடைச்சுவிடு. இனிக் கோழிகள் வராது" அம்மம்மாவும் எனக்கு ஆறுதல் சொல்லி, என் கவலையைக் குறைக்க முனைந்தார்.**

வேலிப்பொட்டை அடைத்தாயிற்று. 'ஒருக்கா ஜீ.எஸ் ஒப்பீஸில போய் கோழிப்பிரச்சினை சம்பந்தமா ஒரு கடிதமும் குடுத்தால் அவை இதுக்கு ஒரு முடிவு கட்டுவினம்'

என்று மனதுக்குள் குறித்து வைத்துக்கொண்டேன். இனிக் கோழிகள் வராது.

✦✦✦✦

பக்கத்து ஊரில் ஒரு தோட்ட வேலை. முடித்துவிட்டு, சம்பளக் காசோடு வீட்டுக்கு வர வாசலில் சோகத்தோடு அம்மம்மா.

" என்னணை, ஒரு மாதிரி இருக்கிறாய்?"

இப்போது அம்மம்மா தோட்டத்தைப் பார்த்தார். எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போல இருந்தது. திரும்பவும் கோழிகள் எப்படியோ அடைக்கப்பட்ட வேலிக்குள்ளால் ஊடுருவி, தோட்டத்தைப் பதம் பார்த்திருந்தன.

"இனியும் பொறுக்கேலாது. கோழி வளர்க்கிறதெண்டால் அடைச்சு வளர்க்க வேணும். இப்பிடி ஊர்மேய விடக்கூடாது. நான் பரமலிங்கத்தாரோட கதைச்சு ஒரு முடிவு கட்டுறன்"

கொஞ்சம் உரத்தே சொல்லிக் கொண்டேன். பரமலிங்கம் ஊரிலேயே செல்வாக்கான, எல்லோருக்கும் அள்ளிக் கொடுக்கும் ஒருவர். இப்போது கூட வெள்ளம் வந்ததால் கஷ்டப்பட்ட பல குடும்பங்களுக்கு அவர் நிவாரணப் பொருள்களை கொடுக்கும் படங்கள் பேப்பர்களிலும், பேஸ்புக்கிலும் நிறைய வந்திருந்தன. அப்படிப்பட்டவரின் முகத்துக்காகத்தான் இத்தனை நாளும் இந்தக் கோழிகளின் அட்டூழியத்தைப் பொறுத்துக் கொண்டேன். இனியும் அது முடியாது. கால்கள் பரமலிங்கத்தார் வீடு நோக்கி தம்பாட்டில் நடக்கத் தொடங்கின.

"நில்லப்பு, கொஞ்ச நாள் பொறு . வேற ஏதும் வழியைத் தேடுவம் அவை கொஞ்சம் பெரிய ஆக்கள். நாங்கள் இதைச் சொல்லப் போனால் தேவையில்லாத சிக்கல்தான் வரும்"

அம்மம்மாவின் குரல் தேய்ந்து மறைந்து கொண்டிருக்க, என் காதுகள் அவற்றை உள்வாங்க மறுத்தன.

✦✦✦✦

"வீட்டுக்காரர்..வீட்டுக்காரர்"

என் குரல் கேட்ட கொஞ்ச நேரத்திலேயே, பரமலிங்கத்தார் உள்ளிருந்து வெளியே வந்தார்.

நெற்றியில் விபூதிக்குறியோடு சிவப்பழமாக மாறியிருந்தவர், என்னைக் கண்டதும் நெற்றியைச் சுருக்கினார்.

"நீ.....?"

அவருக்கு என்னைத் தெரியவில்லை.

" நான் ஐயா, உங்கட வீட்டுக்குப் பின் பக்கக் காணியிலதான் இருக்கிறனான். விடியவே வேலைக்கு போகிடுவன். அதால கண்டிருக்க மாட்டியள்."

" ஓ... அந்த அக்சிடெண்டில செத்த நடேசன்ர மகனோ? சரி சரி. இப்ப விளங்குது. ஏதும் நிவாரணம் வேணுமோ?"

அவர் கேட்டது நம்பிக்கைதர விடயத்தை சொன்னேன்.

" ஐயா, உங்கட வீட்டுக் கோழியள் ஒவ்வொருநாளும் வந்து என்ர தோட்டத்தை சீரழிக்குதுகள். ஒருக்கா அதுகளை அடைச்சு வளர்த்தா நல்லது ஐயா"

நான் பவ்வியமாகத்தான் சொன்னேன். ஆனால் அவர் முகம் சட்டென மாறியது.

" எளிய நாயே, என்ன துணிவு உனக்கு? என்ர வீட்ட வந்து எனக்கே அட்வைஸ் பண்றீரோ? துலைச்சுப் போடுவன் துலைச்சு"

" இல்லை ஐயா..அட்வைஸ் எல்லாம் இல்லை.." நான் சொல்லி முடிப்பதற்குள் வெடித்துத் தள்ளினார்.

" நீர்தானே பெரிய இவர் மாதிரி விதானையிட்ட கோழி வருகுதெண்டு கடிதமெல்லாம் எழுதிக் குடுத்த ஆள். அதுக்கே உன்னை உண்டு இல்லையெண்டு பண்ணியிருக்க வேணும். விட்டதாலதான் இப்பிடி வீட்டுக்கு வந்து சண்டித்தனம் காட்டுறாய் என்ன" அவர் பொரிந்து தள்ளிக் கொண்டே போனார். என்ன செய்வதென்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

" கோழியைத்தானே விடாதையுங்கோ எண்டன். சண்டித்தனம் செய்யேலையே"

" எதிர்த்தோ கதைக்கிறாய் . உங்களை எல்லாம் வைக்க வேண்டிய இடத்தில வைக்க வேணும். சரி, இனி உம்மட தோட்டம் எப்பிடி இருக்கெண்டு பாப்பம். ஒரு புல்லுக்கூட இனிமேல் அங்க முளைக்காமல் செய்வன். வேணுமெண்டா இருந்து பார். இனி கோழி மட்டுமில்ல, ஆடு, மாடு எல்லாம் அதுக்கை தான் அவிட்டு விடப்போறன். என்ன செய்வாயெண்டு பாப்பம்"

அவர் நிறுத்துவதாகத் தோன்றவில்லை. விடுவிடென திரும்பி நடக்கத் தொடங்கினேன். மனம் முழுக்க வெறுமையும், கோபமும்.

✦✦✦

'என்ன நினைச்சுக் கொண்டார் என்னை? புல்லுக்கூட என்ர தோட்டத்தில முளைக்க விடமாட்டாராமோ? ஆளுக்கு ஒரு பாடம் படிப்பிக்கிறன் இண்டைக்கு' கறுவிக் கொண்டே, தோட்டத்துக்கு அடிக்க வைத்திருந்த மருத்துப் போத்தலை எடுத்தேன்.


'இண்டைக்கு கோழியள் வரட்டும். சாப்பாட்டுக்கை மருந்து கலந்து போட்டு எல்லாத்தையும் முடிச்சு விடுறன்'

கோழிகளுக்காக காத்திருந்தேன். அம்மம்மா வெளியே எங்கோ போயிருந்தா. பின்னேரப் பொழுதில் கோழிகள் படையெடுக்கத் தொடங்கின. வேலியின் சின்னச் சின்ன இடைவெளிகள் ஊடாக அநாசாயமாக ஊடுருவி, தங்கள் வேட்டையை அவை ஆரம்பித்தன. 'இண்டைக்குத்தானே கடைசி. நல்லாய்ச் சாப்பிடுங்கோ' நான் சொல்வது கோழிகளுக்கு விளங்காது என்று தெரிந்தாலும் பலமாகவே சொல்லிக் கொண்டேன். சாப்பாட்டில் கலக்க மருந்துப் போத்தலை எடுத்தேன்.

'இதுகள் என்ன பாவம் செய்ததுகள்? சாப்பாட்டுகுத்தானே வருகுதுகள். அந்தாள் ஒழுங்கா சாப்பாடு போட்டு அடைச்சு வளர்த்தா கோழியள் ஏன் இஞ்ச வரப்போகுதுகள்? அந்தாள் செய்த வேலைக்கு ஏன் இதுகளைக் கொல்ல வேணும்? ஆனா இதுகளைக் கொல்லாட்டி என்ர தோட்டம் ....? கோழியளை அழிக்காட்டியும் இனி அந்த மனுசன் என்னை நிம்மதியா இருக்க விடாது......அவருக்கு தண்டனை குடுத்தே ஆக வேணும்'

பேப்பர் ஒன்றை எடுத்து எழுதத் தொடங்கினேன். " என் சாவுக்கு காரணம் பரமலிங்கம்...." மருந்துப் போத்தல் வெறுமையானது. **' அப்பு கதவைத் திறவடா, பூட்டிப் போட்டு என்ன செய்யிறாய்" வெளியே அம்மம்மா அலறுவதை முழுதாகக், கேட்க முடியாமல் கண்கள் இருளத் தொடங்கின.**





அனுப்புபவர் பெயர்:...............................................

முழுமையான தபால் விலாசம்: ...............................

...............................................................

கையொப்பம்:...............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

# சொற்சிலம்பம் போட்டி 28

## சொற்சிலம்பம் போட்டி 26 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. விகடகவி 4. தலை 6. மாரி 7. வரகு 8. அகந்தை 9. பாரம் 11. பணம் 12. மா 13. புல 14. டின் 15.அருகதை 17. தடியடி 18. பாவம் 19. பல்.

**மேலிருந்து கீழ்**

1. விமானி 2. சரி 3. கலகம் 4. தர 5. குலை 7. வதை 8. அரம் 9. பாணன் 10. பல 11. படிவம் 12. மாருதம் 13. புதையல் 16. கடி 19. படி

### இடமிருந்து வலம்

1. ஆபத்தை அடையாளப்படுத்தும் நிறம் 2. பாக்கு காய்க்கும் மரம் 7. ஒன்றுடன் ஒன்றைச் சேர் 8. தொன்மை வாய்ந்த இனத்தவன் 10. அழகுத் தன்மை 12. சூட்டில் காயச் செய் 13. தடுத்து வைப்பு 14. மமதைக்கு இந்த எண்ணமே காரணம் 15. மங்கலமான 16. நீட்டலளவையின் ஒரு அலகு. 18. இறைவன் 19. பாம்பு எனப் பொருள்படும் சொல். கடைசி எழுத்தை இழந்து நிற்கிறது. 20. நீர்நிலைகளின் ஒரு கூறு. 21. பிரிபடத்தக்க உறுப்பு 23. வலி எனப் பொருள்படும். 24. தமிழ்நாட்டில் ஒரு இனத்தவருக்கான சிறப்புப் பெயர்.

### மேலிருந்து கீழ்

1. மலைமுகடு 2. இடதுபுறத்துக்கு எதிர்புறம் 3. ஒரு முறையேனும் பயன்படுத்தப்படாதது. 4. பாடல்கள் யாப்பவனைச் சுட்டுவது 5. காலிழந்தவன் 6. சிறிய மலை. 9. உயிரிழக்கும் தறுவாயில் மகாத்மா காந்தி உதிர்த்த வார்த்தை 11. அளவுக்கு அதிகமாதல் 14. இதன் துடிப்பு அடங்கினால் மரணம் உறுதி 15. அவித்த கடலைக்கு இப்படிப் பெயர் 16. அன்பு செலுத்துபவரை இப்படி குறிப்பிடுவர் 17. கடற்றொழில் செய்வோரைச் சுட்டுவது. 18. சமய முறைப்படியான 19. அடைக்கலம் கோருதல் கடைசி எழுத்தை இழந்து நிற்கிறது. 22. முற்புறம் உடலை வளை.

**சொற்சிலம்பம் போட்டி இல.28**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**09.01.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 26இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**சு.விவேகானந்தன்**
தெய்யா கலட்டி வீதி,
தும்பளை மேற்கு, பருத்தித்துறை

**2 ஆம் பரிசு**
**ராணி அரசரத்தினம்**
இல.27, கன்னியர்மட வீதி,
பெற்றா, மன்னார்.

**3 ஆம் பரிசு**
**நாகராசா பூபாலசிங்கம்,**
பொன்னாலை வீதி,
கட்டுடை, மானிப்பாய்.

**4 ஆம் பரிசு**
**மு.குலசிங்கம்,**
இல.69, ஆனந்த நகர், கிளிநொச்சி.

**5 ஆம் பரிசு**
**ஜெயஸ்ரீ நவரெட்ணராஜா,**
இல.2, 4ம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

# மாணவர் கழகம்



**பெயர்:** கணேஸ்வரன் திவ்யாசாகர்,
**முகவரி:** 55/49, கல்லூரி ஒழுங்கை நீராவியடி, யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 13.05.2006
**பாடசாலை:** யாழ். இந்துக் கல்லூரி.
173



174
**பெயர்:** மயூரநாதன் தேனுகா,
**முகவரி:** வேலணை கிழக்கு, வேலணை.
**பி. திகதி:** 2005.06.29
**பாடசாலை:** வேலணை மத்திய கல்லூரி.



175
**பெயர்:** கம்சனா லோகநாதன்,
**முகவரி:** 12/2 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 11.08.2003
**பாடசாலை:** யாழ். இந்து மகளிர் கல்லூரி.



176
**பெயர்:** வி.வாகனா,
**முகவரி:** 62, சைவப் பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு.
**பி. திகதி:** 2008.08.21
**பாடசாலை:** உடுவில் மகளிர் கல்லூரி.



**பெயர்:** நேசரூபன் நேருஜன்,
**முகவரி:** நுணாவில் மத்தி, சாவகச்சேரி.
**பி. திகதி:** 2010.08.19
**பாடசாலை:** சாவ.இந்து ஆரம்பப் பாடசாலை.
177



**பெயர்:** ஜெயராசா மகேசன்,
**முகவரி:** வல்லை வீதி, தொட்டிலடி, சங்கானை.
**பி. திகதி:** 2010.11.28
**பாடசாலை:** யா/ சண்டிலிப்பாய் மத்திய கல்லூரி.
178



179
**பெயர்:** சுதாகரன் பாவினியன்,
**முகவரி:** வாகையடி மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
**பி. திகதி:** 2008.02.23
**பாடசாலை:** யா/ கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை.



1. சஞ்சீவியில் பிரசுரமாகும் படைப்புகளில், மாணவர் கழகத்தில் அங்கத்துவம் வகிக்கும் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. மாணவர்கள் தனது படைப்புக்களை அனுப்பும்போது தமது அங்கத்துவ இலக்கத்தை தவறாது குறிப்பிட்டு அனுப்பவும்.

சஞ்சீவி மாணவர் கழக அங்கத்தவர்களாக இணைய உங்கள் புகைப்படத்துடன் மாணவர் கழக விண்ணப்பத்தை கீழ்காணும் முகவரிக்கோ அல்லது வட்ஸ்அப், வைபர் எண்ணுக்கோ அனுப்பி அங்கத்தவர்களாக இணையுங்கள்.

சஞ்சீவி

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ...............................................
2. முகவரி: ...............................................
...............................................
3. பிறந்த திகதி: ...............................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ...............................
5. கற்கும் தரம்: ...............................................
6. தொலைபேசி இலக்கம்: ....................................

...................... ......................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

0773165555

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
sanjeevi@uthayan.com



# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## பொய் சொன்னாலும்...

யாழ்.மாநகரசபை கூட்டமைப்பின் கையை விட்டு, மணிவண்ணன் தரப்பிடம் போகுமென்று தேர்தல் காலத்தின்போதே கதையடிபட்டது. இரகசியமாக சில பேச்சுகள் நடைபெற்றதாகவும் அப்போதே சொல்லப்பட்டது. மணி முன்னணியில் இருந்து தூக்கியெறியப்பட்ட பின்னர் இந்தக் கதை பலமாக அடிபடத் தொடங்கியது. அதை உண்மையென உணர்த்துவது போல மணிவண்ணன் மீது போடப்பட்ட வழக்கு வாபஸ் வாங்கப்பட்டு, அவர் மாநகரசபை உறுப்பினராக முடிந்தது. இப்போதோ அவர் முதலில் வந்த கிசுகிசுக்களை உண்மையாக்குவது போல முதல்வராகி விட்டார்.

அவர் முதல்வராவதற்கு கட்சி முடிவை மீறி, முதுகில் குத்திய ஒரு உறுப்பினரும் முக்கிய காரணம். அந்த உறுப்பினர் எஜமான எம்.பி ஒருவரின் சொல் பேச்சுக் கேட்கும் கிளிப்பிள்ளை. அதனையே மாநகர மேயர் தேர்வின் போதும், இம்மி பிசகாமல் செய்துவிட்டு, ஜனநாயகத்தை காக்கவே அப்படிச் செய்தேன் என்று சோற்றுக்குள் முழுப் பூசணிக்காயை மறைக்க முனைந்தார்.

ஆனால் அன்றிரவே சோற்றுக்குள் இருந்த பூசணிக்காய் வெளியே வந்துவிட்டது. தமது சொற்படி கேட்டு, ஆனோல்டைத் தோற்கடித்து மணிவண்ணனை மேயராக்கும் வகையில் நடந்து கொண்ட தன் கிளிப்பிள்ளையைப் பார்க்க எஜமான எம்.பி ஊர் உறங்கிய பொழுதில் அதிரடிப்படைப் பாதுகாப்போடு வந்து நன்றி சொன்னார். தங்கள் சதி வென்ற மகிழ்வில் அவர்கள் அக்கம் பக்கம் கவனிக்கத் தவறிவிட்டன. இருவரும் கூடிக் குலவியதை ஊடகக் கண்கள் பதிவாக்கி , இரவோடு இரவாக பறைசாற்றி விட்டன. இதனால் அடுத்தநாள் கட்சிக் கூட்டத்துக்கு போன கிளிப்பிள்ளைக்கு, மற்ற உறுப்பினர்கள் செம டோஸ்.

அப்போதும்,' நான் ஜனநாயகப்படிதான் நடந்தேன்' என்றிருக்கிறார். அதற்கு 'அப்படியானால் எதற்கு அந்த எம்.பி நள்ளிரவில் வந்தார்? நன்றி சொல்லத்தானே?" என உறுப்பினர்கள் பிடித்துக் கொண்டார்கள். கிளிப்பிள்ளையால் பதில் சொல்ல முடியவில்லை,

"அது வந்து...கட்சிக்கு எதிராக நடந்ததால் எனக்கு தலையிடியைக் கொண்டு வந்துவிட்டாயே என்று ஏசத்தான் வந்தார்' என்றிருக்கிறார்.

"பொய் சொல்வது என்றாலும் அதில் ஒரு நியாயம் இருக்க வேண்டாமா?' என சக உறுப்பினர்கள் ஆளையாள் பார்த்துச் சிரித்துக் கொண்டார்களாம்.




## ஆயிரத்துக்கு அடிக்கப்பட்ட விபூதி

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் எனக் கூறப்பட்டாலும் அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

2014 ஆம் ஆண்டிலிருந்து இந்த உறுதிமொழி வழங்கப்பட்டு வந்தாலும் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு தொழிலாளர்களின் சந்தா பணத்தில் பிழைப்பு நடத்தும் தொழிற்சங்கங்களால் இன்னும் முடியாதுள்ளமை வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகும். ஆயிரம் ரூபா சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களின் போது இரு பிரதான கட்சிகளாலும் உறுதியளிக்கப்பட்டிருந்தது. தேர்தல் வெற்றியின் பின்னர் மார்ச் (2020 மார்ச் 01) முதல் ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என்ற உத்தரவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பிறப்பித்தார். ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை.

பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு அழுத்தம் பிரயோகிக்கமுடியாத வகையிலேயே ஜனாதிபதிக்கான நிறைவேற்று அதிகாரமும் இதுவிடயத்தில் இருக்கின்றது. இந்நிலையில் அடுத்தாண்டுக்கான பட்ஜெட்டிலும் ஆயிரம் ரூபா முன்மொழிவு உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கவில்லை. மாறாக கம்பனிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கம்பனிகளோ , அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு தயாராக இல்லை. இதனை வெளிப்படையாகவே அறிவித்துவிட்டன. இதனால் எல்லாக் கொடுப்பனவையும் சேர்த்து ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்கும் சூழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. அதாவது சில தொழில் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அக்கொடுப்பனவு வழங்கப்படலாம். நிபந்தனைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் சம்பள உயர்வு கிடையாது. இதன்மூலம் அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைக்க வேண்டும் என்ற தொழிலாளர்களின் எதிர்ப்பார்ப்பு குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது.


## சம்பிக்க - 43

ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கும் முடிவை எடுத்துள்ள சம்பிக்க ரணவக்க, 43 ஆம் படையணி எனும் பெயரில் புதியதொரு அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பும் பணியில் இறங்கியுள்ளார். இது சஜித் அணியினரை கிலிகொள்ள வைத்துள்ளது என கொழும்பு அரசியல் களத்தில் கதை அடிபடுகின்றது.

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்தே சம்பிக்க ரணவக்க, மேற்படி அரசியல் வியூகத்தை வகுத்துள்ளார் எனவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமையை பெறுவதற்குத் தயாரான சம்பிக்க ரணவக்க எதற்கு இவ்வாறானதொரு முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்ற வினாவுக்கு சஜித் அணியினரிடமும் தெளிவான பதில் இல்லை. அரசாங்கத்துக்குஎதிராக பல அணிகள் செயற்படுவது சிறப்பு என சஜித் அணியினர் கூறினாலும், அவர்கள் மத்தியில் ஒரு குழப்பநிலை இருப்பதை ஊகிக்கமுடிகின்றது. இதன்காரணமாகவே 2024 இல் நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தலின்போது தமது அணி வேட்பாளர் யார் என்பதனை தற்போதே வெளிப்படையாக அறிவிக்க ஆரம்பித்துள்ளனர். அதுமட்டுமல்ல தமது கட்சி உறுப்பினர் அல்லாதவர்களுக்கு பொதுவேட்பாளராக களமிறங்கும் வாய்ப்பு வழங்கப்படாது என்ற உத்தரவாதமும் வழங்கப்பட்டுள்ளது. சஜித்தின் பெயரை இவ்வாறு முன்னிலைப்படுத்தினால், சம்பிக்க ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கமாட்டார் என்ற தகவலை சமூகமயப்படுத்துவதே மேற்படி அறிவிப்புகளின் கருப்பொருளாகும்.

எனினும், அரசியல் களத்தில் இறுதிநொடியில்கூட மாற்றங்கள் நிகழக்கூடும். இதன்காரணமாகவே சம்பிக்கவின் புதிய இயக்கம் மீது சஜித் அணி கண் வைத்துள்ளது. '43 ஆம் பிரிவு' எனும் அரசியல் இயக்கமானது, இது இலக்கமல்ல தலைமுறை என்ற மகுடத்தின் கீழ் அரசியல் பயணத்தை முன்னெடுக்கவுள்ளது. கடந்த பொதுத்தேர்தலின் பிறகு செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த அரசியல்வாதிகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளை இந்த இயக்கத்தில் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 1943 ஆம் ஆண்டில்தான் இலங்கையில் இலவசக்கல்விக்கான சட்டமூலம் இயற்றப்பட்டது. தரம் ஒன்று முதல் பல்கலைக்கழக கல்வி வரை இலவசக்கல்வி வழங்கப்பட்டது. இதுவே இலங்கையில் சமூக வளர்ச்சிக்கு வித்திட்டது. இதனாலேயே '43' என்ற பெயராம்.






## தலை போகுமா?

2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 5 ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெறவுள்ளது. சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றியே சபை அமர்வு முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக நாடாளுமன்ற வளாகத்தில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 225 எம்.பிக்களை கொண்ட நாடாளுமன்றத்தில் கடந்த வருடம் 223 பேரே செயற்பட்டனர். ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் எமது மக்கள் சக்தி ஆகியவை தமது கட்சி தேசியப் பட்டியல் எம்.பிக்களை பெயரிடவில்லை. எனினும், எமது மக்கள் சக்தியின் சார்பில் அத்துரலிய ரத்தன தேரர் சபைக்கு வரவுள்ளார். ஐ.தே.க. சார்பில் யார் வருவார் என்பது பற்றி இன்னும் எதுவும் அறிவிக்கப்படவில்லை. அதேவேளை, சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாரானது. அதற்காக கையெழுத்துகள்கூட திரட்டப்பட்டன. எனினும், அந்தப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

புத்தாண்டிலாவது குறித்த பிரேரணை முன்வைக்கப்படுமா அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறை வேற்றிக்கொள்வதற்கான பெரும்பான்மை பலம் இல்லாததால் சஜித் அணி பின்வாங்குமா என்பது ஜனவரி 5 ஆம் திகதி தெரியவரும்.


# குற்றங்களுக்கு பின்னால்...!

உதயன் – சஞ்சீவியில் வாசகர்களின் அமோக வரவேற்பைப் பெற்ற, 'தடயத்தை தேடி' பகுதியில், இதுவரை வெளிவந்த குற்றங்கள் அல்லது துயர் நிகழ்வுகளின் தற்போதைய நிலை என்ன என்று அறிய ஒரு உந்தல் இருக்கும். அதனால் அவை பற்றிய ஒரு மீள்புலனாய்வை மேற்கொண்டு, அவற்றைச் சுருக்கமாக வாசகர்களுக்குத் தருகின்றோம்.

○ உளவாளி

## 22.02.2020

## சின்னவனின் கனவுகளை காவு வாங்கிய மின்சாரம்



**முன்கதை**

நிசாந்தன் 17 வயதுச் சிறுவன். யாழ்.நகரில் உள்ள பிரபலமான குளிரகம் ஒன்றில் குடும்பக் கஷ்டம் காரணமாக அங்கேயே தங்கி நின்று வேலை செய்து வந்தான். 2020 பெப்ரவரி மாதம் குளிரகத்தில் மின்சாரத்தால் எதிர்பாராத விதமாகத் தாக்குண்டு பலியானான். சிறுவனான அவன் ஏன் வேலைக்குப் போனான்? அவனது குடும்பப் பின்னணி என்ன? இந்த உயிரிழப்புக்கு என்ன காரணம்? இப்படியான நிலைமைகளைத் தடுக்கும் வழிகள் யாவை? என்பவை விரிவாக ஆராயப்பட்டிருந்தன.

**இப்போது...!**

நிசாந்தன் பணி செய்யும்போது உயிரிழந்ததால், குறித்த நிறுவனம் இழப்பீடாக ஐந்து லட்சம் ரூபாவை அவனது குடும்பத்துக்கு வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதனடிப்படையில் அந்த நிறுவனத்தால் நிசாந்தனின் தாயாரின் பெயரில் ஒரு லட்சம் ரூபாவும், இரு சகோதரர்களுக்கும் தலா 2 லட்சம் ரூபா வீதமும் வங்கிக் கணக்கில் வைப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் இன்னும் பல நிறுவங்களில் சிறுவர் தொர்ழிலாளிகள் குடும்பக் கஷ்டம் காரணமாக பணி புரிந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

## 29.02.2020




**முன்கதை**

2020ம் ஆம் ஆண்டு பெப்ரவரி 6 ஆம் திகதி. மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வன்னிவிளாங்குளம், பாலைப்பாணி என்ற இடத்தில், முன்னாள் போராளியான பால்ராஜா ஜெகதீஸ்வரன் ( ஜெயாண்ணை அல்லது ரெஜி) என்பவர் கட்டுத்துவக்கால் சுடப்பட்டு உயிரிழந்தார். முன்பகை காரணமாகவே அவர்சுடப்பட்டிருந்தார்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டு, கொலைக்குப் பயன்படுத்திய கட்டுத்துவக்கும் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தது. இந்தக் கொலையின் பின்னணி பற்றியும், எவ்வாறு சந்தேகநபர்கள் சிக்கினார்கள் எனவும்,சந்தேக நபர்களைக் காட்டிக் கொடுத்த தடயங்கள் பற்றியும் சொல்லியிருந்தோம்.

**இப்போது...!**

பால்ராஜ் பாலைப்பாணி காட்டுப்பகுதியில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் உடனடியாகவே சந்தேகநபர்களாக இருவர் கைதுசெய்யப்பட்ட நிலையில் பின்னர் ஒருவர் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் பிரதான சந்தேகநபரின் மனைவியும் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப் பட்டுள்ளார்.

ஏற்கனவே கைதான பிரதான சந்தேக நபரின் மனைவிக்கும் இந்தக் கொலையில் தொடர்பிருப்பதற்கான சாத்தியங்களை பொலிஸாருக்கு முன்னரே நாம் வெளிப்படுத்தியிருந்தோம். அது இப்போது உண்மையாகி விட்டது.

வழக்கு விசாரணை வவுனியா நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகிறது.

உயிரிழந்தவரின் மனைவியே தற்போது தனது வீட்டையும் பார்த்து தொழிலாக விவசாயத்தையும் செய்து வருகின்றார்.

தற்போது கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப் பட்டுள்ளவரான சந்தேகநபரது மனைவி (கைது செய்யப்பட முன்பு) இந்தக் கொலை தொடர்பில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டவர்கள் மீது "இனந்தெரியாதவர்களால் உயிர் அச்சுறுத்தல்" என மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 07.03.2020

## "முடிவுக்கு வந்த முகமூடிக் கொள்ளை"



**முன்கதை**

யாழ்ப்பாணத்தில் தொடர் கொள்ளையில் ஈடுபட்டு வந்த கொள்ளைக்கும்பல் ஒன்று, பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, வீடொன்றில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் கூண்டோடு மாட்டினர். அவர்களிடமிருந்து வாள் முதலான கொலைக்கருவிகளும், 14 பவுண் தங்க நகைகளும் மீட்கப்பட்டிருந்தன. இந்தக் கொள்ளைக்கும்பல் சிக்கிய விதம் மற்றும் அவர்கள் கொள்ளையடித்த சில சம்பவங்களும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

**இப்போது...!**

இந்தக் கொள்ளைக் கும்பல் கோப்பாய் பகுதியில் தங்கள் கைவரிசையை முதிய தம்பதியினர் மீதும் காட்டியிருந்தனர். இதன் போது முதியவரின் தலையில் றீப்பைக்கட்டையால் அடித்திருந்தனர். மூதாட்டியின் பல் ஒன்றையும் பிடுங்கியிருந்தனர். இதனையும் நாம் பதிவு செய்திருந்தோம்.

அதற்குப் பின்னர், காயமடைந்த முதியவர் ,சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துவிட்டார். மூதாட்டி அச்சம் காரணமாக உறவினர் ஒருவரின் வீட்டிலேயே தங்கியிருக்கிறார். கைதான கொள்ளையர்கள் ஆவரங்கால் பகுதியில் மட்டும் 48 பவுண் நகைகளை எடுத்திருந்தார்கள் . எனினும் "கொள்ளையர்களிடமிருந்து 17 பவுண் நகைகளே கைப்பற்றப்பட்டன. பிரதான சந்தேகநபரை இன்னும் தேடிவருகிறோம். இதுவரை அவர் கைதுசெய்யப்படவில்லை. அதனால் மிகுதி நகைகள் மீட்கப்படவில்லை" எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை, கைது செய்யப்பட்ட கொள்ளைக்கும்பலில் இருந்த ஒருவன், 2019 ஆம் ஆண்டு இளவாலைப் பகுதியில் கொள்ளையடிக்கும்போது அந்த வீட்டில் இருந்த 16 வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கும் உட்படுத்தியவன்.

சந்தேக நபர்களில் சிலர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

○ ம.பா. மகாலிங்கசிவம்



ம.பிரவீணன்



# தேன் கூடு

# நண்பனது கடைசி ஞானம்

வடக்கு மாகாணத்தை கொவிட்19 ஒருபுறம் அச்சுறுத்திக் கொண்டிருக்க, இன்னொருபுறம் எயிட்ஸ் நோயும் சந்தடியில்லாமல் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளது. அண்மையில் சர்வதேச எயிட்ஸ் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு மன்னாரில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் மன்னார் மாவட்ட தொற்று நோயியல் பிரிவின், பதில் வைத்திய நிபுணர் ஷாலினி நாணயக்கார வெளியிட்ட தகவல் ஒன்று வடமாகாண மக்களின் வயிற்றில் புளியைக் கரைப்பதாக அமைந்துவிட்டது. இலங்கை முழுவதிலும் 2019ஆம் ஆண்டு வரை 439 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அவர்களுள் வடக்கு மாகாணத்தில் மட்டும் தற்போது வரை 125 பேர் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இப்புள்ளிவிபரத்தைப் பார்க்கும்போது இலங்கை முழுவதிலும் உள்ள எயிட்ஸ் நோயாளரின் எண்ணிக்கையில் காற்பங்கிற்கும் மேலானவர்கள் வடக்கு மாகாணத்திலேயே உள்ளனர் என்பது தெளிவாகின்றது.

எனவே வடமாகாண மக்கள் இது பற்றிச் சிந்திக்க வேண்டிய, இந்நோயிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தருணம் வந்துள்ளது என்றே கருதவேண்டியுள்ளது. கொடிய கொரோனா நோய் நாம் சும்மாயிருக்க நம்மை அறியாமலே மற்றவர் மூலம் பரவுகிறது. ஆனால் எயிட்ஸ் நோயோ நாம் சும்மா இருக்க முடியாமையினால் மற்றவரிடம் தொடர்பு கொள்ளும்போது பரவுகிறது. இந்நோய் ஒருவருக்குப் பரவினால் பெரும்பாலும் அந்நோய்த் தொற்றுக்கான முழுமையான பொறுப்பும் தொற்றுக்குட்பட்ட வரையே சாருகின்றது. இவ்வகையில் எய்ட்ஸ் நோய்க்கு உட்பட்ட நண்பன் ஒருவனது வாக்குமூலமாக அமையும் விழிமைந்தனது (ம.பிரவீணனின்) 'நண்பனது கடைசி ஞானம்' என்னும் கவிதை இன்றைய தேன்கூட்டில் இடம்பெறுகின்றது.

இன்றைக்கோ நாளைக்கோ என்றூசல் ஆடுகின்ற
நண்பனது கால்மாட்டில் நான் அமர்ந்து கொண்டிருந்தேன்
என்ன வருத்தம் என்று எவருக்கும் சொல்லவில்லை
சின்ன வருத்தம் இல்லை என்று நான் தெரிந்தேனே

ஊரில் இவர் பெரிய உடையார் பரம்பரை தான்
போருக்கு அஞ்சிப் புலம்பெயர்ந்து வந்தவர்தான்
போகம் உலகிலுள்ள தெல்லாம் அனுபவித்து
சாகும் தறுவாயில் கிடந்து புலம்புகின்றார்.

சாளந்தன் கண்ணுக்குச் சமீபத்தில் தெரிகிறது
பாவி நான் வாழ்ந்த வாழ்வின் பயன் என்ன?

தாய்நாட்டைக் காக்கத் தம்மைக் கொடுத்தவர்கள்
பாய்கின்ற வீரக் களத்தில் மடியேனோ?

மோகம் ஒழித்து முனிவர் வழிசென்று
யோகத் திருந்தென் உயிர் விடுக்க மாட்டேனோ?

தீப்பட் டெரியும்ஒரு வீட்டில் குழந்தையொன்றைக்
காப்பாற்றப் போய்இக் கடையேன் இறக்கேனோ?

எவரெஸ்ட் சிகரத்தை ஏறும் முயற்சியிலே
தவறிவிழுந்து பனிக்காற்றில் உறையேனோ?

விண்கலத்தில் வானவெளிக்குக் கிளம்புகையில்
மண்ணில் அது வெடிக்க மரணம் என்னை அணுகாதோ?

புலம்பெயர்ந்தோர் "காம்ப் ஒன்றில் மருத்துவனாய் நான் வாழ்ந்து
நுளம்பு கடித்ததனால் நோய் வந்து சாகேனோ?

உடலை உயிர் பிரிந்த பின்னும் ஒருவருமே
தொடவும் மனமின்றித் தூக்கி எறிவாரோ?

நினைவு தவறி நான் நெடுந்தொலைவு போகையிலும்
மனைவி குடும்பத்தார் மனதிலெனை வையாரோ

கண்கள் சிவந்து கலங்கிப் புலம்பியவன்
எண்ணி நெடுமூச் செறிந்தான் எதை எதையோ

நண்பா எனக்குச் சொல் நான் யார்க்கும் சொல்லவில்லை
என்ன வருத்தம் உனக் கென்றேன் எயிட்ஸ் என்றான்

ம.பிரவீணன் வலிகாமத்திலுள்ள விழிசிட்டி என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது கிராமத்தின் பெயரை அடிப்படையாகக் கொண்டு விழி மைந்தன் என்னும் புனைபெயரில் எழுதிவருபவர். ஈழத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் முன்னாள் அதிபர் கி. மகேந்திரன் ஆகியோரின் ஏக புத்திரன். ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி வருபவர்.

**எப்போது மரணம் வரும்?எதுவரை உயிரோடு இருப்போம்? என்பவை எமது அறிகைப் பரப்புக்குள் உள்ளடங்காதவை. எனவே கிடைத்த வாழ்க்கையை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும். தீய வழியிற் சென்று எமக்கான மரணத்தை நாமே தேடிக் கொள்ளக்கூடாது.**

இலக்கியத் துறையிலும் ஈடுபாடு காட்டிவரும் இவர் விழிமைந்தன் கவிதைகள் என்னும் கவிதைத் தொகுதியையும் ஒலியன் கதைகள் என்னும் விஞ்ஞானப் புனைகதைத் தொகுதியையும் வெளியிட்டவர். இலங்கை, அவுஸ்திரேலியத் தொலைக்காட்சிகள் மற்றும் வானொலி என்பவற்றில் தொடர் உரைகள் ஆற்றிவருவதோடு ஆஸ்திரேலியாவின் புகழ்பெற்ற நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் விளங்குகிறார். மேடைப் பேச்சு, மேடை நாடகம் முதலியவற்றிலும் திறமைகளை வெளிக்காட்டி வருபவர். மகாஜனன் கவிதைகள் தொகுப்பில் இடம்பெற்றதே நண்பனது 'கடைசி ஞானம்' என்ற இக் கவிதையாகும். "இன்றைக்கோ நாளைக்கோ என்றூசல் ஆடுகின்ற நண்பனது கால் மாட்டில் நான் அமர்ந்து கொண்டிருந்தேன்" என்று வாசகருடன் உரையாடும் பாங்கில் அவரது கவிதை ஆரம்பிக்கின்றது.

நண்பனுக்கு என்ன நோய் என்று எவருக்குமே தெரியாது. எனினும் அது சின்ன வருத்தம் இல்லை என்பதை நண்பர் தெரிந்து கொண்டிருந்தார். ஊரில் மிகப்பெரிய உடையார் பரம்பரையைச்சேர்ந்தவன் தான்.

அவ்வன் போருக்கு அஞ்சி புலம்பெயர்ந்த தேசத்துக்கு வந்தவன். ஆனால்புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களிற் பலர் தாய் நாட்டிலுள்ள உறவினர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி கொண்டிருக்க இவனோ தவறான வழியிற் சென்றான். அதனைக் கவிஞர் "போகம் உலகில் உள்ளதெல்லாம் அனுபவித்து சாகும் தறுவாயிற் கிடந்து புலம்புகிறார்" என்னும் அடிகளின் மூலம் கவிஞர் நோய்க்கான மூல காரணத்தைக் குறிப்பாக வெளிப்படுத்துகின்றார். அடுத்து பாதிக்கப்பட்ட நண்பனின் குரல் மூலம் வாழ்வின் உன்னதத்தையும், அதைத் தவறான வழியிற் பயன்படுத்தியதால் அடைந்த கழிவிரக்கத்தையும் வாசகர்கள் உள்ளத்தில் தைக்கும் வகையிற் கவிஞர் வெளிப்படுத்துகின்றார்.

உலகில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கின்ற கொடைகள் எல்லாவற்றிலும் மிகவும் உயரிய கொடை உயிரோடு இருத்தல் ஆகும். லா.ச.ராமாமிர்தம் அவர்கள் தமது "பாற்கடல்" என்ற கதையில் வரும் ஒரு பாத்திரத்தின் கூற்றாக என்னை விட வயது மூத்தவர்களைக் கண்டால் கையெடுத்து வணங்கத் தோன்றும். ஏனெனில் அவரது வயதில் நான் இருப்பேன் என்று கூற முடியாதே" எனக் கூறுகின்றார். அது உண்மை தான் எப்போது மரணம் வரும்? எதுவரை உயிரோடு இருப்போம்? என்பது எமது அறிகைப் பரப்புக்குள் உள்ளடங்காதவை. எனவே கிடைத்த வாழ்க்கையை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும். தீய வழியிற் சென்று எமக்கான மரணத்தை நாமே தேடிக் கொள்ளக்கூடாது.

கவிஞனின் நண்பர் "தாய்நாட்டைக் காக்கத் தம்மைக் கொடுத்தவர்கள் பாய்கின்ற வீரர் களத்தில் மடியேனோ? என முதலில் வினா எழுப்புகின்றான். இதன் மூலம் எயிட்ஸ் நோய்க்குப் பலியாகப் போகின்ற என் உயிரை நாட்டில் விடுதலைப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் போர்க் களத்தில் ஆகுதியாக்கியிருக்கக் கூடாதா என்ற அவனது கவலை வெளிப்படுகின்றது. தனது வாழ்க்கையை தீப்பிடித்த வீட்டில் குழந்தையைக் காப்பதற்காகவோ, எவ ரெஸ்ற் சிகரத்தை ஏறும் சாதனையிலோ, விண்கலத்திற் பறக்கும்போதோ, மருத்துவப் பணியில் ஏற்படும் நோய்த்தொற்றின் போதோ இழந்திருக்கக் கூடாதா? என்று அங்கலாய்க்கின்றான். இதுவே கவிஞர் கூறும் "நண்பனது கடைசி ஞானம்" சுடலை ஞானம் என்றும் கூறலாம். எயிட்ஸ் நோயினால் இறப்பவரின் மரணம் கூட மிக வும் இழிவானதாகவே நோக்கப்படும் என்பதைக் கவி ஞர். "உடலை உயிர் பிரிந்த பின்னும் ஒருவருமே தொட வும் மனமின்றித் தூக்கி எறிவாரோ? நினைவு தவறி நான் நெடுந்தொலைவு போகையிலும் மனைவி, குடும்பத்தார் மனதிலென்னை வையாரே" என்னும் பாடல் அடிகளின் மூலம் அழகாகச் சித்தரிக்கின்றார். எனவே கடவுள் தந்த அழகிய வாழ்வு அதை நல்ல வழியில் கொண்டு செல்வோம். ஓரிரு நிமிட உடல் சுகத்துக்கு ஆசைபட்டுக் கண்டவருடனும் உறவுகொண்டு மருந்தே இல்லாத மரணம் உறுதியான தொற்று நோய்களுக்குப் பலியாகாமல் எம்மைக் காத்துக் கொள்வோம். உடலில் விளைந்தெழும் உணர்ச்சிகளை தீர்ப்பதற்காகவே திருமணமும் கணவன் மனைவி உறவும் சமூகத்தாலே தரப்பட்டுள்ளன. நம்முடையவர்களுடன் நமது தேவைகளை மட்டுப்படுத்திக் கொண்டு நல் வழிச் செல்வோமாக!



# கொலை கொலையாம்! காரணமாம்!!

ஆரதி

இது கூட்டுப் படங்களின் (Anthology) யுகம் போலும். இந்த வரிசையில் மேலும் புதிதாக நான்கு படங்கள் வந்திருக்கின்றன. 'தங்கம்', 'லவ் பண்ணா விட்றணும்', 'வான் மகள்', 'ஓர் இரவு' என இந்த நான்கு படங்களையும் இன்றைய தமிழ் சினிமாவின் நான்கு முன்னணி இயக்குநர்கள் இயக்கியிருக்கிறார்கள். நெட்ஃபிளிக்ஸில் பார்க்கலாம்.

நான்கு படங்களையும் பார்க்கும்போது நாம் வன்முறையால் சூழப்பட்ட உலகிலேயே இருக்கிறோம் என்ற உணர்வே ஏற்படுகிறது. தமிழ்நாட்டு வாழ்க்கைச் சூழலை இவை மையப்படுத்திப் பேசினாலும், நமக்கும் (ஈழத்துக்கும்) பெருமளவுக்குப் பொருந்திப் போகின்றன. ஆனால், படங்களின் வெளிப்பாட்டில் ஏராளம் விமர்சனங்கள் உண்டு.







முதல் படம், சுதா கொங்கராவின் "தங்கம்". இந்து - முஸ்லிம் மதங்களைக் கடந்த காதல் திருமணம் பற்றி ஒரு கோணத்திலும் திருநங்கை ஒருத்தி, தன் காதலை இழந்து பெற்றோராலும் கைவிடப்பட்டு அவலமாக மடிவதை இன்னொரு கோணத்திலுமாக இணைத்துக் காட்டுகிறது தங்கம். தங்கம் ஆணா, பெண்ணா என்று பெயரிலும் அறிய முடியாது. வாழ்விலும் அறிய முடியாது. இப்படி எதுவென அறிய முடியாதிருப்பதே பெரும் அவலம். இரண்டுமில்லாத நிலையில் வாழ்வது எவ்வளவு அவலம் என்பதை தங்கத்தைப் பார்க்கும்போது உணர்ந்துகொள்ள முடிகிறது.

வெளியே விரட்டப்படும்போது, அந்த ஆய்க்கினைகளிலிருந்து தப்புவதற்காக தாயிடம் வந்து தங்கம் கெஞ்சும் காட்சி தாங்கிக் கொள்ளவே முடியாத துயரம். கதவைத்திறக்க முடியாது என்று கட்டளையிட்டு விட்டுக் கல்லுப் போன்றிருக்கிறார் தந்தை. உருகிக் கரைகிறார் தாய். கூடவே சகோதரிகள். ஆனால், அவர்களால் எதுவுமே செய்ய முடியாது. ஏனென்றால் இது ஆண்களின் உலகமல்லவா? இரக்கமோ, கருணையோ, அந்த அதிகாரத்தின் முன்னே எடுபடாது.

தன் வீட்டுக் கதவுதான் திறக்கவில்லை என்று தங்கம் ஒவ்வொரு வீட்டுக் கதவாகத் தட்டினாலும் எதுவும் திறக்கவில்லை. அங்கே திறக்கப்படாதிருப்பது கதவுகளில்லை. மனங்களே. ஆகவே மனங்கள் திறக்கப்படாத, கல்லாலான உலகத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறது தங்கம்.

ஆழமான உணர்தலுக்குரியவாறு படத்தை உருவாக்கியிருக்கும் சுதா கொங்காரா வெற்றியடைந்திருக்கிறார். தங்கமாக நடிக்கும் காளிதாஸ் ஜெயராமை மறக்கவே முடியாது.

மூன்றாது படம், கௌதம் வாசுதேவ் மேனனின் "வான் மகள்". எதிர்பாராத விதமாக ஒரு நாள் இரவு 12 வயதுள்ள மகளை யாரோ கடத்திச் சென்று பாலியல் வன்முறைக்குள்ளாக்கி விடுகிறார்கள். இந்தக் கொடுமையான நினைவிலிருந்து மகளை எப்படி மீட்டெடுப்பது, தாங்கள் எவ்வாறு அதிலிருந்து மீள்வது என்ற பெற்றோரின் நோக்கிலான படமிது. பெண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோரின் உளநிலையை - இன்றைய யதார்த்தத்தைச் சொல்கின்றது. ஒரு வகையில் பாபநாசத்தை நினைவூட்டுகிறது. பாதிப்புக்குள்ளாகிய மகளை எப்படி அதிலிருந்து மீட்டெடுப்பது என்று தனக்குள்ளேயே குமுறிக்கொண்டும் போராடிக் கொண்டிருக்கும் தாயின் உணர்நிலைகள் நம் கவனத்திற்குரியவை. அதிலும் வெளிச்சமூகத்துக்கு அஞ்ச வேண்டிய நிலையும் வெளிச் சூழல் இதை எப்படி நோக்குகிறது என்பதும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது. மற்றவர்களின் நிலையைப் புரிந்துகொள்ளாத மனிதர்களைக் குறித்த கேள்விகளையும் படம் எழுப்புகிறது. மகளைக் கொல்ல முயற்சிக்கும் தாயின் உள நிலையை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. தாங்க முடியாத அவலத்துக்கும் தீர்க்க முடியாத பிரச்சினைக்கும் வேறு என்னதான் வழி எனச் சிந்திக்கும்போது இப்படியான முடிவுகள்தான் தோன்றும். அதிலிருந்து மீள்வதே வாழ்க்கை.

இதை ஒத்த மனநிலையைக் கொண்ட ஒரு குடும்பத்தைப் பத்து ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்திருந்தேன். ஒரு மாதக் குழந்தையாக இருந்த மகனுக்கு போரிலே ஷெல் பட்டு கை இல்லாமல் போகிறது. கையில்லாமல் அவன் எப்படி வாழ முடியும். அதைவிட அவன் இறந்தே போய்விடுவது நல்லது என்று அப்போது நினைத்திருக்கிறார் அந்தத் தாய். ஆனால், இன்று அந்தப் பையன் வளர்ந்து துடிப்பான இளைஞராகி விட்டார். வாழ்க்கை இப்படித்தான் விசித்திரமான கோலங்களால் இழைக்கப்பட்டது.

அடுத்தது, விக்னேஷ் சிவனின் "லவ் பண்ணா விட்றணும்".

இது ஆணவக் கொலை பற்றிய படம். இந்தியச் சூழலில் சாதி, வர்க்கம், மதவேறுபாடு போன்றவற்றுக்காக கட்டற்ற வன்முறையை எந்தக் குற்றவுணர்ச்சியும் இல்லாமல் பிரயோகிப்பதை ஆணவக்கொலை என்கிறார்கள். வீரசிம்மன் என்ற வசதியும் அதிகாரமும் அடியாட்களும் உள்ள தந்தைக்கு இரண்டு பெண் பிள்ளைகள். ஒருவர் சாதாரண ட்ரைவரைக் காதலிக்கிறார் என்பதற்காக இருவரையும் அடியாட்களை வைத்துக் கொன்று விடுகிறார் தந்தை.

அடுத்த மகளுக்கு இது தெரிந்து விடுகிறது. அதேவேளை அவரும் தந்தைக்கு விருப்பமில்லாத இன்னொருவரைக் காதலிக்கிறார். இதிலிருந்து தப்பிக் கொள்வதற்காக சமபாலுறவில் இருக்கிறேனே தவிர, மெய்யாகவே காதலிக்கவில்லை என்று தந்தைக்குப் பொய்யைச் சொல்லித் தப்பித்துச் சென்று விடுகிறார் அந்த மகள்.

காலம் செல்ல அந்த மகளோடு சென்று வாழ்கிறார் தந்தை. வழமைகளை அள்ளிக் கொண்டு நிற்கும் படமாகவே இது முடிகிறது. படித்த, மாற்றாகச் சிந்திக்கும் ஆற்றலுள்ள பெண், எப்படிக் கொலைகாரத் தந்தையை, அதுவும் தன்னுடைய சகோதரியைக் கொன்றவரை மன்னித்திருக்கிறாள் என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டேயிருக்கிறது. ஆனாலும் வேறுபாடுகளை வன்முறையானால் எதிர்கொள்ளும் ஆணவ மனதை அம்பலமாக்குவதில் கவனம் பெறுகிறது.




நான்காவது வெற்றிமாறனுடைய "ஓர் இரவு". இதுவும் சாதிப்பிரச்சினை பற்றிய வன்முறைப் படமே. கீழ் மத்தியதர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்த மூத்த மகள் காதலித்துத் திருமணம் செய்து நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். மகள் கருவுற்றிருக்கிறார் என்று வீட்டுக்கு பக்குவமாக அழைத்து வந்து மகளைக் கொன்று விடுகிறார் தந்தை. இங்கும் தாயின் குரலும் மகளின் கதறலும் புறக்கணிக்கப்படுகிறது கணவன், தந்தை என்ற ஆணினால்.

சாதி வெறியின் முன்னே பெற்று வளர்த்த மகள் என்ற உணர்வே இல்லாமல் போகிறது. அக்காவின் வசதியான வாழ்க்கையைப் பற்றிக் கதைக்கும் இளைய சகோதரர்கள். "நீ வீட்டை விட்டுப் போன பிறகு எங்களைப் படிக்காமல் நிறுத்தி விட்டார் அப்பா" என்று சொல்லும் தங்கை எல்லாம் பிள்ளைகளின் மனவுலகையும் தந்தையின் வெறியுணர்வையும் காட்டும் சித்திரம். குடும்பம் என்ற அதிகார அமைப்பு எவ்வளவு வன்முறையைக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்று. சாகும் தறுவாயில் உயிருக்குப் போராடித் தந்தையைக் கெஞ்சும் கர்ப்பிணி மகளின் துயரம் அப்படியே மனதில் உறைந்து போயிருக்கிறது.

இந்த நான்கு படங்களும் கவனத்துக்குரிவைதான் என்றாலும் தங்கம், ஓர் இரவு, வான் மகள் என்றே இவற்றை வரிசைப்படுத்திப் பார்க்க முடிகிறது. லவ் பண்ணா விட்றணும் நிறையப் பல வீனங்களைக் கொண்டிருக்கிறது. ஆனாலும் பார்க்க வேண்டியவையே அனைத்தும்.



# கந்தையா ஸ்ரீகணேசனின் 3 ஆங்கில நூல்கள்




கந்தையா ஸ்ரீகணேசன் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஆய்வு நூல்களையும் ஆக்க இலக்கியங்களையும் எழுதிவருகின்றார். மிக அண்மைக் காலமாக மொழிபெயர்ப்பிலும் அவரது அக்கறை சென்றுள்ளது. அவரது படைப்புக்கள் தேசிய ரீதியில் பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளன. அவரது ஆளுமையின் வெளிப்பாடாக அண்மையில் மூன்று ஆங்கில நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் இரண்டு ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பானவை. மற்றையது அவரது ஆங்கிலக் கவிதைகளின் தொகுப்பு.

ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பான அவரது இரு நூல்களும் மிகவும் கவனித்தற்குரியவை. மிக நீண்டகாலமாக அம்மொழியினை மாணவர்களுக்குக் கற்பித்து வந்த அனுபவத்தின் வெளிப்பாடாக அவை விளங்குகின்றன. ஆங்கில மொழியைக் கற்பித்தல் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் சவாலாக விளங்கிவரும் ஒரு சூழலில் இந்நூல்கள் வெளிவந்திருப்பது நோக்குதற்குரியது. **Using Theatre to Enhnace Learner Langue in English Class rooms A Sir Lankna Experiment** என்னும் நூல் அவரது கலாநிதிப்பட்ட ஆய்வைத் தழுவியதாகும். நாடக இலக்கிய வடிவத்தினூடாக மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்பாடுறச் செய்வது எவ்வாறு என்பதனை இலங்கைக் கல்விப் புலத்தினைப் பின்னணியாகக் கொண்டு, பரிசீலனை செய்து, கருத்துக்களை முன்வைப்பதாக இந்நூல் அமைந்திருக்கின்றது.

இந் நூலில் நாடகத்தை வெறுமனே ஒரு இலக்கிய வடிமாக மட்டும் பார்க்காது அதனை ஒரு கற்பித்தல் சாதனமாகப் பயன்படுத்த முடியும் என்பதனை ஆதாரபூர்வமாக அவர் நிரூபிக்க முனைந்துள்ளார். வெவ்வேறு சமூக, பொருளாதார, கல்விப் பின்னணிகளிலிருந்து வரும் மாணவர்களின் ஆங்கில மொழியறிவு, மொழிவளம், தொடர்பாடல் திறன்விருத்தி என்பனவற்றை நாடகங்கள் மூலம் எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

நாடகங்கள் மூலம் மாணவர்களுக்கு ஆங்கில மொழியறிவை வழங்குவதால் அவர்களின் மொழி தொடர்பான ஆளுமை மட்டுமன்றி படைப்பாற்றல், தொடர்பாடல், மேடைக் கூச்சமின்மை முதலான திறன்களும் மேம்பாடடையும் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். ஆதலால் இன்று வழக்கிலுள்ள ஆங்கில மொழி கற்பித்தல் முறையுடன் இதனைத் துணைச் சாத னமாகக் கையாள்வதனூடாக சிறந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை அவர் இந்நூலில் வலியுறுத்துவதைக் காணலாம்.

**English Language Teaching Through Literature at University Level** என்னும் அவரது மற்றை நூல் ஆங்கிலம் கற்பித்தலில் இலக்கியங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கின்றது. பல்கலைக்கழக மாணவர்களை மையப்படுத்திக் கருத்துக்களை இந்நூலில் தந்திருந்தாலும் அவை பாடசாலை மாணவர்களுக்கும் மிகப் பொருத்தமானவையாக உள்ளன. இலங்கையின் மொழிப் பாடத்திட்டத்தில் மொழியும் இலக்கியமும் தனித்தனியாகப் பார்க்கப்பட்டு வருவதை அவதானிக்கலாம். தமிழ் மொழி தமிழ் இலக்கியம் என்றும் ஆங்கில மொழி ஆங்கில இலக்கியம் என்றும் தனித்தனியாகப் பாடங்கள் பாடசாலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஆங்கில மொழிப் பாடநூல்களில் இலக்கியப் பகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் அவை ஒப்பீட்டளவில் மிகக் குறைவானதாகவே யுள்ளன. அத்துடன் அவற்றைக் கற்பிப்பதிலும் அதிக கவனம் செலுத்தப்படுவதில்லை. தொடர்பாடல் ஆங்கிலம் பற்றிய அவதானிப்பே மிக அதிகமாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் ஆங்கில மொழியறிவு விருத்தியில் இலக்கியங்களின் வகிபங்கு எத்தகையது என்பதனைத் தனது அனுபவப் பின்புலம் சார்ந்து இந்நூலில் ஆசிரியர் ஆராய்ந்துள்ளார்.

வரலாற்றடிப்படையில் ஆங்கில மொழி கற்பித்தலில் இலக்கியங்கள் எத்தகைய பங்களிப்பைச் செய்துள்ளன என்பதை ஆசிரியர் முதலில் எடுத்துக்காட்டுகின்றார். அதனைத் தொடர்ந்து இலக்கியம் மொழியின் நெழிவு சுழிவுகளைச் சிறப்பாக எடுத்துக்காட்டும் தன்மை வாய்ந்தது என்ற வகையில், அதனை இரண்டாவது மொழிக் கற்பித்தலில் எவ்வகையில் பயன்படுத்த முடியும் என்ற தனது கருத்துக்களை மாணவர்களை மையப்படுத்திய பகுப்பாய்வின் மூலம் வெளிக்கொணர்ந்துள்ளார். மொழி கற்றல், கற்பித்தல் தேவைக்காக ஙிலக்கியங்களைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றியும் இந்நூலில் நோக்கப்பட்டுள்ளது. மேலும் இலக்கியத்தினூடாக வெளிப்படுத்தப்படும் விழுமியங்கள், அழகியல் பண்புகள் முதலானவை மாணவர்க்குப் பயன்தரவல்லவை என்பதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ஆக, இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தினைப் புகட்ட முயல்கின்றவர்க ளுக்கும் அது தொடர்பான கொள்கை வகுப்பாளர்களுக்கும் பயன்தரவல்ல கருத்துக்கள் இந்நூலில் பொதிந்துள்ளன.

கந்தையா ஸ்ரீகணேசனின் ஆங்கிலக் கவிதைகள் அடங்கிய தொகுதி Breaking Barriers என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களாகத் தனது மனதை உறுத்திய பல நெருடலான விடயங்களை ஆசிரியர் இங்கு கவிதைகளாக வடித்துள்ளார். அடக்குமுறைகள், அர்த்தமற்ற கட்டுப்பாடுகள், மாய்த் திரைகள், போலி நம்பிக்கைகள் முதலான தடைகளை உடைத்தெறிந்து தீமைகள் அற்ற, சுரண்டல் இல்லாத, நீதியும் நியாயமும் நிறைந்த, சாந்தியும் சமாதனமும் சூழ்ந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வருமாறு அறைகூவல் விடுவனவாக இக் கவிதைகள் அமைந்துள்ளன.

இனமோதலில் அகப்பட்டுச் சிதிலமாகும் மக்களின் அவல வாழ்க்கை, உணர்ச்சி மோதல்கள், நிராசையாகும் எதிர்பார்ப்புக்கள், நெருக்குவாரங்கள் என்பவற்றை அவரது பல கவிதைகள் பேசுகின்றன.

மனிதநேய பின்புலத்தில் எழுதப்பட்டுள்ள இக் கவிதைகள் ஆசிரியரின் இளகிய மனது, இனப்பற்று, முரண்பாடுகளும் போரும் அற்ற அமைதியான வாழ்க்கையை அவாவும் எதிர்பார்ப்பு என்பவற்றுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். மேலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான கவிதைகள் காலமாற்றத்தால் இழந்து போன பல விடயங்களை அசைபோடுபவையாக அமைந்துள்ளன.

கலைத்துவம் மிக்க இக்கவிதைகள் நவீனத்துவ நாட்டத்தினால் கலைந்து போகும் எமது பண்பாட்டம்சங்கள், பழக்கவழக்கங்கள், ஒற்றுமையான வாழ்க்கை, உற்சாகமான எண்ணங்கள் என்பவை பற்றிய அக்கறையைக் கிளறிவிடுகின்றன. இவையேயன்றி பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பண்பாட்டுப் பாதுகாப்பு, நடைமுறைப் பிரச்சினைகள் முதலான பல விடயங்களைப் பேசும் கவிதைகளும் இத் தொகுதியிலுள்ளன.

ஆக, இம் மூன்று ஆங்கில நூல்கள் வாயிலாகத் தனது அனுபவங்களையும் படைப்பாற்றலையும் கந்தையா ஸ்ரீகணேசன் மிகத் தெளிவாக வாசகர் முன் வெளிக்கொணர்ந்திருக்கின்றார். கருத்துச் செறிவு, நேர்த்தியான வெளிப்பாடு, துல்லியமான எடுத்துக்காட்டுக்கள் முதலானவை இந்நூல்களுக்குத் தனிக்கவனத்தைப் பெற்றுத் தந்துள்ளன.

மாணவர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், சுவைஞர்கள் எனப் பலதரப்பினருக்கும் பயனுள்ள பல விடயங்கள் இந்நூல்களில் உள்ளன. இவற்றைக் கற்பதனாலும் .இவற்றிலுள்ள விடயங்கள் குறித்துத் தீவிரமாக மேலும் சிந்திப்ப தனாலும் நன்மைகள் பல சமூகத்துக்குக் கிட்டும் என உறுதியாக நம்பலாம்.


**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## சொல்லி வேலையில்லை



எங்கடை கொரோனா தடுப்புத் தலைவரை 'லெப்பினன்ட் ஜெனரல்' பதவிலிலையிருந்து 'ஜெனரல்' பதவிக்கு உயர்த்திப் போட்டார் எங்கடை ஜனாதிபதி. நல்லாய்த்தான் ஜனாதிபதி ஊக்கப்படுத்துறார்... சொல்லி வேலையில்லை. அங்கை இஞ்சையெண்டு திரிஞ்சு ஆமத்துறுமாற்றை ஆசீர்வாதமும் பெற்று மகிழ்ந்தார் அந்த ஜெனரல். ஆனால் ஒரு பச்சை உண்மை என்னெண்டால் 'கொரோனா வைரஸ்' லெப்பினன்ட் ஜெனரலுக்கு ஒரு 'சலூட்டும்' ஜெனரலுக்கு வேற மாதிரி சலூட்டும் அடிக்காது. வேணுமெண்டால் ஜெனரல்தான் கொரோனாவுக்கு சலூட் அடிக்க வேணும் பாருங்கோ..

- அன்றாடங்காய்ச்சி



# பெண்மையின் குரல்கள்

## பழைய கண்ணாடியில் புதிய விம்பங்கள்

○ தருமராசா அஜந்தகுமார்



தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகைசார்ந்த சொற் காத்துச் சோர்விலாள் பெண் என்று வள்ளுவர் சொன்னாலும் நாம் தாய்வழிச் சமூக அமைப்பில் இருந்து வந்தாலும், பெண் தொடர்பான பல மட்டுப்பாடுகளை அறிந்து கொண்டே வந்திருக்கின்றோம்.

'உயிரினும் சிறந்தன்றே நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்பு சிறந்தன்று' (தொல்.களவு.23)

'அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப' (தொல்.களவு.8)

என்று தொல்காப்பியம் பெண்களின் இலக்கணங்களைக் கூறுகின்றது. அதுமட்டுமல்ல பெண்கள் கடல்தாண்டிச் செல்லக்கூடாது என்ற 'முந்நீர் வழக்கம் மகடூஉவொடு இல்லை' என்று கட்டுப்பாடுகளையும் விதித்தது. இலக்கணம், விதி சொன்னது மட்டுமல்ல விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன. பேதைமை என்பது மாதர்க்கணிகலம்(கொன்றைவேந்தன்)

பெண்ணொருத்தி பேசிடில் பெரும் பூமி தானதிரும்
பெண்ணிருவர் பேசில் விழும் வான் மீன்கள் பெண் மூவர்
பேசிலவை சுவரும் பேதையே பெண்பலர்தாம்
பேசிலுல கென்னாமோ பின் (நீதிவெண்பா)

தையல் சொல் கேளேல்(ஆத்திசூடி)

என்றெல்லாம் பெண்களைப் பற்றிய எதிர்மறையான எண்ணங்களும் அதிகம் உண்டு. சித்தர் பாடல்கள் இவற்றை இன்னும் வளர்த்துச் சென்றன.

ஆனால் சங்ககாலத்தில் வீரயுகத்தின் இருப்பினையும் எழுச்சியையும் வெளிப்படுத்துவதற்கு பெண்களையே உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார்கள். பெரும்பாலான பெண்பாற்புலவர்களும் இச்சூழலுக்கு இசைந்தே கொடுத்தார்கள். சங்காலப் பெண்பாற்புலவர்களில் அதிகம் பாடியவர் என்ற பெருமைக்குரியவர் ஔவையார். அகத்தில் 26 பாடல்களையும் புறத்தில் 33 பாடல்களையும் என்று 59 பாடல்களைப் பாடியுள்ளார். புறப் பாடல்களைப் பாடியுள்ளதன் மூலம் புறவாழ்வை விளங்கும் அளவுக்கு வெளிஉலகத் தொடர்பு அவருக்கு இருந்திருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது. தனது பாடல்களில் வெள்ளிவீதியார் (அகம் 147) பரணர் ( புறம் 99) ஆகியோரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளமையையும் அதியமானைத் தவிர நாஞ்சில் வள்ளுவன் (புறம் 140) பாரி (குறுந்தொகை 15) கிள்ளி (நற்றிணை 390) பொறையன்(அகம் 303) ஆகிய அரசர்களைப் பற்றிப் பாடியுள்ளமையும் வெளியுலகத் தொடர்பைக் காட்டுகின்றது.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே என்றும் நெஞ்சிலே வேல் பட்டு இறந்தால் ஈன்ற ஞான்றினும் பெரிதும் உவந்தவளாகவும் வற்றிய முலைகளில் இருந்து பால் சுரந்தவளாகவும் புறநானூற்றுத் தாய்க்கு ஒரு முக்கியத்துவம் இருக்கின்றது.

இதனை உவகைக் கலுழ்ச்சி என்று சொல்லுவர். அங்கு பார்வையாளர் வேடமும் வீரத்தை முதன்மைப்படுத்தும் வேடமும்தான் பெண்ணுக்கு உண்டு என்ற கருத்துகள் விமர்சன நோக்கிலும் முன்வைக்கப்படுகின்றன.

ஈழத்துப் போர் வரலாற்றில் பெண்கள் பார்வையாளர் என்ற நிலையில் இருந்து மாறுபட்டார்கள். 'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும் பெண்டிரும்' என்று போரில் பங்குபற்ற முடியாதவர்கள் பட்டியலில் பெண்கள் இருந்தார்கள். சங்ககாலத்தில் 41 பெண் பாற்புலவர்கள் இருந்ததைப் போலவே ஈழத்து இலக்கிய வரலாற்றிற்கு புதிய திசைகளை அனுபவங்களை பெண் போராளிகள் அளித்திருக்கின்றார்கள். மலைமகளின் 'புதிய கதைகள்' சிறுகதைத் தொகுதி முக்கியமானது. கவிதையிலும் பல பெண் போராளிகளின் கவிதைத்தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. அவற்றில் தேர்வு செய்யப்பட்ட 26 பெண் போராளி களின் 70 கவிதைகளை உள்ளடக்கி 'பெயரிடாத நட்சத்திரங்கள்' என்ற தொகுதி ஊடறுவால் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

நாளைய இந்த எழுச்சிக்காக
இன்று நீ எழுந்து வா
அதோ பார் உன்னை நோக்கி
துப்பாக்கியை நீட்டியபடி
இரத்த வெள்ளத்தில்
உன் உடன்பிறப்பு
பிடித்துக்கொள்
அவள் ஆயுதத்தை.
பின்பற்று அவள் சுவடுகளை.

(வானதி, பக் 67)

என்ற வரிகளில் பெண்களின் போர் ஈடுபாடும் அழைப்பும் வெளிப்பட்டு நிற்கின்றது.

'சான்றோன் எனக்கேட்ட தாய்'
அப்போது அது பழமொழி.
உனக்குத் தெரியுமா?
'மாவீரர் எனக் கேட்ட தாய்' இது
இப்போ நான் விரும்பும் புதுமொழி
அம்மா
வேதனையை குத்தகை எடுத்து
குனிந்திருந்த உன் தலை
அப்போ ஆனந்தக் கண்ணீரோடு
நிமிர்ந்து நிற்கும் ( ரூபி மார்க்கிரட், பக் 109)

என்ற வரிகள் சங்ககால உவகைக் கலுழ்ச்சியின் நீட்சியைச் சொல்கின்றன.

இவற்றில் சற்று மிகையுணர்ச்சி இருப்பதையும் ஏற்றுக்கொள்ளவே வேண்டும். பா.அகிலனின் சரமகவிகள் தொகுதியில் தாயுரைத்தாள் என்ற பகுதியில் ஐந்து கவிதைகள் இருக்கின்றன. அக்கவிதைகள் இன்னொரு தளத்துக்கு இட்டுச் செல்கின்றன. காணாமல் ஆக்கப்பட்ட மகன் குறித்த ஒரு தாயின் கதறல் கூரிய மொழியில் கவிதையாகி இருப்பதைக் காணலாம்.

எங்கேயென்று சொல்
இல்லையென்பதையாவது சொல்

வீங்கி வெடிக்கத் தயாராகிவிட்டதோர்
முதிய இதயத்தைக் காவமுடியாதென்னால் இனியும்

பிடி சாம்பராவது கொடு
என் பிதிரர்களின் மடியில்
கொட்டிவிடுகின்றேன் அவனை

நாளை என்னைத் தீயிடவும்
பிண்டமிட்டு பாதையிடவும்
இல்லையாரும் ஆயினும்
அவன் போய் உறங்கட்டும் நிம்மதியின் பேராற்றில்

(பக் 37)

வரலாறு எங்கும் பெண்மையின் குரல்கள் கேட்டுக்கொண்டே இருக்கின்றன.

# துணிவு கொள் தோழா!



தடையென்னடா தமிழா,
நீ தமிழனாயிருக்கும் வரை
முடிவென்னடா எமக்கு
முரசறைந்து யார் செப்பினும்
துணிவிருந்தால் போதும் தயங்காதே
மனதிலே உணர்ச்சி கொண்டு
செயலிலே பேரெழுச்சி அடைவாய்
தளராத மனத்துணிவே சரித்திரம் படைக்கும்
அதை நிதத்திலும் நிருபித்தவர் நாமடா!

வஞ்சனைச் சூதுகள் செய்திடும்
நயவஞ்சக ஓநாய்கள் கூட்டமும்
நீதிகள் நியாயங்கள் சரியுமென
நம்பும் சில நாசப்பேய்களின் கூட்டமும்
நடுநடுங்கி ஓடும் காலம் வரும் தோழா
அன்று எண்திசை எங்குமே ஒலித்திடும்
எம்மவர் எதிரொலியின் இடியொலி
எதிரிகள் சிரம் தனை கொய்யும் அது

துரோகிகளை துவம்சம் செய்யும்
காத்திரு காலம் பதில் சொல்லும் அதுவரை
விழித்திரு துணிந்து கணைதொடுப்போம்
மங்காத வீரனுக்கென்னடா சாவு தமிழன்
பணியாத வேங்கையே எனப் பறைசாற்று
ஆண்டாண்டே ஆயினும் ஆடிடும் சகுனி ஆட்டம்
ஓர் நொடியில் ஒழிந்தே போகும் கேளடா
தமிழா போற்றிடும் சரித்திரத்திற்கு
உயர் புகழுடையோர் நாமடா!

கிருஷ்ணராஜா சஞ்சீவன்



# மந்தையில் இருந்து பிரிந்த ஆடு!

ஆர்.பிரகாஷ்

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் முழுவதுமாக வெளியேறியுள்ளது. ஆம், சுமார் 50 மாதங்களாக இடம்பெற்றுக் கொண்டிருந்த இந்த நகர்வுகள் தற்போது முழுவதுமாக முடிவுக்கு வந்துள்ளன. கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி நள்ளிரவுடன் பிரிட்டனுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை என்றாகியுள்ளது. 2021ஆம் ஆண்டு முதல் நாளில் இருந்து பிரிட்டனும் ஐரோப்பிய ஒன்றியமும் நீ யாரோ, நான் யாரோ என்ற நிலைதான்.

**ஏன் பிரிந்தது?**

ஐரோப்பிய ஒன்றியம் என்பது ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள 28 நாடுகள் சேர்ந்த ஒரு மிகப்பெரும் அமைப்பு. இதில் ஒஸ்திரியா, பிரான்ஸ், ஜேர்மனி, பெல்ஜியம், கனடா, சுவிஸ், சுவீடன், டென்மார்க் உள்ளிட்ட நாடுகளோடு பிரிட்டனும் ஒரு உறுப்பு நாடாக இருந்தது. அரசியல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புகளுக்காக இந்த ஒன்றியம் ஏற்படுத்தப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்துக்கென தனி நாடாளுமன்றம் உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 19 நாடுகள் யூரோவைப் பொதுப் பணமாகப் பயன்படுத்துகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகள் புதிய குடியேற்ற மக்களை வரவேற்கின்றன. ஆனால், பிரிட்டனின் சில தலைவர்கள், புதிதாகக் குடியேறும் மக்களால் தங்களது கலாசாரம் மற்றும் பொருளாதாரம் பாதிக்கப்படுவதாகக் கருதினர். இதனால், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவது தொடர்பான பொதுவாக்கெடுப்பு 2016 ஜூனில் பிரிட்டன் மக்களிடையே நடத்தப்பட்டது. 71.8 சதவீத மக்கள் வாக்களித்தனர். அதாவது 51.9 வீத மக்கள் பிரெக்ஸிட்டுக்கு (பிரிட்டன் எக்ஸிட்) ஆதரவாக, அதாவது ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

**பதவியிழந்த பிரதமர்கள்**

2016 ஆம் ஆண்டு பிரெக்ஸிட்டுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்ததால் பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன் அந்தப் பதவியில் இருந்து விலகினார். புதிய பிரதமராக திரேசா மே பதவியேற்றார். இதையடுத்து ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறக்கூடாது, பிரெக்ஸிட் நடவடிக்கையை கைவிட வேண்டும் என்று கோரி பெண் தொழிலதிபர் ஜினா மில்லர் பிரிட்டிஷ் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கை 11 நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரித்து தீர்ப்பு வழங்கியது. இதில் 8 நீதிபதிகள், பிரெக்ஸிட் நடவடிக்கைக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் தேவை, இதுதொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தி வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தனர். இதர 3 நீதிபதிகள், நாடாளுமன்றத்தின் ஒப்புதல் தேவையில்லை என்று தீர்ப்பு வழங்கினர். பெரும்பான்மையான நீதிபதிகளின் கருத்துப்படி பிரிட்டன் பிரிவதற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் தேவை என்று தீர்ப்பிடப்பட்டது. இங்குதான் ஆரம்பமானது இடியப்பச் சிக்கல்.

உலக்உலா

**தோற்றுப்போன மே**

பிரெக்ஸிட் நடவடிக்கைக்காக பிரிட்டன் நாடாளுமன்றத்தின் கீழவை மற்றும் மேலவைகளில் ஒப்புதல் பெறவேண்டும். ராணி எலிசபெத் நாடாளுமன்றத்தின் தீர்மானத்துக்கு ஒப்புதல் வழங்க வேண்டும். பின்னர் ஐரோப்பிய நீதிமன்றம் அதற்கு அனுமதி வழங்கவேண்டும். இவற்றுக்கு இடையில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மிகப்பெரும் இழப்பீட்டுத் தொகையை பிரிட்டன் வழங்க வேண்டும். இவ்வாறான சட்டச் சிக்கல்களை இறுதிவரை திரேசா மேயால் எதிர்கொள்ள முடியாமல் போனது. பிரிட்டனில் வாழும் ஐரோப்பிய ஒன்றிய குடிமக்கள் தொடர்ந்து அங்கேயே வாழலாம் என்றும், வடக்கு அயர்லாந்து அயர்லாந்து கடல் எல்லை விவகாரத்தில் கடுமையான எல்லைக் கோட்பாடுகளை பின்பற்ற மாட்டோம் என்றும் அப்போதைய பிரதமர் தெரசா மே உறுதியளித்தார். எனினும் இவையெல்லாம் எடுபடவேயில்லை. நாடாளுமன்றத்தின் அனுமதியைக்கூட குறைந்தபட்சம் பெறாமல் பதவியில் இருந்து விலகினார் திரேசா மே.

**ஜோன்சனின் நகர்வு**

திரேசா மேயைத் தொடர்ந்து ஆட்சியமைத்த பிரதமர் போரிஸ் ஜோன்சன் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிவதா இல்லையா என்பது தொடர்பில் இன்னொரு வாக்கெடுப்பை நடத்தினார். ஆனால் பிரெக்ஸிட் வாக்கெடுப்பாக அல்லாமல் நாடாளுமன்றத் தேர்தல் என்ற போர்வையில் அது நடத்தப்பட்டது. இந்தப் பொதுத் தேர்தலில் எவரும் எதிர்பாராத வகையில் வெற்றிபெற்றார் பிரதமர் போரிஸ் ஜோன்சன். இதையடுத்து தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்த ஜோன்சன் நாடாளுமன்றத்தின் கீழவையிலும் மேலவையிலும் மிக மிக இலகுவாக பிரெக்ஸிட்டுக்கு ஒப்புதல் பெற்றார். ராணி எலிசபெத்தும் பிரிவுதான் முடிவு என்றார். ஐரோப்பிய ஒன்றியமும் தனது நடைமுறைகள் அனைத்தையும் முடித்த பின்னர் பிரிட்டன் பிரிந்து செல்லலாம். இனி முடிவு அதன் கைகளில் என்றது. இதன் தொடர்ச்சியாக பிரிட்டன் பிரெக்சிட்டை 2021ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிமுதல் நடைமுறைப்படுத்தும் என்று அறிவித்தது. தற்போது அதை நடைமுறைப்படுத்தியுள்ளது. தற்போது பிரிட்டன் ஒரு ஐரோப்பிய நாடு. ஆனால் ஐரோப்பிய ஒன்றிய நாடல்ல.ஐரோப்பிய மந்தையில் இருந்து பிரிட்டன் என்று ஆடு தனி வழியில் பயணிக்கத் தொடங்கிவிட்டது.

# அதிர்ஷ்டக்காரப்பிள்ளை

ஆர்.லயனல்



2020ஆம் ஆண்டு உலக அளவில் துரதிர்ஷ்டவசமான ஆண்டாக அமைந்துவிட்ட போதிலும் வெகு சிலருக்கு அது நன்மைசெய்யத் தவறவில்லை. அந்த வகையில் 2020ஆம் ஆண்டின் அதிர்ஷ்டக்காரப் பிள்ளைதான் நடராஜன். ஐ.பி.எல் தொடரில் சிறப்பாக விளையாடிய நடராஜன் இந்திய வீரர்களுக்கு வலைப் பயிற்சியில் பந்துவீசுவதற்காக ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இந்திய அணியில் இடம்பிடித்திருந்த வருண் சக்கரவர்த்திக்கு காயம் ஏற்பட அவரின் இடத்துக்கு நடராஜன் அணிக்குள் சேர்க்கப்பட்டார். ரி20, ஒருநாள் ஆட்டங்களில் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தி உலக அளவில் பேசுபொருளானார். டெஸ்ட் ஆட்டங்களில் நடராஜன் இடம்பிடித்திருக்கவில்லை. ஆனால் இந்தியாவுக்குத் திரும்பாமல் ஆஸ்திரேலியாவில் தொடர்ந்தும் தங்கியிருந்தார். டெஸ்ட் தொடரில் சமி, உமேஸ் யாதவ் இருவருக்கும் காயம் ஏற்பட்டதை அடுத்து நடராஜன் தற்போது டெஸ்ட் ஆட்டத்திலும் உள்வாங்கப்பட்டுள்ளார். எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்திலும் நடராஜன் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**'குடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்ச்சுக் கொண்டு குடுக்குமாம்'**

# வில்லியம்சன் 1

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான தரப்படுத்தல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஸ்மித்தைப் பின் தள்ளி முதலிடத்தைத் தனதாக்கினார் நியூசிலாந்தின் அணித்தலைவர் வில்லியம்சன். பாகிஸ்தான் அணிக்கு எதிரான அபாரமான சதத்தைத் தொடர்ந்து இந்த ஏற்றம் வில்லியம்சனுக்கு கிடைத்துள்ளது. சிமித் மூன்றாவது இடத்துக்குச் சரிந்துள்ளார். இந்திய அணியின் தலைவர் கோலி இரண்டாவது இடத்தில் உள்ளார்.

வில்லியம்சன் மட்டுமல்ல நியூசிலாந்து அணியும் டெஸ்ட்டில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது.

**'உயரப் பறக்கிறது கிவிக்குருவி**

# மஹேல இல்லாத டெஸ்ட் அணியா?

சர்வதேச கிரிக்கெட் சபை இந்த வாரம் சில முக்கிய அறிவிப்புக்களை வெளியிட்டது. இந்த அறிவிப்புக்களில் சில பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளன. அவற்றில் ஒன்றுதான் மஹேல தொடர்பான விடயம். தசாப்தத்துக்குரிய டெஸ்ட் அணியில் மஹேலவின் பெயர் சேர்க்கப்படவில்லை. ஆனால் டேவிட் வோர்ணருக்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவறானது என்று சுட்டிக்காட்டுகின்றனர் இலங்கை ரசிகர்கள். ஆனால், ஆரம்ப வீரராக மஹேலவைக் களமிறக்க முடியாது. வீரர்களின் நிலையைப் பொறுத்தும் அணித்தெரிவு அமைந்துள்ளது என்றும் சிலர் நியாயம் கற்பிக்கின்றனர்.

என்னதான் சொன்னாலும் மஹேல இல்லாத டெஸ்ட் அணியென்பது கொஞ்சம் நியாயமற்ற செயலோ என்பதுதான் பொதுவான ஐயப்பாடு.

**'உப்பில்லாப் பண்டமும் மஹேல இல்லா டெஸ்ட் அணியும்....'**

